பக்கங்கள் : பதினாறு+II

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 27 திங்கட்கிழமை (13.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 320

## குடாநாட்டில் நேற்றிரவு விமானம் பறந்ததா அல்லது பலாலியில் ஒத்திகை ஏதாவது நடைபெற்றதா?

யாழ்ப்பாணம், ஒக்.13

குடாநாட்டில் நேற்றிரவு 10.20 மணியளவில் திடீரென மின்சாரம் தடைப்பட் டது. மின்சாரம் நின்ற கையோடு கைத்தொலை பேசிகளும் செயலிழந்தன.

விடுதலைப்புலிகளின் விமானங்கள் குடாநாட்டில் ஏதோ ஓர் இடத்தில் தாக்குதல் நடத்தியிருக்கக் கூடும் என்று பரவலாகப் பேசப்பட்டது.

இராணுவப் பேச்சாளருடன் தொடர்பு கொண்டு இதுபற்றிக் கேட்டபோது -

நேற்றி நள்ளிரவு வரை தமக்கு அப்படி ஒரு தகவல் கிடைக்கவில்லை எனத் தெரி வித்தார்.

விமானத்தாக்குதலை எதிர்கொள்வதற்காக பலாலியில் ஒத்திகை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடும்என்றும் அவர் மேலும் கூறினார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## பெண்ணின் படத்தைக் காண்பித்து வெள்ளவத்தையில் நேற்றுத் தேடுதல்!

### தமிழ் இளைஞர்கள் 10 பேர் கைது!

கொழும்பு, ஒக்.13

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பயணம் செய்த வாகனத் தொடரணி மீது தாக்குதல் நடத்திய தற்கொலைக் குண்டுதாரி எனச் சந்தேகிக்கப்படும் பெண்ணின் படத்தை வைத்து வெள்ளவத்தையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் நேற்று சோதனை நடத்தினர். வீதியால் போவோர் வருவோரிடம் அந்தப் படத்தைக் காண்பித்த படையினர், "இவரைத் தெரியுமா?" என்று கேட்டு விசாரித்தனர்.

வெள்ளவத்தை காலி வீதி, கடற்கரை வீதி மற்றும் உட்புற வீதிகளில் உள்ள வீடுகளுக்குச் சென்ற பொலிஸார் சோத னைகளை மேற்கொள்ளாது குறித்த படத்தை மாத்திரம் காண்பித்து இந்தப் பெண்ணைத் தெரியுமா எனக் (16 ஆம் பக்கம்

# தமிழகத் தலைவர்களுக்கு நிலைமையை விளக்குவதில் கூட்டமைப்பினர் மும்முரம்

## கலைஞர் தலைமையில் நாளை சென்னையில் சர்வகட்சி மாநாடு

சென்னை, ஒக்ரோபர் 13

ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினை தமிழக அரசியலில் சூடுபிடித்திருக்கும் தற்போதைய சூழலில், அங்குள்ள பல கட்சித் தலைவர்களையும் சந்தித்து ஈழத் தமிழர்கள் இலங்கையில் எதிர்கொள்ளும் அவல நிலை குறித்தும் கள நிலைமைகள் பற்றியும் அவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர் என சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் பகுதியில் நேற்றிரவு வேட்டுச் சத்தங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.13

நல்லூர், கல்வியங்காட்டுப் பகுதிகளில் நேற்றிரவு 7 மணியளவில் திடீரென வேட் டுச்சத்தங்கள் கேட்டதால் அப்பகுதியில் பதற்ற நிலை நிலவியது.

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு பின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வல்லிபுரத்தில் ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.13

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந் தப் பெருந்திருவிழாவை ஒட்டி கோயில் சுற்றாடல் (16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே →
க.பொ.த. (சாதாரண தர)
பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள்
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (II)

## மத்தியஸ்தம் வகிக்க இந்தியா தயாரென்றால் அது குறித்து கூட்டமைப்பு புலிகளுடன் பேசும்

### சென்னையில் வைத்துச் சிவாஜிலிங்கம் எம்.பி.



கொழும்பு, ஒக். 13

இலங்கை விவகாரத்தில் மத்தியஸ்தம் வகிப்பதற்கு இந்தியா தயாராக இருந்தால் அது குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புலிகளுடன் பேசும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தற்போதுள்ள சிவாஜிலிங்கம் எம்.பி. இந்தோ ஆசிய செய்திச் சேவைக்கு வழங்கியுள்ள தொலைபேசி பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

"விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு (16 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் மீண்டும் ஓயாது வீசுகின்றது விடுதலைப் புலிகளுக்கான ஆதரவு அலை

## "இந்தியன் எக்ஸ்பிரஸி"ன் கருத்துக் கணிப்பில் தகவல்

சென்னை, ஒக். 13

இந்தியாவின் முன்னணி ஆங்கில நாளேடான "இந்தியன் எக்ஸ்பிரஸின்" ஞாயிறு பதிப்பு (சண்டே எக்ஸ்பிரஸ்) தமிழகத்தின் முக்கிய நகரங்களில் நடத்திய கருத்துக்கணிப்பில், தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்தியா நீக்கவேண்டும் என்று 51 வீதமான மக்கள் வாக்களித்துள்ளனர்.

அத்துடன், இலங்கை இராணுவத்தின் அரக்கத்தனமான - கண்மூடித்தனமான - காட்டுமிராண்டித்தனமான கொடூரமான தாக்குல்களைச் சந்தித்துவரும் ஈழத் தமிழர்களின் இன்னல்களைத் தீர்க்க இந்திய மத்திய, மாநில அரசுகள் மேலும் அக்கறைகாட்டவேண்டும்.

இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள ஈழத் தமிழர்களுக்கு உணவு, மருந்து, உடைகள் போன்றவற்றை உடனடியாக அனுப்பி உதவ வேண்டும். இதற்குத் தடங்கல்கள் ஏற்படுமானால் மத்திய அரசிலிருந்து தி.மு.க. விலக வேண்டும் - என்று பெரும்பாலானவர்கள் இந்தக் கருத்துக்கணிப்பில் (16 ஆம் பக்கம் பார்க்க)

## கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் நேற்று அதிரடிப்படை மீது தாக்குதல்

அம்பாறை ஒக். 13

அம்பாறை கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட விசேட அதிரடிப்படையினர் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடித்தாக்குலுக்கு இலக்காகியதில் அவர்களில் மூவர் உயிரிழந்தனர். மேலும் நால்வர் படுகாயமடைந்தனர் என்று புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத் துறைமுகத்தில் பணியாற்றும் இளைஞர்கள் மூவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஒக். 13

கொழும்புத் துறைமுகத்தில் பணியாற்றும் மூன்று தமிழ் இளைஞர்களை முகத்துவாரப் பொலிஸார் கடந்த வெள்ளியன்று சந்தேகத்தின் பேரில் கைதுசெய்திருக்கின்றனர்.

அம்பாறை, காரைதீவிலுள்ள சென்றல் வீதியைச் சேர்ந்த சந்திரமோகன் சஞ்சீர் (வயது - 29), மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள மாரியம்மன் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.பொன்னுச்சாமி மகேஸ்வரன்

(பிரதி அதிபர்) B.Sc.(Hons), Dip.in Education

யாழ்.இந்துக் கல்லூரியில் 35 வருடங்கள் சேவையாற்றி 17.09.2008 இல் ஓய்வு பெற்ற திரு.பொ.மகேஸ்வரன் அவர்கள் நேற்று (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை மணிவிழாக்கொண்டாடினார்.

அவர்களை பேரும் புகழும் பெருவழ்வும் பெற்று இல்லச்சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல நெட்டிலிப்பாய் பிள்ளையாரின் திருவருளை வேண்டி மனமார வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:
மருமக்கள்: M.P.புவிதரன், P.பரணி, P.கங்கா.

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில். (79188)


உங்கள் திருமுருகன் கொம் நெற்றில்
சகல விதமான கணனி உதிரிபாகங்களும் குறைந்த விலைகளுடன்......

**Your Best Chance**

2.0 GHz Dual Core Processor
Intel Chipset Board
1GB DDR 2, 160 GB Hard Disk,
DVD R/W
ATX Case with SMPS,
17" LCD Monitor, UPS
Keyboard & Optical Mouse,
Specker

1.8GHz Dual Core Processor
Intel Chipset Board
1GB DDR 2, 160 GBHard Disk
DVD R/W
ATX Case with SMPS,
15" CRT Moniter, UPS
Keyboard & Optical Mouse
Speaker

**Computer tables&Chairs**

Flash Drive-TDK, adata,Kingston
Mp3,Mp4 Players
Sunglass with Mp3 player
Printers, Scanners & Woofers



**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆக் சிகோஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)


## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்வி

### சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா

எம்முன்னே நீயில்லை
எமதுள்ளம் வேகிறது
கண்ணெதிரே வாராயோ
காலமெல்லாம் காத்திருப்போம்!

அப்பா, அம்மா,
சகோதரிகள், சகோதரர்,
சித்தி, சித்தப்பா,
மாமாமார் அனைவரும்.

இல.419, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(10ஆம் பக்கமும் பார்க்கவும்)

## மரண அறிவித்தல்

### திருமதி இராமசாமி முத்தம்மா



புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காடு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமசாமி முத்தம்மா நேற்று (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு இராமசாமியின் அன்பு மனைவியும் சிவநாயகி (Maths Teacher, Private Tuition), சிவகுமாரன் (Director/ Chief Engineer, Mahaweli Authority of Srilanka, Head office, Colombo - 10), சிவேந்திரராஜா (Work Supervisor, Municipal Council, Jaffna) ஆகியோரின் அன்புத் தாயும் மகேஸ்வரன் (Photographer, Barath Studio - Jaffna) , ஜெயந்தி (Colombo), ஞானலட்சுமி (Teacher, Kopay Christian College) ஆகியோரின் அன்பு மாமியும் கஜீபன் (Jaffna Hindu College), பகீசன் (Jaffna Hindu College) , துசானிகா, ஜோதிகா (Hindu Ladies College, Wellawatha, Colombo) , சஞ்ஜீவன் (Jaffna Hindu College) , தனீசன் (Jaffna Hindu Primary) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, துரையப்பா (பொலிஸ்), கனகரட்ணம் (பொலிஸ் சார்ஜன்ட்), சுந்தரலிங்கம் (இலிகிதர், நகரசபை, வவுனியா), சண்முகலிங்கம் (பொலிஸ் சாரதி), மாணிக்கவாசகர் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2008) திங்கட்கிழமை மு.ப.9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகச் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (79207)

## மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை பாசுபதனுக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.13

கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் தமிழ் மொழி மூலம் முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்க மகா வித்தியாலய மாணவன் தர்மலிங்கம் பாசுபதனுக்கு சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையினர் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தங்கப் பதக்கத்தை வழங்கிக் கௌரவித்தார். (203-207)

## அம்பன், புலோலியில் நெற்செய்கையாளருக்கு மானிய உரம் விநியோகம்

தொண்டைமானாறு, ஒக்.13

அம்பன், புலோலி ஆகிய கமநல சேவை நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களுக்கு மானியத்துக்கு வழங்கப்படும் உர வகைகள் இப்போது விநியோகம் செய்யப்படுகின்றன.

அம்பன் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு புலோலி கமநல நிலையத்திலும், புலோலிப் பகுதியைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களுக்கு கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடி உபநிலையத்திலும் உரம் விநியோகிக்கப்படுவதாக பெரும்பாக அலுவலர் எஸ்.உருத்திரேஸ்வரன் தெரிவித்தார்.

## வீதிக்குச் சமீபமாக ஊரி மண் அகழ்வு

கோப்பாய், ஒக்.13

கைதடி - நீர்வேலி இணைப்பு வீதிக்குச் சமீபமாக சட்டவிரோத ஊரி மண் அகழ்வு நடைபெறுகின்றது எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இருள் கவியும் வேளையிலும், விடிகாலைப் பொழுதிலுமே ஊரி மண் அகழ்வு நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வீதி அண்மையிலேயே செப்பனிட்டு புனரமைப்பு செய்யப்பட்டதால் எதிர்வரும் மாரிகாலத்தில் சிதைவடையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. (72)


## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 13.10. 2008 விநியோகிக்கப்படும்.

- ★ ராஜீவ்- நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ★ மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- ★ P.ரவி- சாவகச்சேரி.
- ★ சிற்றிபாங் ரேடேர்ஸ்- கல்வியங்காடு.
- ★ திருமகள் களஞ்சியம்- சிவலிங்கப்புளியடி.


## நீர்வேலியில் வீதி சேதம்

நீர்வேலி, ஒக்.13

நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கு செல்லும் வீதி புனரமைப்புச் செய்யப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியால் பெரும் எண்ணிக்கையில் பயணம் செய்யும் பொதுமக்களும் மாணவர்களும் இதனால் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

மாணவர்களின் போக்குவரத்து வசதி கருதி சம்பந்தப்பட்ட வீதியை புனரமைப்புச் செய்து தருமாறு பாடசாலைச் சமூகத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர். (203-224)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
13 ★ 06 ★ 1930

மறைவு
13 ★ 10 ★ 2006

திருமதி


### கந்தையா கனகம்மா

ஆலமரமாய் இருந்து அதன் - நிழலில்
எங்களைப் பாதுகாத்து வழிநடத்திய தாயே
என்றும் நீங்காத நினைவுடன் எங்கள் மனதில்
நிலைத்து நிற்பீர்கள்!

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

க.தர்மகுலசிங்கம் (மகன்)
17/10, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம். (சி/555409)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
25 06 1938

உதிர்வு
13 09 2008

அமரர்

### கிருஷ்ணர் ஏரம்பு


கடந்த 13.09.2008 அன்று சிவபதமடைந்த எமதுகுடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடிவந்து எமக்கு ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகளை தெரிவிப்பதுடன் இன்று (13.10.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

173, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### நல்லையா அரசரட்ணம் (அரசன்)



காரைநகர், வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும் பலகாடு ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது தோணிக்கல், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட நல்லையா அரசரட்ணம் நேற்று (12.10.2008 ) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தவமணிதேவியின் அன்புக் கணவரும் கோசலா, அரவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2008) திங்கட்கிழமை வவுனியாவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.யோகரட்ணம்
(யோகன் - சகோதரன்).

முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (79206)

### Dr.கந்தையா சந்திரசேகரம்



கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.கந்தையா சந்திரசேகரம் நேற்று முன்தினம் (11.10.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - ஆச்சிமுத்து தம்பதியினரின் அருமை மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சந்திரசிறியின் (லண்டன்) அன்புத் தந்தையாரும், திருமதி மங்கையர்க்கரசி விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற திருமதி கனகாம்பிகை மகேஸ்வரன் மற்றும் திருமதி வசந்தகோகிலா, ஜெகசோதி ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஞானசுந்தரம், திருமதி அருளம்பலம் சுகிர்தம்மா, பொன்னுத்துரை, திருமதி சிவசுப்பிரணியம் தவமணி மற்றும் நாகேஸ்வரி, நவரத்தினம், மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு இல்லத்தில் 11.10.2008 அன்று பி.ப. 3 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.ஜெயந்தி
(மருமகள்).

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (79210)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# 'மஹிந்த சிந்தனை'யின் சாதனை: கடன் வாங்கி அரச நிர்வாகம்!

வெளிநாட்டுக் கடன்களை இனிமேலும் வாங்குவதற்கு வகையற்ற இருபத்தியெட்டு உலக நாடுகளில் இலங்கையும் ஒன்று என அறிவித்திருக்கின்றது உலக வங்கி.

வெளிநாட்டுக் கடன்களை வாங்கி, வாங்கிக் குவித்து, திருப்பிச் செலுத்த வகை சொல்ல முடியாத இக்கட்டில் சிக்கியிருக்கும் - மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் ஆழ்ந்திருக்கும் - தேசங்களின் பட்டியலில் எதிர்பார்க்கப்பட்டபடி இலங்கைக்கும் இடம் கிடைத்திருக்கின்றது.

உலக வங்கி இந்த வாரம் வெளியிட்டிருக்கும் இந்த அறிக்கையின்படி இலங்கை தப்பிப் பிழைப்பதற்கு ஒரே மார்க்கம் வெளிநாட்டுக் கடன்களுக்குப் பதிலாக வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்வதுதான் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

அங்கீகரிக்கப்பட்ட தேசங்களிடமிருந்து நேரடியாகக் கடன்மீது கடன் பெற்று, அவற்றையெல்லாம் தனது தவறான பொருளாதாரக் கொள்கைகளினாலும், முறையற்ற ஆட்சி முறையாலும், தீர்க்க தரிசனமற்ற யுத்த வெறிப் போக்கினாலும் வீணாக்கி, நாட்டையே குட்டிச்சுவராக்கிவிட்ட கொழும்பு ஆட்சிப்பீடம், இப்போது கடன் பெறுவதற்கு புதிய வழிவகைகளை நாடுகிறது.

வழக்கமாக உதவி வழங்கும் நாடுகள் குறைந்த வட்டி வீதத்தில் நீண்டகால, தவணை அடிப்படையில் இலகு கடன் வசதிகளை வழங்கி வருவது தெரிந்ததே.

அவற்றையெல்லாம் தன் தவறான ஆட்சிப் போக்கினால் விழுங்கி, கபளீகரம் செய்து, ஏப்பம் விட்டுவிட்ட கொழும்பு, இப்போது அந்தக் கடன் நிலுவைகளைக் கட்டவும், புதிய செலவினங்களைச் சமாளிக்கவும், புதிதாக சர்வதேச வர்த்தக வங்கிகளிடமிருந்து உயர்ந்த வட்டி வீதத்தில், குறுகிய காலக் கடன்களை வாங்கி, நாட்டை மேலும் குட்டிச்சுவராக்க முயல்கிறது.

ஏற்கனவே, இவ்வாண்டில் சர்வதேச வர்த்தக வங்கிகளிடமிருந்து பல்லாயிரம் கோடி ரூபாவைக் கடனாக அறவிட்டுள்ள இலங்கை இப்போது மேலும் சுமார் ஆயிரத்து அறுநூறு கோடி ரூபாவை (15 கோடி அமெரிக்க டொலரை) வர்த்தகக் கடனாகவும் சுமார் மூவாயிரத்து இருநூறு கோடி ரூபாவை (30 கோடி அமெரிக்க டொலரை) கூட்டு ('சிண்டிக்கேட்') கடனாகவும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கும் இச்சமயத்தில்தான், வெளிநாட்டுக் கடன்களை இனிமேலும் பெறுவதற்கான வகையற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இருப்பது பற்றிய உண்மை நிலைமையை அம்பலப்படுத்தியிருக்கின்றது உலக வங்கி.

தனியார் மயமாக்கல் என்ற பெயரில் அரச சொத்துகளைத் தாராளமாக வித்துச்சுத்தி ஏப்பம் விட்டாயிற்று.

உலக நாடுகளிடம் கடன் கடனாய் வாங்கி வாங்கிக் குவித்து, முழு நாட்டையுமே கடனாளியாக்கி, நாட்டையே நடு வீதிக்குக் கொண்டு வந்தாயிற்று.

இனியும் கடன் வாங்கி, அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தும் நிலையில் நாடு இல்லை என்ற உண்மை நிலைவரத்தை உலக வங்கி அம்பலப்படுத்திய பின்னரும், அதியுயர் வட்டிக்குக், குறைந்த கால கடன் தவணையோடு, பெரும் கடன்களை வர்த்தகத் தரப்புகளிடமிருந்து வாங்கிக் குவிக்கும் எத்தனத்தில் அரசு முழு மூச்சாக ஈடுபடுகின்றது.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றி என்ற 'கரட்' துண்டை, தென்னிலங்கை மக்களாகிய குதிரைக்கு முன்னால் கட்டித் தொங்கவிட்டபடி, அதைக் காட்டியே தன்னுடைய ஆட்சிக் காலத்தை வெற்றிகரமாகக் கொண்டிழுக்க முடியும் என்று மனப்பால் குடிக்கும் 'மஹிந்த சிந்தனை' அரசு, அப்படி ஆட்சியைக் கொண்டிழுப்பதற்காகக் கடன்களையும் வாங்கிக் குவிக்கின்றது.

இந்த அரசுத் தலைமையின் மோசமான ஆட்சி முறைமை, நாட்டையே குட்டிச்சுவராக்கும் பொருளாதாரக் கொள்கைகள், ஊழல், முறைகேடுகள் மற்றும் யுத்த வெறிப் போக்கில் நாசமாகும் தேசத்தின் வளம் போன்றவை குறித்தெல்லாம் கவனிக்காமல் - சிந்திக்காமல் - தமிழர் தேசம் மீதான யுத்த வெற்றி என்ற மாயையில் மூழ்கிக் கிடக்கிறது தென்னிலங்கை.

இப்படித் தென்னிலங்கையை யுத்த வெற்றி என்ற மாயைக்குள் மயக்கிப் போட்டுவிட்டு, அடுத்த பல சந்ததிகளுக்கு நாட்டையும், மக்களையும் உலக நாடுகளிடமும் வர்த்தகத் தரப்புகளிடமும் நிரந்தரக் கடனாளிகளாக்கி அடிமைகளாக்கும் தந்திரோபாயத்தை முன்னெடுக்கின்றது இந்த ஆட்சித் தலைமை.

எது, எப்படிப் போனாலும் ஈழத் தமிழர்களின் தேசியப் பற்றுறுதியைச் சிதறடித்து, அவர்களைத் தென்னிலங்கையின் நிரந்தர அடிமைகளாக்கி விட்டால் போதும் என்ற பௌத்த - சிங்கள மேலாண்மைத் திமிரில் மூழ்கிக்கிடக்கும் தென்னிலங்கை மக்களுக்கு, இந்தக் 'கடன் வாங்கி நிர்வாகம்' நாட்டை எத்தகைய விபரீத நிலைக்குள் கொண்டுபோய் நிறுத்தப் போகின்றது என்ற உண்மை இப்போது புரியப்போவதில்லை. புரியும் போது நிலைமை எல்லை கடந்திருக்கும்; புரிந்தும் பயனில்லை என்ற கட்டத்தை அது தாண்டியிருக்கும்.

# எதிர்வரும் நாள்களில் புலிகளின் எதிர்ப்பு நினைத்ததைவிட வலுவுடையதாக இருக்கும்

**'சண்டே ரைம்ஸ்' களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் நேற்று ஞாயிற்றுக் கிழமை (12.08.2008) எழுதியிருந்த ஆய்வுக் கட்டுரையின் ஒரு பகுதி**



மேஜர் ஜெனரல்(ஓய்வுபெற்ற) ஜானக பெரேராவின் படு கொலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம் என்று அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. அந்த சம்பவம் நடப்பதற்கு இரு தினங்களுக்கு முன்னர் தான் அனுராதபுர நகரமும் அதன் சுற்று வட்டாரமும் பாதுகாப்புப் பரிசோதனைக்குள்ளாக்கப்பட்டிருந்தன. 4 ஆம் திகதி சனிக்கிழமை சிறிமா போதியில் நடைபெறவிருந்த சமய நிகழ்சியொன்றை ஒட்டியே இந்த சோதனைகள் இடம்பெற்றிருந்தன. அந்தச் சமய நிகழ்வின் போது இராணுவத்தின் பல பிரிவுகளதும் கொடிகள் வைக்கப்பட்டு பௌத்த சமயத் தலைவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டன. இராணுவத்தின் உயர் தலைவர்கள் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

அடுத்துவந்த நாள்களில் இம் மாதிரியான குண்டு தாக்குதல் நடக்கும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. இந்த நகரம் எவ்வளவு ஆபத்தான நிலையில் உள்ளது என்பதை இச் சம்பவம் எடுத்துக்காட்டியுள்ளது.

வன்னியில் கடும் சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் எல்லா இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக மீண்டும் மீண்டும் தெரிவிக்கப்பட்டு வந்த போதிலும் அனுராதபுரச் சம்பவம், நிலைமை எவ்வளவு பலவீனமாக வுள்ளது என்பதை எடுத்துக்காட்டுவ

## நிலைமைகளை நேரில் பார்த்து தகவல் வெளியிட அனுமதி

தாக உள்ளது.

இவ்வாறான தாக்குதல் ஒன்றை நடத்துவதாயின் கெரில்லாக்களுக்கு தமது உறுப்பினர்கள் தங்கியிருப்பதற்கான ஒரு பாதுகாப்பான வீடு தேவை. அங்கே வெடிமருந்துகளை சேகரித்து வைக்கவும் தற்கொலை அணிகலன்களில் அவைகளை பொருத்திக் கொள்ளவும் வசதி தேவை. முக்கியமாக கெரில்லாத் தலைவர்களுடன் தொடர்பு கொள்ளவும் பணிப்புரைகள் பெறவும் தொடர்பு சாதனங்கள் தேவை. இந்த வசதிகளைக் கொண்டுதான் அவர்கள் இயங்கி இருக்க முடியும்.

மேஜர் ஜெனரல் உறுப்பினராக இருந்துள்ள ஐ.தே.கட்சி அவரது படுகொலைக்குப் பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலை முன்னணி தான் காரணம் என்று குற்றஞ்சாட்டியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ள ஐ.தே.க.முக்கியஸ்தர்களை பொலிஸ் புலனாய்வாளர்கள் விசாரித்து வருகிறார்கள். இந்தச் சம்பவத்தின் சகல அம்சங்களும் விசாரிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை. மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா புலிகளின் தாக்குதல் பட்டியலில் இருந்துள்ளார் என்பதில் சந்தேகமில்லை. இரகசிய எச்சரிக்கைகளின் பின்னர் இது அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முக்கிய எதிர்க்கட்சியான ஐ.தே.க்வும் அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித் துள்ளமை குறித்து புலிகள் வட்டாரத்திலும் கவலை ஏற்பட்டிருப்பதாக கடந்த வாரங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதற்கு எண்ணெய் வார்ப்பது போல் இரண்டு நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. ஒன்று, ஐ.தே.கவின் அம்பாந் தோட்டை பிரதி

## வன்னி முன்னரங்க நிலைகளில் அல்ஜஸீரா தொலைக்காட்சி குழு

நிதி சஜித் பிரரேம தாச புலிகளுக்கு எதிராக அரசு எடுக்கும் நடவடிக்கைகளை ஐ.தே.கட்சி முழுமையாக ஆதரிப்பதாகக் கூறியிருந்தமை. இன்னொரு சம்பவம், கொழும்பு மாவட்ட நா.ம.உறுப்பினர் ரவி கருணாநாயக்க காயப்பட்ட இராணுவத்தினரை ஜயவர்த் தனபுர ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்திருப்பதுடன் அவர்களுக்குப் பரிசில்களையும் வழங்கியிருந்தமை. பத்திரிகையாளர்களும் அவருடன் சென்றிருந்தனர். இந்த விடயம் பத்திரிகைகளில் அதிக அளவில் பரப்புரையைப்பெற்றிருந்தது. நேற்றைய தினம் வவுனியாவின் ஐ.தே.க. அமைப்பாளர் மகேஷ் தவச்செல்வம் பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.'

அமைச்சர் சிறிசேனமீதான குண்டுத் தாக்குதலும் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மீதான தாக்குதலும் வன்னிக்கு வெளியிலான தமது நடவடிக்கைகளை புலிகள் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றன.

### கிளிநொச்சி இன்னும் 22 கிலோ மீற்றரில்

வன்னியில் இரண்டு முனைகளில் சண்டை தொடர்ந்து கொண்டிருக்கிறது. நாச்சிக்குடாவுக்கு வட மேற்கு பொதுவான பகுதியில் துருப்புகள் முன்னேறி தடுப்பணையொன்றைக் கடந்து சென்று மேலும் அதிக இடங்களைக் கைப்பற்றி உள்ளனர். அக்கராயனில் வட திசையில் படையினர் முன்னேறியுள்ளனர்.

கொக்காவில் முனையில் முன்னேறிய படையினர் கடும் எதிர்ப்புக்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஏ-9 பாதையை அடைந்து விட்டால் கிளிநொச்சியை நோக்கிய பிரதான வீதியில் நிற்பார்கள். கிளிநொச்சி இன்னும் 22 கிலோ மீட்டரில் இருக்கிறது.

கடந்த வாரம் அல் ஜஸீரா தொலைக் காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு குழுவினருக்குப் பாதுகாப்பு அமைச்சு வன்னி மேற்கில் முன்னரங்குப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதி வழங்கியது.

அந்தக்குழுவில்இருக்கும்போர்ஸ்லி என்பவர் வழங்கியுள்ள செய்தியொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

அநேகர் சொல்கிறார்கள் இது தான் முடிவின் ஆரம்பம் என்று. ஆனால் அவர்கள் இன்னமும் முடிக்கவில்லை. அவர்கள் பலமாக போரிடுகிறார்கள்.

போர்ஸ்லீடன்சென்றுள்ள இராணுவத்தினர் ...

'மீண்டும் அவர்கள் எங்கே போரிடுவது.இதுதான் கடைசிச் சண்டை. இதனால்தான் இவ்வளவு பலமாகப் போரிடுகிறார்கள்: சுவருடன் நெருங்கப்பட்டு விட்டார்கள். அவர்களுக்கு போக்கிடமில்லை.

பேர்ஸ்லி: இராணுவம் இதுதான் கடைசிச் சண்டை என்று நினைக்கலாம். ஆனால் புலிகளின் கருத்தை அறிவதற்கு எவராலும் போக முடியவில்லை. நாங்கள் இப்போது கிளிநொச்சியில் இருக்கின்றோம். தமிழ்ப் புலிகளின் இதயப் பகுதிக்கு சுமார் 15 கி.மி.தூரம். நாங்கள் இன்னும் கொஞ்சத் தூரம் முன்னே சென்றுள்ளோம். அழிந்த அடையாளம் கொண்ட சில கிராமங்களை எம்மால் பார்க்க முடிந்தது. சண்டை இடம்பெற்றுள்ள அடையாளங்கள் காணப்படுகின்றன. இராணுவம் இடங்களை கைப்பற்றி இருப்பது தெரிகிறது. ஆனால் எவ்வளவு இடம் என்பது தெரியவில்லை.

இப்போதுபோல அவர்கள் வேகமாக முன்னேறினால் புலிகள் முன்பு நினைத்தற்கும்அதிக எதிர்த்தாக்குதல்களை நடத்துவார்கள் போல் தெரிகிறது.

கிளிநொச்சியிலிருந்து இரண்டரை கி.மி.தூரத்தில் இராணுவம் இருப்பதாக கடந்த வாரம்தான் இராணுவப் பேச்சாளர், கூறியிருந்தார்

இறுதித் தூரம் எதுவாக இருந்த போதிலும் நகரப் பகுதியைக் கைப்பற்ற இராணுவம் மேலும் முயலுமானால் கடும் மோதல் வெடிக்கும் என்பது மட்டும் தெரிகிறது.

கடந்த வாரம் ஒட்டுசுட்டான், விசுவமடு கிராமங்களை [illegible]க்கி 10 சதுர கி.மீ.பரப்பளவு பிரதேசத்தை இராணுவ சூனியப் பகுதியாக அரசு அறிவித்தது. இடம்பெயர்ந்துள்ள சுமார் 250,000 மக்கள் இங்கு நகர் வார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

வன்னியில் பருவமழை ஆரம்பமாகி விட்டது. போர் நடக்கும் பகுதிகள் ஏற்கனவே அபாயகரமாகியுள்ளன. மிதிவெடியொன்றின் மீது காலை வைத்த சிப்பாய் ஒருவர் காய மடைந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதில் சிரமம் ஏற்பட்டது. (ப)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 26 | 14.10.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | பூரணை |
| | பி.இ. 02.08வரை |
| நட்சத்திரம் : | உத்தரட்டாதி |
| | மு.ப. 07.13 வரை |
| சுபநேரம் : | 10.32 -12.02 |
| ராகுகாலம் : | 03.02 -04.32 |

# வலி.வடக்கு கலாசாரப் பேரவையின் புகைப்படக் கண்காட்சி 3 தினங்களுக்கு

யாழ்ப்பாணம், ஒக்.13

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை நடத்தும் வர்ணப் புகைப் படக் கண்காட்சி நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு வலிகாமம் வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் கலை இலக்கிய, சமூகத் தொன்மையினை எடுத்துக் காட்டும் வகையில் 'யாழ்ப்பாணப் பெட்டகம்-1' என்னும் தலைப்பில் இக்கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இக் கண்காட்சியில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து மறைந்த ஆக்க, இலக்கிய, சமூக சேவைப் புலமையாளர்கள், கலைஞர்கள், ஆலயங்கள், பழைமை வாய்ந்த கட்டடங்கள், ஈழத் தமிழர்களின் பாரம்பரிய வாழ்வியற் பொருள்கள், சடங்கு முறைகள், பாரம்பரியக் கைத்தொழில்கள், தொல்லியல் முதுசங்கள், வரலாற்றுப் புகழ் மிக்க பாடசாலைகள் தொடர்பான புகைப் படங்கள் காட்சிப்படுத்தப் படவுள்ளன.

வலி.வடக்கு பிரதேச செயலர் சு.முரளிதரன் தலைமையில் நடை பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் கலந்து கொள்வார். (203-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

நவாலி மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளன.

பாடசாலை முதல்வர் இரா.வசந்தகுமார் தலைமையில் விழா இடம்பெறும்.

யாழ்.கொமர்ஷல் முகாமையாளர் லயன் ச.ரவீந்திரா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (202-95)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வரணி அ.த.க.பாடசாலை
மாணவன் செல்வன்
**பிரதீபன் நிதுஷன்**
அவர்கள் 2008 தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 123 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரை வாழத்துவதோடு, அவருடன் இப்பாடசாலை மாணவியான செல்வி ஜெயதங்கரூபன் லக்ஷனாவையும் (111 புள்ளிகள்) வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், நலன் விரும்பிகள்.

(சி/555408)

## பாராட்டி வாழ்த்து



யாழ்.பல்கலைக் கழக உயர் பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதியாக உயர்வு பெற்ற பேராசிரியர் கலாநிதி ச.சத்தியசீலன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல பதவிகளைப் பெற்றிட நல்வாழ்த்துகளை தெரிவிக்கின்றோம்.

**முதுகலை பிராந்திய திட்டமிடல் மாணவர்கள்.**
யாழ்.பல்கலைக்கழகம்.

(79076)

## மரண அறிவித்தல்

### நாகையா கந்தவேள்



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் ஸ்காபுரோவில் வசித்தவருமாகிய நாகையா கந்தவேள் அவர்கள் (11.10.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சே.க. நாகையா- கனகம்மா தம்பதியரின் மூத்த மகனும் பரமானந்தம்- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சுலோச்சனாவின் கணவரும் பகீரதன், பார்த்தீபன் ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற கண்ணன் மற்றும் விசாகன் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் பிரபாகரன் (U.S.A), இராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **Highland Funeral Home (3280 Sheppard Ave.E.)** இல் இன்று (13.10.2008) திங்கட்கிழமை மாலை 5 மணிமுதல் 9 மணிவரையும் மீண்டும் நாளை (14.10.2008) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் 9.30 மணி வரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை **Mt.Pleasant Cemetery (315 Mt.Pleasant Rd.)** இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி நாகேஸ்வரி சிவப்பிரகாசம், 66, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு.
சுலோச்சனா கந்தவேள் -416-269-2348,
விசாகன் (லண்டன்) - 011442085990724.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சின்னையா



கரணவாய் மேற்கு, வல்லியாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னையா அவர்கள் (10.10.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பெரியான்- பொன்னி தம்பதியரின் மருமகனும் பத்தினியின் அன்புக் கணவரும் சண்முகராஜா (சுவிஸ்), சசிலாதேவி (சுவிஸ்), சாந்தகுணராஜா, சற்குணராஜா (சுவிஸ்), மகாதேவி, மேகலாதேவி, மேகலா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கேஸ்வரி (சுவிஸ்), இளங்கோ (சுவிஸ்), ஜெயமதி, சுகிர்தா (சுவிஸ்), வசிகரன், ரமேஸ்வரன், ரமேஸ் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வல்லியாவத்தை,
கரணவாய் மேற்கு, கரவெட்டி. (79204)

## தவறிவிட்டது

கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை என்னும் முகவரியைச் சேர்ந்த சறோஜினி சுரேசன் என்பவரது தேசிய அ.அட்டை (466723386V) 08.10.2008 அன்று முனீஸ்வரர் ஆலயத்துக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சி.சத்தியபாமா, இல.105, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (79195)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு மிக அண்மையில் அமைதியான சூழலில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு.: 0214591438, 0776916929

## உடன் தேவை

5K.W தொடக்கம் 20K.Wவரையிலான மின் உற்பத்தி செய்யக்கூடிய ஜெனறேட்டர் இருப்பின் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.: 077 9352535. (79198)

## Personal Class

தரம் 1-12 வரையான மாணவர்களுக்கும் அத்துடன் Spoken English with Grammar கற்க விரும்பும் மாணவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: கோக்குவில் கிழக்கு, கோக்குவில். (79191)
தொ.பே.: 077-1372280.

## துரித கதியில் இடம்பெறும் மந்திகை பொதுச்சந்தையின் புதிய கட்டடப் பணிகள்

வடமராட்சி, ஒக்.13

மந்திகை பொதுச்சந்தைக்கென புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் தற்போது துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

சந்தைக் கட்டடம் அமைப்பதற்கென, சந்தைக்கு எதிர்ப்புறமுள்ள தனியார் காணியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகைகளில் சந்தை தற்போது இயங்கி வருகின்றது.

புதிய சந்தைக் கட்டடம் அமைப்பதற்கென முதல் கட்டமாக 9 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை வடக்கு மாகாண சபை ஒதுக்கீடு செய்துள்ளது. (202-236)

## திறந்த பல்கலைக்கழக விரிவுரைகள் சனியன்று

யாழ்ப்பாணம், ஒக்.13

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் ப.மே.க.டி.நிகழ்ச்சித் திட்டத்தின் விரிவுரைகள் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன. (202)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.13

பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கென மீள் பரிசீலனைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பெருமாள் கோயிலடியில் நடைபெறவுள்ளது என பட்டதாரிகள் செயற்குழு தெரிவித்தது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை- 2008 இல்
வலிகாம வலயநிலை-1ஆகவும்
யாழ்.மாவட்ட நிலை- 9ஆகவும்
159 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த
யா/சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி
செல்வி
**இரவிக்குமார் லோகிதா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், வசதிகளை வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர், அதிபர், ஆசிரியர்களுக்கும் வழிப்படுத்தி உதவிய பெற்றோர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

(79197)

## பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றோம்

**திரு.ஆ.குமரேசமூர்த்தி**
B.A.(Hons)., M.A. (Hons)., M.Ed., M.Phil., P.G.Dip.in Ed.(Merit)., Sp.Sc.Trd., SLPS.Class-I., Grad-II



யா/கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்திற்கு அதிபராக நியமனம் பெற்று வந்துள்ள திரு.ஆ.குமரேசமூர்த்தி அவர்களைக் கல்லூரித் தாய், வளம் பல கண்டு நலம் மிக உயர்ந்து எல்லாத்துதுறைகளிலும் தரணி புகழ் கல்லூரியாக்க அன்புடன் வருக வருக என வரவேற்கின்றாள்.

பழைய மாணவர்கள்
யா/ கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.
யா/ காரைநகர் இந்துக் கல்லூரி, காரைநகர்.

(79149)


## Advanced Diploma in Computer Hardware & Networking

விசேட பிரிவுகள் ஆரம்பம்
60% விசேட கட்டணச் சலுகை

OPPORTUNITIES
- Hardware Technician
- Customer Support Engineer
- Service Engineer
- Network Administrator
- Network Engineer




மேலதிக விபரங்களுக்கு....

ASIAN - CSC COMPUTER EDUCATION
No-2G, Stanley Road, Jaffna ☎ 021-222-5677


## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் பௌதிக ஆசிரியையும் பகுதித் தலைவருமான
திருமதி ஆனந்தி சிவகுமாரன்
அவர்களின் பாசமிகு தாய்
திருமதி
**இராமாமிர்தம் சண்முகசுந்தரம்**
அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் எமது ஆசிரியைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்.
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, வல்வெட்டித்துறை.

(79205)


'கல்வியே ஒளி, கல்வியே வழி'

## வாழ்வகம்

(விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்)

VAAZHVAHAM (HOME FOR VISUALLY HANDICAPPED)

Sabapathipillai Rd, Chunnakam.
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு வாழ்வக இல்லம் நடத்தும்

### திறன் வெளிப்பாட்டுக் கண்காட்சி

இடம்:- வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.
காலம்:- 15.10.2008 மற்றும் 16.10.2008
நேரம்:- காலை 8.30 - பிற்பகல் 4.00 மணி
பிரவேசம்: மாணவர்களுக்கு: ரூபா 10/= ஏனையோருக்கு: ரூபா 20/=

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்வக சமூகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் பிரச்சினைக்கான சர்வகட்சிக் கூட்டத்தை பா.ஜ.கவும் புறக்கணிக்கும் என கணேசன் அறிவிப்பு



சென்னை, ஒக்.13

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதிக்க கருணாநிதி தலைமையில் தமிழக அரசு கூட்டியுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தைப் புறக்கணிப்போம் - என்று பா.ஜ.கவும் அறிவித்துள்ளது.

மாநிலப் பா.ஜ.க. தலைவர் இல. கணேசன் இதுதொடர்பாக சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு-

ஈழத் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து இலங்கை இராணுவத்துக்குத் துணைபோகும் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. இதுகுறித்து அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்துவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

தனக்குள்ள அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி மத்திய அரசு உடனடியாகத் தனது கடமையைச் செய்யும்படி வலியுறுத்துவதை விட்டு அனைத்துக் கட்சிக் கூட்டம் மூலம் எந்தத் தீர்மானம் நிறைவேறினாலும் அது இலங்கை வாழ் ஈழத் தமிழர்களுக்கு எந்த வித நன்மையோ தமிழ் மக்களைத் திருப்திப் படுத்துவதாகவோ அமையப் போவதில்லை.

இலங்கை வாழ் தமிழர்கள் பாதுகாக்கப் பட வேண்டும் என்பதிலும், அவர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப் பட வேண்டும் என்பதிலும் பா.ஜ.க. உறுதியுடன் தொடர்ந்து குரல் கொடுக்கும். இருந்தாலும் செயற்படாத மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. தலைமையிலான தமிழக அரசு கூட்டும் இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என சனிக்கிழமை கூடிய மாநில உயர்நிலைக் குழுவில் முடிவு செய்யப்பட்டது - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை சென்னையில் நடக்கவுள்ள இக் கூட்டத்தைப் புறக்கணிக்கிறோம் என ஏற்கெனவே அ.தி.மு. க.வும், அதனுடைய கூட்டணிக் கட்சியான ம.தி.மு.கவும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈழத் தமிழருக்கு ஆதரவாக தமிழ்த் திரையுலகத்தினர் கறுப்புப்பட்டிப் போராட்டம்

சென்னை, ஒக்.13

ஈழத் தமிழர்கள் மீதான இலங்கை இராணுவத்தின் அரக்கத்தனமான, கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்து தமிழ்த் திரையுலகினர் நேற்று முதல் கறுப்பு பட்டி அணிந்து பணியாற்ற முடிவு செய்துள்ளனர்.

இலங்கையில் தமிழ் மக்களை விலங்குகளை விடக் கொடூரமான முறையில் கொன்று குவிக்கும் இலங்கை அரசிற்கு கடும் கண்டனத்தைத் தெரிவிப்பதற்காக தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், தமிழக இயக்குநர்கள் சங்கம், தென்னிந்திய நடிகர் சங்கம், தொழிலாளர் சம்மேளனம், விநியோகஸ்தர்கள் சங்கம், திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம் ஆகிய தமிழ்த் திரையுலகைச் சார்ந்த சங்கங்களின் கூட்டுக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

## ஈழத் தமிழரின் வீடுகளில் அடுப்புகள் எரிவதற்குப் பதிலாக வீடுகளே எரிகின்றன என்று வெதும்புகிறார் ஜெகத் ரட்சகன்

சென்னை, ஒக்.13

எப்போதும் இல்லாத அளவில், தற்போது ஈழம் எரிந்து கொண்டிருக்கிறது. சொந்த நாட்டிலேயே நம் தொப்புள்கொடி உறவுக்காரன், அகதிகளாக அடைக்கப்பட்டிருக்கிறான். ஈழத் தமிழனின் வீடுகளில் அடுப்புகள் எரிவதற்குப் பதிலாக, வீடுகளே எரிந்து கொண்டிருக்கின்றன - என்று ஜனநாயக முன்னேற்றக் கழகத் தலைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

எப்பொழுதும் இல்லாத அளவில், இப்பொழுது ஈழம் எரிந்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழலில் ஆறரைக் கோடி உலகத்தமிழர்களுக்கும், ஒற்றைத் தலைவராக திகழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர் வேங்கையென, சிங்கமென புறப்பட்டிருக்கிறார்.

ஈழத்தமிழனின் கண்ணில் துரும்பு பட்டால், தம் கண்ணில் இரும்பு பட்டது போல் துடிப்பவர் கலைஞர். 1958இல் இனப்படுகொலை ஈழத்தில் தொடர்ந்து நடந்ததால், தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, ஈழத்தமிழனின் பிரச்சினையைப் பட்டி தொட்டிகளில் எல்லாம் வெளிச்சம் போட்டுக் காட்டியவர். ஈழத்தமிழனின் இமைதுடித்தாலே இதயந்துடிக்கக் கூடியவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இப்பொழுது கிளிநொச்சியின் மீதும் வன்னிப்பகுதியின் மீதும், சிங்கள மிருகங்கள் நிகழ்த்தும் வான் வழித் தாக்குதலை நிறுத்துவதற்காக, மயிலை, மாங்கொல்லையில் நிகழ்த்திய உருக்க உரை, கல்லைக் கரைய வைத்தது. அதற்கு முன்னர் கவிஞர் கனிமொழி எம்.பி. மூலம் கொடுத்தனுப்பிய மடலைப் பார்த்து விட்டு, பிரதமர் மன்மோகன்சிங் அவர்களே மனம் உருகி, இந்தியத் தலைநகரில் இருக்கும் இலங்கைத் தூதுவரை அழைத்து எச்சரிக்கை செய்திருக்கிறார்.

அனைத்துலகத் தமிழ் மக்களும், ஏகோபித்து ஏற்கும் தலைமுறைத் தலைவா நீ வெட்டி வா எனச் சொன்னால் கட்டிவரக்கூடிய தம்பியர்கள் காத்திருக்கிறார்கள். நீங்கள் ஏந்திய தீபத்திற்கு எண்ணையாக எரியக் காத்திருக்கிறோம். சென்று வா தலைவா, வென்றுவா - என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

## ஈழத் தமிழரைக் காப்பதற்காக ஆட்சியை துறக்கவும் கருணாநிதி தயங்கக்கூடாது

### தொல்.திருமாவளவன் வேண்டுகோள்



காஞ்சிபுரம், ஒக்.13

ஈழத் தமிழர்களைக் காக்கும் பிரச்சினையில் ஆட்சியைத் துறக்கவும் முதல்வர் கருணாநிதி தயங்கக்கூடாது - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் பஞ்சமி நில மீட்புப் போராளிகள் நினைவு வீரவணக்கப் பொதுக்கூட்டம் ஸ்ரீ பெரும்புதூரில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடந்தது. கூட்டத்தில் திருமாவளவன் பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசியவை வருமாறு-

ஈழத் தமிழர்கள் இலங்கை இராணுவத்தால் விலங்குகளை விடக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்படுகின்றனர். அவர்களுக்கு மத்திய அரசு பயிற்சி அளித்து உதவி வருகிறது. இந்நிலை நீடித்தால் தமிழகத்தில் கொந்தளிப்புத்தான் உருவாகும். ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் அனைத்து தமிழர்களும் ஒருங்கிணைந்து குரல் கொடுத்தால்தான் தீர்வு காண முடியும் - என்றார்.

## தமிழகத்தில் மஹிந்தவின் கொடும்பாவி எரிப்பு விடுதலைச் சிறுத்தையினர் இருபது பேர் கைது

விழுப்புரம், ஒக். 13

ஈழத் தமிழர்களை அரக்கத்தனமாகப் படுகொலை செய்யும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கண்டித்து அவரது உருவப் பொம்மையை விழுப்புரம், திண்டிவனம் பகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் நேற்று முன்தினம் தீயிட்டு கொளுத்தனர்.

இதுதொடர்பான விவரம் வருமாறு-

விழுப்புரம் புதிய பஸ் நிலையம் அருகே செய்தித் தொடர்பாளர் தமிழேந்தி தலைமையில் 20 விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் கூடினர். இவர்கள் ராஜபக்ஷவின் உருவப் பொம்மையைத் தீயிட்டு கொளுத்தினர்.

இலங்கை அரசுக்கு இந்தியா எந்தவிதமான இராணுவ உதவியும் செய்யக் கூடாது என்று இவர்கள் வலியுறுத்தினர். இவர்களை விழுப்புரம் பொலிஸார் கைது செய்தனர்.

இதேபோல் திண்டிவனம் வட்டாட்சியர் அலுவலகம் முன் நகர செயலர் திலீபன் தலைமையில் கூடிய 17 விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் மஹிந்த ராஜபக்ஷவின் உருவப் பொம்மையை எரித்தனர். இவர்கள் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதேவேளை, தியாகதுருகம் பகுதியிலும் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் இலங்கை அரசையும், மஹிந்த ராஜபக்ஷவையும் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## ஈழத்தமிழர் பிரச்சினையில் உடன் தலையிடுமாறு மன்மோகனைச் சந்தித்து டி.ராஜா வற்புறுத்தல்



ஈழத் தமிழர் பிரச்சினையில் பிரதமரே நேரடியாகத் தலையிட்டுஇலங்கை அரசை வற்புறுத்த வேண்டும்.

- இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் டி.ராஜா நேற்றுமுன்தினம், பிரதமர் மன்மோகன் சிங்கை டில்லியில் சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இதுதொடர்பாக பிரதமரிடம் மனு ஒன்றையும் கொடுத்தார்.

அந்த மனுவின் விவரம் வருமாறு-

இலங்கையில் தற்போது நடந்துவரும் இராணுவத் தாக்குதலால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வீடிழந்து தவிக்கின்றனர். உணவு, மருந்து கிடைக்காமல் சிரமப்படுகின்றனர். உணவு, மருந்து கொடுக்க முன்வந்த ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள் உள்ளிட்ட தன்னார்வ அமைப்புகளை இலங்கை அரசு தடுத்துவிட்டது.

இலங்கையுடன் உள்ள நல்லுறவைப் பயன்படுத்தி, போரை முடிவுக்குக் கொண்டுவர அதிகபட்ச அதிகார அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

அங்குள்ள பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண வலியுறுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்கச் செய்யவேண்டும். இலங்கையில் போர் முனைப் பகுதியில் இந்திய அதிகாரிகள் 2 பேர் காயமடைந்தனர் என வந்த செய்திகளை இந்திய அரசு இதுவரை மறுக்கவில்லை. இலங்கை இராணுவத்துக்கு இந்தியா ஆயுத உதவி கொடுக்கிறதோ என்ற எண்ணத்தை இது உருவாக்குகிறது.

மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ இலங்கை இராணுவத்துக்கு இந்தியா உதவி செய்தால், அந்தப் போரில் இலங்கைக்கு இந்தியா உதவி செய்வதாகத்தான் கருதப்படும். அப்படி நடந்தால் அதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் கொடூரமாகக் கொல்லப்படுகிறார்கள். இதைத் தடுக்க இந்திய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இந்திய - இலங்கை இடையே பாக்குநீரிணைப் பகுதியில் கண்ணிவெடிகளை இலங்கை இராணுவம் அமைத்தபோதும் கூட இந்தியா அதைத் தீவிரமாக எதிர்க்கவில்லை. இதனால் கச்சதீவு ஒப்பந்தம் பற்றி தீவிரமாக மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இந்தியர்களின் பாரம்பரியமான மீன்பிடி உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் கச்சதீவு ஒப்பந்தத்தை மறு ஆய்வுக்கு எடுக்க வேண்டும். அவ்வாறு செய்வது மட்டுமே தமிழக மீனவர்களின் நலனைப் பாதுகாப்பதற்கான ஒரே வழி.

எனவே, பிரதமர் நேரடியாக இவற்றில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ஈழத் தமிழர்களுக்காக நாளை ஜெயலலிதா உண்ணாவிரதம்



சென்னை,ஒக்.13

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசனை நடத்த தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி நாளை அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டுகிறார்.

ஆனால் அதனை அ.தி.மு.க. புறக்கணித்து ஈழத் தமிழருக்கு ஆதரவாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா எம்.ஜி.ஆர். சமாதிக்கு முன் நாளை உண்ணாவிரதம் இருக்கப்போகிறார் - என்று அ.தி.மு.க.வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

கருணாநிதி கூட்டும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை புறக்கணிக்கும் ஜெயலலிதா. எல்லோரது கவனத்தையும் தன் பக்கம் திருப்ப ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்த முடிவு செய்திருக்கிறார்.

சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர்.முன் இப்போராட்டம் நடக்கிறது. இன்றைய உண்ணாவிரதப் போராட்டத்தில் கூட்டணிக் கட்சித் தலைவர்களும், மாநில நிர்வாகிகள் மற்றும் மாநில பேச்சாளர்களும் கலந்துகொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அனைத்துக்கட்சிக் கூட்டத்தை கருணாநிதி கூட்டுவதைக் கடுமையாக விமர்சித்து ஜெயலலிதா கடந்த சில தினங்களுக்கு முன் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் யுத்தமின்றிச் சமாதானம் மலர்ந்தால் தமிழகத்திலிருந்து மீண்டும் பயணிகள் கப்பல் சேவை

இராமேஸ்வரம், ஒக். 13

இலங்கையில் அமைதி நிலவும் சூழ்நிலை ஏற்பட்டால் இராமேஸ்வரம் - தலைமன்னார் ஊடான பயணிகள் கப்பல் போக்குவரத்து மீண்டும் தொடங்குவதற்கான வாய்ப்புள்ளது - என்று தமிழகக் கடல்சார் வாரியத்தின் மாநில துறைமுக அலுவலர் கேப்டன்.எஸ்.சாய்நாத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் வந்த இவர், அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினார். பின்னர் பாம்பன் மற்றும் இராமேஸ்வரம் துறைமுகங்களை ஆய்வுசெய்தார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு:-

கடல்சார் வாரியத்தின் நோக்கமே தொழில் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான்.

இலங்கையில் உள்நாட்டு கலவரம் ஏற்பட்டதால் 1984ஆம் ஆண்டு மத்திய உள்துறை அமைச்சகத்தின் உத்தரவுப்படி இராமேஸ்வரம் - தலைமன்னார் பயணிகள் கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. மீண்டும் அனுமதி அளித்தால் கப்பல் போக்குவரத்துத் தொடங்கப்படும்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கப்பல் 2005ஆம் ஆண்டு இராமேஸ்வரம் துறைமுகம் வருவதற்கு நாங்கள் அனுமதி அளித்திருந்தோம். ஆனால் இலங்கைக் கடற்படையினரின் அனுமதி கிடைக்காததால் காரைக்கால், புதுச்சேரி வழியாகச் சென்றது. இலங்கையில் நடந்துவரும் பிரச்சினையினால் இராமேஸ்வரம் கடல்பகுதிக்கு கப்பல்கள் வந்து செல்வதற்குத் தடை ஏற்பட்டுள்ளது. இராமேஸ்வரத்தில் பல்நோக்குத் துறைமுகம் அமைக்கப்பட்டு இலங்கையில் நடந்துவரும் பிரச்சினையும் முடிவுக்கு வந்தால் மீண்டும் தலைமன்னாருக்கு பயணிகள் போக்குவரத்துத் தொடங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

வெளிநாட்டுக் கப்பல்கள் வந்துசெல்லும் போது இராமேஸ்வரத்தில் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் - என்றார்.

## தூக்குக் கயிறுடன் மரத்தில் ஏறி இலங்கை அகதிகள் போராட்டம்

செங்கல்பட்டு, ஒக். 13

செங்கல்பட்டு இலங்கை அகதிகள் முகாமிலுள்ள பரமேஸ்வரன் (வயது - 33), ஸ்ரீகரன் (வயது - 30), சதீஷ்வரன் (வயது - 33) ஆகிய மூவர், தங்கள் மீதான வழக்கு விசாரணை முடிந்து 4 மாதம் ஆகியும் கியூப் பிரிவுப் பொலிஸார் தங்களை இலங்கைக்கு அனுப்பாமல் அலைக்கழிக்கின்றனர் என்று கூறி, நேற்றுமுன்தினம் [illegible] தூக்குக்கயிறு போல் உருவாக்கிய கயிறொன்றை எடுத்துக் கொண்டு, முகாமில் உள்ள மரத்தில் ஏறி, எங்களை இலங்கைக்கு அனுப்பாவிட்டால் தற்கொலை செய்வோம் என்று மிரட்டினர்.

இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. தகவலறிந்து கியூப் பிரிவுப் பொலிஸார், இன்ஸ்பெக்டர் சுதந்திரராஜன் மற்றும் அதிகாரிகள் வந்து அவர்களை சமாதானப்படுத்தினர். அப்போது விடாது மழை பெய்தது. இரவு வரை அகதிகள் பிடிவாதமாக மரத்திலேயே இருந்தனர். அவர்களை கீழே இறங்க வைக்கத் தொடர்ந்து பேச்சு நடந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி சிவானந்தன் - ஸ்ரீமதிலக்சுமி
தம்பதியரின் புதல்வன்

**சி.சிவகரன்**

(யா/நாவற்குழி மகா வித்தியாலயம்)
2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் 157 புள்ளிகள் பெற்று
மாவட்டமட்டத்தில் 13ஆம் இடத்தையும்
தென்மராட்சி வலய மட்டத்தில் 3ஆம்
இடத்தையும் பெற்று சித்தியடைந்தமையையிட்டு
அவரைப் பாராட்டுவதோடு அவரை நெறிப்படுத்திய அதிபர்,
ஆசிரியர்களையும் பாராட்டுகிறோம்.

வாழ்த்துபவர்கள்: அன்பு மாமா, சித்தி,
அண்ணா, அக்கா மற்றும் உறவினர்கள்.

நாவற்குழி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலைமகள் வீதி, நல்லூர் வடக்கில் வசிக்கும்
விக்னராஜா சத்தியதேவி தம்பதியரின்
செல்வப் புதல்வியும் யா/கல்வியங்காடு
இ.த.க.பாடசாலை மாணவியுமாகிய

**நிலுக்ஷிகா**

2008ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில்
பரீட்சையில் 133 புள்ளிகளைப் பெற்று
பாடசாலை மட்டத்தில் 2ஆம் இடத்தைப்
பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரது
கல்விக்கு ஊக்கமளித்த பாடசாலை அதிபர்,
ஆசிரியர்களுக்கும் வே.அன்பழகன் ஆசிரியருக்கும் ஆசிரியை றூபா
உதயராசாவிற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவர் மேலும் கல்வியில் உயர்வடைய
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளை வேண்டி நிற்கிறோம்.

வாழ்த்துபவர்கள்: அப்பா, அம்மா, அண்ணா, பேரன்,
பேர்த்தி, பெரியப்பாமார், பெரியம்மாமார் குடும்பம்,
சித்தப்பாமார், சித்திமார் குடும்பம்,
மாமாமார், மாமிமார் குடும்பம்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (79171)

## இதய அஞ்சலி



எங்கள் கல்வி நிறுவனத்தின் சிரேஷ்ட
ஆசிரியர் திரு.ச.சிறிக்குமார்
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி மகேஸ்வரி சண்முகம்**

அவர்கள் 10.10.2008 அன்று கொழும்பில்
சிவபதமடைந்த செய்தி எம்மை
துயரத்திலாழ்த்திவிட்டது. அவரது இழப்பினால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (79193)

எவர்ஷைன் கல்வி நிலையம்,
123, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

இயக்குநர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்**

பிறப்பு
18.04.1944

இறப்பு
27.09.2004

திதி:சதுர்த்தசி (13.10.2008)

நித்திரைக்குள் நீங்கள் மறைந்து நான்காண்டு ஆனதுவோ!
நாமிங்கு உற்ற துணையின்றி நலிவுற்று நிற்கின்றோம் ஐயா

150, நெடுங்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (79150)

குடும்பத்தினர்.

## முதலாமாண்டு நினைவஞ்சலி

மலர்வு
23
*
12
*
1933



உதிர்வு
25
*
09
*
2007

**அமரர் கனகசிங்கம் சதானந்தம் (ஆனந்தம்)**

(ஓய்வுபெற்ற வெலியாத்து உத்தியோகத்தரும், அகில இலங்கை சமாதான
நீதிவானும், ஸ்ரீ பூதேஸ்வர சிவன் தேவஸ்தான ஆதீன தர்மகர்த்தாவுமாவார்)

அன்புக்கும் பண்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
இமைப் பொழுதில் மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத்
தெய்வமே நீங்கள் இன்றெம்மைப் பிரிந்து ஓராண்டு கடந்தாலும்
உங்கள் அழியாத நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில்
அணையாத தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும். என்றென்றும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

நீங்காத நினைவுடன்:
அன்பு மனைவி,
பிள்ளைகள், குடும்பத்தினர்.

சிவன்கோயிலடி,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி. (79172)

## 'பொயற்றிக்கல் வேர்ல்ட்' ஆங்கிலக் கவிதைத் தொகுதி வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்,13

வதிரியைச் சேர்ந்த கலைமாமணி அண்ணாமலை மகாதேவனால் எழுதப்பட்ட 'பொயற்றிக்கல் வேர்ல்ட்' (POETICAL WORLD) என்ற ஆங்கிலக் கவிதைத் தொகுதி நூல் கடந்த 27ஆம் திகதி யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரியில் வெளியிடப்பட்டது.

பலாலி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியின் வருகை விரிவுரையாளர் எஸ்.பரராஜசிங்கம் தலைமையில் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் த.மோகன் வெளியீட்டுரையையும், யாழ்.பல்கலைக்கழக கல்வியியல்துறைப் பேராசிரியர் த.கலாமணி ஆய்வுரையையும் நிகழ்த்தினர். (204)

## திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஒருவர் விளக்கமறியலில்

மந்திகை,ஒக்.13

வீதியில் சென்ற சிறுவனின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை, புலோலி வடக்கிலே இடம்பெற்ற திருட்டு தொடர்பாகவே இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறுவன் தனது பிறந்த நாளன்று ஆலயதரிசனத்தை முடித்துக் கொண்டு உறவினரொருவரின் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோதே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட நபர் பருத்தித்துறை நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். நீதிபதி அவரை எதிர் வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (202-218)

## முன்பள்ளிகளில் "கைகழுவும் தினம்"

நவாலி,ஒக்.13

உலக கைகழுவும் தினம் நாளை மறுதினம் புதன்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

முன்பள்ளிகளில் பிள்ளைகளுக்கு கைகழுவும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும் தொற்றுநோய்க் கிருமிகளிலிருந்து பாதுகாக்கவும் இந்நாள் கொண்டாடப்படுகின்றது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சினால் சகல சுகாதாரத் திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (202-100)

## தென்னங்கன்றுகள் விநியோகம்

நவாலி, ஒக்.13

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாண திட்டத்தின் இரண்டாம், மூன்றாம் கட்டப் பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய தற்போது சங்கானை, கோப்பாய், சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவிலுள்ளவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

கரவெட்டி, பருத்தித்துறை ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 20ஆம் திகதி வரை தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. (202-100)

## நீர்வேலி சீயாக்காடு மயானத்தில் கழிவுகள் கொட்டப்படுவதால் பிரதேசம் அசுத்தமடைகின்றது

கோப்பாய், ஒக்.13

நீர்வேலி சீயாக்காடு மயானப் பகுதியில் பல்வேறு கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதி அசுத்தமடைவதாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பகுதியில் சிகைஅலங்கரிப்பு நிலையங்களிலிருந்து கொட்டப்படும் மயில், வாகன உதிரிப்பாக கழிவுகள் மற்றும் வாகனங் களை கழுவிய நீர் போன்றனவும் கொட்டப்படுகின்றன எனத்தெரிவிக்கப் படுகிறது.

இதனால் மயானப் பகுதியில் இறுதி சடங்குகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுவதுடன் அருகிலுள்ள வயல் நிலங்கள் பாதிப்புறுவதாகவும் சுட்டிக்காட்டப் படுகின்றது. (202-72)

## ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம் பாலஷம்ரட்ஸணா சமூக நலனோம்பு மன்றம் சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா

காலம் : நாளை (14.10.2008) செவ்வாய்க்கிழமை
இடம் : நல்லூர் திவ்ய ஜீவனசங்க மண்டபம்
நேரம் : காலை 9 மணி

தலைவர்:
**திரு.சி.வி.கே.சிவஞானம்**
முன்னாள் மாநகரசபை ஆணையாளர்,
இயக்குநர் பாலஷம் ரட்ஸணா சமூக நலனோம்பு மன்றம்,

பிரதம விருந்தினர்:
**கலாநிதி மா.வேதநாதன்**
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

**நிகழ்ச்சி நிரல்:**

1. மங்கல விளக்கேற்றல்
2. இறைவணக்கம்
3. வரவேற்புரை: திரு.ந.சத்தியபாலன், ஆசிரியர் (பாலஷம்ரட்ஸணா சமூக நலனோம்பு மன்ற இலக்கியத்துறைத் தலைவர்)
4. ஆசியுரை: நல்லை ஆதீன குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
5. அறிமுகஉரை: திரு.சபாரட்ணம் சுப்பிரமணியம் (இளைப்பாறிய மேலதிகக் கல்விப் பணிப்பாளர்) மேலதிக இயக்குனர், பாலஷம்ரட்ஸணா நலனோம்பு மன்றம்
6. வாழ்த்துரை : சிவஸ்ரீ சௌபாக்கிய குமாரக்குருக்கள் (பாலகதிர்காம தேவஸ்தானம்)
7. தலைமைஉரை
8. பிரதம விருந்தினர் உரை
9. பரிசில் வழங்கல்
10. நன்றியுரை: திரு.சி.பத்மராசா, (M.Phil.,) ஆசிரியர். (பாலஷம்ரட்ஸணா சமூக நலனோம்பு மன்ற இலக்கித்துறை செயலாளர்)

ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்
பாலஷம்ரட்ஸணா நலனோம்பு மன்றம்.
110/13 சட்டநாதர் கோயில் பின்வீதி, நல்லூர்.

## முதலாமாண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29
*
10
*
1927



மறைவு
25
*
09
*
2007

**அமரர் சின்னையா இராஜசிங்கம்**

திதி: வளர்பிறை சதுர்த்தசி

அன்புக் கரங்களுக்குள் அரவணைத்துப் பண்பும்
பாசமும் காட்டி கல்வியறிவூட்டி கண்ணியமான
வாழ்வுதந்து வாழ வைத்த அப்பாவே!
அன்பும் நேசமும் காட்டி அறிவுரைகூறி
உங்கள் கண்களுக்குள் எம்மை கட்டுப்பாட்டுடன்
வளர்த்த ஐயாவே! நீங்கள் ஒரு நொடியில்
சுற்றத்தை சூழ இருந்தவர்களை மறந்து ஆற்றொணாத்
துயர்தந்து பற்றுப் பாசம் மறந்து
பற்றற்றான் பதமலரடைந்து 12 மாதங்கள் இன்று
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆனைமுகத்தானை
ஆராதிக்கின்றோம் ஓம் பிரணவாயநம.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

40/1, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (78911)

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
22
01
1961



உதிர்வு
13
10
2006

நயினை

**அமரர் கிருஷ்ணசாமி சத்தியேஸ்வரன்**

கடமைக்காகச் சென்று,
காற்றினிலே கலந்த எம் அப்பாவே!
ஈராண்டு காலமாய் உம் நினைவில்
ஏங்கித் தவிக்கும் உங்கள் அன்புக் குழந்தைகள்
ஆசை மனைவியும் பெற்றோரும் உங்கள்
ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

தகவல்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர்கள்.

நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட சிறார்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சவால்களுக்குத் தீர்வுகாண நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ்.மாவட்டத்தில் சிறார்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் என்பவற்றுக்குத் தீர்வுகாண்பதற்கும், சிறுவர் உரிமையை மேம்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

* சிறுவர் தொடர்பான அடிப்படை உரிமைகள் பிரதேச மட்டத்தில் மேம்படுத்தல்.
* பெற்றோரை இழந்த சிறுவர், சிறுமியருக்கு கல்வி உதவி வழங்குதல்.
* வலது குறைந்த மாணவர்களுக்குக் கல்வியைத் தொடர்வதற்கு வேண்டிய வசதி வாய்ப்புகளை தாமதமின்றி ஏற்படுத்திக் கொடுத்தல்.
* சிறுவர் உழைப்பில் ஈடுபடுத்தப்படும் சிறார்களின் பிரச்சினைகளை இனம் கண்டு, கலந்துரையாடித் தீர்வுகாண நடவடிக்கை எடுத்தல்.
* பாடசாலைகளில் இயங்கும் மாணவர் வரவுக் குழுக்களை வலுப்படுத்தல்.
* கிரமந்தோறும் சிறுவர் கூட்டக் குழுக்களை அமைத்து சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல்.

இந்தக் குழுக் கூட்டத்தில் குடாநாட்டில் உள்ள ஐந்து கல்வி வலயங்களினதும் பணிப்பாளர்கள், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ்.மாவட்ட பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், மாவட்ட சிறுவர் நன்நடத்தை அதிகாரி மற்றும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(202-302)

## பாசுபதனுக்கு ஈ.பி.டி.பி.கட்சி சைக்கிள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.13

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இவ்வருடம் தமிழ்மொழி மூலத்தில் முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் வித்தியாலய மாணவன் த.பாசுபதனுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சிக் கிளையினர் சைக்கிள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

வித்தியாலய அதிபர் கு.சிவானந்தன் தலைமையில் கடந்த வெள்ளி நடைபெற்ற நிகழ்வில் வைத்தே இச் சைக்கிள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது .(202)

## முகாமைத்துவ சேவையில் பதவியுயர்வு பெற்றவர்களின் சம்பளங்கள் மீளாய்வு

யாழ்ப்பாணம்,ஒக்.13

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் (01.01.2004) வகுப்பு 1 அதியுயர் வகுப்பு(சுப்றா) ஆகிய பதவிகளுக்கு உயர்வு பெற்றவர்களின் சம்பளம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான சுற்று நிருபம் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திஸாநாயக்காவினால் வெளியிடப்பட்டுள்ளது.

இச்சுற்று நிருபத்தில் 01.01.2004 ஆம் திகதி அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டு, சேவையாற்றிக் கொண்டிருந்து, அதன்பின் ஓய்வுபெற்றவர்களின் ஓய்வுச் சம்பளமும் திருத்தியமைக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் சம்பளத் திருத்தம் காரணமாக 31.08.2008 ஆம் திகதி வரை நிலுவைச் சம்பளங்கள் செலுத்தப்படமாட்டாது என்றும், 01.09.2008 ஆம் திகதியிலிருந்து திருத்திய சம்பளங்களும் திருத்திய ஓய்வூதிய சம்பளமுமே செலுத்தப்பட வேண்டும் என்றும்- குறிப்பிடப்பட்டுள்ளது. (202-207)

## கோப்பாய் தெற்கில் திருடர்கள் நடமாட்டம்

கோப்பாய்,ஒக்.13

கோப்பாய் தெற்கு பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகப் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் இப்பகுதியில் உள்ள வீடொன்றினுள் புக முயன்ற திருடர்கள் வீட்டுக்காரர்களின் விழிப்புணர்வினால் முயற்சி கைகூடாமல் தப்பியோடினர். (202-72)

## ஜி.சீ.ஈ. பரீட்சைக்கான மாதிரி வினாப் பத்திரங்கள்

கோப்பாய்,ஒக்.13

கடந்த வருடம் தரம் 10 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தின்படி, இவ்வருடம் முதல் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான வினாப்பத்திர மாதிரிகள் அடங்கிய நூல் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூல்கள் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு எடுத்துவரப்பட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (202-72)

## புலோலி கிராமிய வங்கியில் பரிசூதிய சேமிப்பு

வடமராட்சி,ஒக்.13

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கி 'கூட்டுறவு நமது சொத்து' என்னும் பரிசூதிய சேமிப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

ஆயிரம் ரூபா கொண்ட பரிசூதிய சேமிப்பில் சான்றிதழ்களைப் பெறுவோர்களுக்கான சீட்டிழுப்பு வருடந்தோறும் நடத்தப்பட்டுப் பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

தேவையேற்படின் 5 வருடங்களின் பின்னர் சேமிப்புச் சான்றிதழை முடிவுறுத்தி பணத்தினை மீளப்பெற்றுக்கொள்ளலாம் என இப் பரிசூதிய சேமிப்புக் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-236)

## குடாநாட்டுப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு சமூக சேவைகள் அமைச்சர் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.13

குடாநாட்டுப் பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகின்றார்.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலில் இருந்து படிப்படியாக மக்களை இயல்பு நிலைக்கு கொண்டு வரும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் ஒன்றாக குடாநாட்டில் கல்வி அபிவிருத்தியுடன் தொடர்பான செயற்பாடுகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன என அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் மூலம் முன்னுரிமை அடிப்படையில் குடாநாட்டிலுள்ள 50 பாடசாலைகளுக்கு இலவசமாக சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளை வழங்கவும், நூல் நிலையங்களைக் கொண்ட 50 பாடசாலைகளுக்குப் பல்வேறு புத்தகங்களை வழங்கவும் அமைச்சர் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கணித வினாடி வினாப் போட்டி செயற் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ். மாவட்டத்தில் கணித பாட வினாடிப் வினாப் போட்டிகளைநடத்துவதற்கானசெயற் குழுக் கூட்டம் நாளை மறுதினம் புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். கல்வி வலய அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற உள் ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஏனைய வலயக் கல்விப் பணிப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் வலய ரீதியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார். (202)

## நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தின் புனரமைப்பு நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தை புனரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கென முதல் கட்டமாக குடும்பம் ஒன்றுக்குத் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தப் புனரமைப்பு நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுத்து வருகிறார்.

புனரமைப்பு நடவடிக்கைளுக்காக முதல் கட்டக் கொடுப்பனவு வழங்கப் பட்டுள்ளது. இரண்டாம் கட்டக் கொடுப் பனவு விரைவில் வழங்கப்படும் என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் தெரிவித்தார். (202)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## யாழ்.மாவட்ட மாணவர்களுக்கான கணித வினாடி வினாப் போட்டியை உப மாகாண மட்டத்தில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான கணித பாட வினாடி வினாப் போட்டியை மாகாண மட்டத்தில் நடத்துவதற்குப் பதிலாக உப மாகாண மட்டத்தில் நடத்துமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் யாழ். மாவட்ட வலய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

சமகால சூழ்நிலை காரணமாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்தார்.

வலய மட்டப் போட்டிகள் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன் நடத்தப்படவுள்ளன. சான்றிதழ்கள் மற்றும் பரிசில் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடும் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

போட்டியை நடத்துவதற்காக செயலணிக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டு பதவி ஆள் அணியினரின் பெயர் விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன் தலைவராக யாழ். வலய பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும், உப தலைவராக வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், மற்றும் செயலாளராக யாழ். கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் என்பவற்றின் பணிப்பாளர்கள், சகல வலயத்திலுமுள்ள கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கணித பாட ஆசிரிய ஆலோசகர்கள் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

(202-302)

## கடும் வரட்சியால் நெடுந்தீவில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு

நல்லூர்,ஒக்.1.3

தற்போது நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக நெடுந்தீவில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குழாய் நீர் விநியோகக் கிணறுகள் மோசமாக உவர்த் தன்மையடைந்துள்ளதால் அவற்றைப் பயன்படுத்த முடியாதுள்ளதாகப் பொதுமக்கள் கூறுகின் றார்கள்.

நெடுந்தீவில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் கஷ்டத்தைக் கருத்தில்கொண்டு சமூக சேவைகள் , சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பௌசர் மூலம் குடி தண்ணீர் கிணறுகளில் இருந்து குடி தண்ணீர் எடுத்து வந்து பொதுமக்கள், பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் பொருட்டு நெடுந்தீவு பிரதேச சபைக்கு நிதியுதவி அளித்துள்ளார்.

இதையடுத்து குடி தண்ணீர் தட்டுப்பாடான பகுதிகளுக்கு பௌசர் மூலம் நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (202-111)



கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் பிரதேச ஆசிரியர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற நிகழ்வில், கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா உரையாற்றுவதை முதலாவது படத்திலும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் ஆசிரியர்களுக்குப் பதக்கம் அணிவிப்பதை இரண்டாவது மூன்றாவது படங்களிலும் காணலாம்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை நான்காவது படத்தில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வல்லிபுர...
# தேர்த் திருவிழாச் சிறப்...

## பிரதம குருமார்களின் ஆசியுரை



ஞான விக்ஞான யோகம்.
(ஸ்ரீ மத் பகவத்கீதை)

காமைஸ் தைஸ் தைர் ஹ்ருத ஞன:, ப்ரபத் யந்தே ன் தேவதா: தம் தம் நியம மாஸ் தாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வய // 20 பற்பல ஆசைகளால் அறிவை இழந்தவர்கள், அவரவர் இயற்கையால் தூண்டப்பட்டு, அவ்வவற்றிற்கு ஏற்ற நியமத்தைக் கையாண்டு பிற தெய்வங்களைப் போற்றுகின்றனர்//

ஸ்ரீ வல்லிபுர சக்கர மாயவன் மெய்யன் பர்களே!

''அவனருளாலே அவன் தாழ் பணிந்து'' சர்வதாரி வருட ஸ்ரீ வல்லிபுர மாயவனது மகோற்சவமானது புரட்டாதி மாதம் 13 ஆம் நாள் திங்கட்கிழமை - கடந்த செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இன்றையதினம் இரதோற்சவமாகும். மகோற்சவமானது , இறைவனது பஞ்ச கிருத்தியங்களைக் (ஐந்தொழில்) குறிக்கும் கிரியைகளாகும். படைத்தல் கொடியேற்றத்துடன் தொடர்பான கிரியைகளாலும், காத்தல் சுவாமி வீதிவலம் வருவதன் மூலமும் உணர்த்தப்படுகின்றன.

இன்று 13.10.2008 திங்கட்கிழமை இரதோற்சவதினமாகும். இது ஆன்மாக்களின் பாவங்களை அழிக்கும்; அழித்தல் தொழிலைக் குறிக்கும் உற்சவ தினமாகும். பாவங்களை நீக்கி மக்களைப் புனிதப்படுத்தும் சம்ஹாரக உற்சவமாகும். மாயவன் தோன்றிய வரலாற்றை நினைவு கூருகின்ற கடல் தீர்த்தம் எனப்படுகின்ற கடலாடல் திருவிழா நாளைய தினம் கொண்டாடப்படும். வீங்கக் கடலலையில் தோன்றிய சரித்திரப்பிரசித்தி பெற்ற வல்லிபுரமாயவன், நாளைய தினம் தன்னுடன் கடலில் நீராடும் மக்களின் பாவங்களைப் போக்கியருள்வான்.



மறுநாள் ஒக்ரோபர் 15 ஆம் திகதி கேணித் தீர்த்தம் எனப்படுகின்ற அருளல் தொழிலைக் குறிக்கும் தீர்த்தத் திருவிழாவாகும். அன்று மாலை கொடியிறக்கமும் அதனோடு சம்பந்தமான கிரியைகள் மறைத்தல் தொழிலைக் குறிப்பிடும் திருவிழாவாகும்.

எல்லாம் வல்ல வல்லிபுர மாயவனது மஹோற்சவ காலமான இத்தகைய மகிமை பொருந்திய மிகப் புனிதமான நாள்களில் மாயவனை நினைவு கூர்ந்து மக்கள் எல்லோரும் நலமடையவும் நாட்டில் அமைதியும் ஆனந்தமும் பெருகி நாடு செழிப்படையவும் வேண்டி மாயவனின் ஆசிகள் அனைவருக்கும் கிட்ட வாழ்த்துகின்றோம்.

''சர்வே ஜனாகா சுகினோ பவந்து''

பிரம்மஸ்ரீ ச.க. சுதர்சனக்குரு J.P,
பிரம்மஸ்ரீ ச.க. புருஷோத்தமக்குரு J.P,
பிரதம குருமார்கள்.
ஸ்ரீ ஆழ்வார் பீடம், ஸ்ரீ வல்லிபுரக் கோயில்,
துன்னாலை, புலோலி.

## அறங்காவலர் சபைத் தலைவரின் செய்தி

ஸ்ரீ வல்லிபுரேசன் மகோற்சவ நாள்களின் முடிசூட்டு நாளாக அமைவது தேரோட்ட மகோற்சவம் ஆகும். தேரில், வீற்றிருந்து எம்பெருமான் பவனி வரும் காட்சியைக் கண்குளிரக் கண்டுகளிக்க பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இத்திருத்தலத்தில் ஒன்று கூடுவார்கள். வல்லிபுர மாயவனின் அருள் வேண்டி இந்தத் தேரோட்ட வைபவத்தில் வெவ்வேறு முறைகளில், காவடி எடுத்து, பிரதிட்டை செய்து, கற்பூரச்சட்டி ஏந்தி, பஜனை பாடிப் பெருமானை வழிபடுவது வழக்கம்.

இந்நாளில் இக்காட்சியைக் காண வாய்ப்புக் கிடைக்காதவர்கள், ஊடக வாயிலாக இத்திருநாளை நினைவு கூர்ந்து எம் பெருமானை மனத்தால் துதித்து எம்பெருமானின் அருள்பெறச் செய்வதே எமது இந்த நோக்கமாகும். இவ்விஷேட சிறப்பிதழ் இந் நோக்கத்தை நிறைவேற்றும் என்ற நம்பிக்கையுடன் இச் செய்தியை வழங்குகின்றேன்.


இ. அன்னலிங்கம்,
அறங்காவலர் சபைத் தலைவர்.

### நிம்மதி தருவான் நெடுமால்! திருமால்!!



ஆதிவாரமே, ஆனந்த நாராயணன்
விசேட தினமாமே! - ஆதவன்
உதிக்கும் திசையிலமர்ந்து
அனுதின மடிய வரைக்காப்பான்!
வங்கக் கடலலையிலுதித்தவன்
வருந்துயர் யாவும் களைபவன்!
வல்லிபுரமாயவன்எங்களது வேதனைகள்,
யாவையுமே -தீர்த்துவைப்பான்!
அமைதி வேண்டிப் பணிவோம்
அச்சுதனந்தன் கேசவன் நாராயணன்!
புரட்டாதிப் பூரணையில் கடலாடுவான்!
கூடியே நீராடும் எங்களது நெடுந்துயர் களைவான்!
நிம்மதி தருவான் நெடுமால்! திருமால்!

மாருதி, ஆவரங்கால்.



நாட்டில் சாந்தியும் சமாதா...


கூட்டுறவே நாட்டுயுயர்வு
நுகர்ச்சிப் பொருள்கள், பல்நோக்குச் சேவைகள் என்பவற்றை வழங்கும் கூட்டுறவு அமைப்பு.
கட்டைவேலி - நெல்லியடி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
நெல்லியடி - கரவெட்டி

பாண், பணிஸ், கேக் வகைகள்
தயாரிப்பாளர்கள்.
முருகன் பேக்கரி
அரசினர் வைத்தியசாலைக்குசமீபமாக,
மந்திகை.




கட்டடப் பொருள்கள்,
பெயின்ற் வகைகள்
விற்பனையாளர்
பாலன்
விற்பனை நிலையம்,
(பழைய C.W.E கட்டடம்)
பிரதான வீதி, பருத்தித்துறை.



பருத்தித்துறைக் கிளை
பருத்தித்துறை.

இப்போது புதிய சேமிப்புக் கணக்குகளை அறிமுகப்படுத்துகிறது. 'இலங்கையின் அதி சிறந்த நுகர்வோர் சேவைகளை வழங்கும் வங்கி' -ஏசியன் பேங்கர். சர்வதேசத்தர விருதுபெற்ற வர்த்தக வங்கியான ஹற்றன் நஷனல் வங்கி, ஆகக்குறைந்த ரூபா 50 000 ஆரம்ப வைப்புக்கு 12.5 வீதமும் ஆகக்குறைந்த ரூபா 100 000 ஆரம்ப வைப்புக்கு 14 வீதமும் வருடாந்த வட்டியாக வழங்குகிறது. அத்துடன் நீங்கள் எத்தனை தடவையேனும் பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளலாம்.
* இலவச இணைய வங்கிச்சேவை * இலவச SMS வங்கிச்சேவை
* 90 வீதம் வரை துரித கடன் வசதி * இலவச ATM அட்டை
அதி சிறந்ததிலிருந்தே அதி சிறந்ததைக் பெறமுடியும்.
கெபிடல் சேமிப்புக் கணக்குகள், பத்தும் விமன சீட்டிழுப்பிற்கு தகுதி பெறாது.
HNB, ஃபீச் ரேட்டிங் லங்காவினால் AA-(lka) ஆக தரப்படுத்தப்பட்டுள்ளது.
நெல்லியடிக் கிளை.
HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

தேசிய சேமிப்பு வங்கி - இலங்கை மக்களுக்கோர் வரப்பிரசாதம்
தேசிய சேமிப்பு வங்கியின் பென்சன் பிளஸ் (NSB Pension +) [illegible] 16 வயதுக்கு மேற்பட்ட எவராலும் 1000/- ஆரம்ப வைப்புடன் இக்கணக்கை ஆரம்பிக்கமுடியும். அத்துடன் இக்கணக்கை ஆரம்பிக்கும் வாடிக்கையாளருக்கு வங்கியால் 500/- கணக்கில் வரவு வைப்பதுடன் 500/- பெறுமதியான ரிதிரேகா சான்றிதழ் இலவசமாக வழங்கப்படும். இதனால், பெறுமதி மிக்க பரிசுகளை வழங்கும் சீட்டிழுப்புக்கு உரித்துப்பெறும் சந்தர்ப்பம் கிடைக்கும். அத்துடன் 55 வயதிற்கு பின் மாதாந்தம் ஓய்வூதியம் பெறும் தகுதியைப் பெறலாம். தேசிய சேமிப்பு வங்கியில் குதூகல சேமிப்புக் கணக்கு (NS.B. Happy Saving Account) இக்கணக்கை 1000/- ஆரம்ப வைப்புடன் 16 வயதுக்கு மேற்பட்ட எவராலும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஆரம்பித்து செயற்படுத்த முடியும். வைப்புத் தொகைக்கு ஏற்ப அதிகரித்த வட்டியாக 14.5 % பெறமுடியும். அத்துடன் 10 இலட்சம் ரூபா (1,000,000/-) வரையான இலவச ஆயுட் காப்புறுதி வசதி மற்றும் உலகளாவிய இலவச தன்னியக்க பணப்பரிமாற்ற அட்டை வசதிகள் அத்துடன் சுயதேவைக்கடன் வசதிகள் வைப்புக்களுக்கு எதிரான கடன் வசதிகளை இக் கணக்கின் மூலம் பெறமுடியும்.
NSB தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறை கிளை

புதிய கூரை அமைப்பபோருக்கு ஓர் நற்செய்தி!
* சகலவிதமான கூரை அமைக்க பயன்படுத்தப்படும் மரங்களுக்கான பாதுகாப்பிற்குரிய தரமான சொலிக்கனம்
* கூரைகளுக்கு மாத்திரமன்றி, மரவேலிகள், மரமின்கம்பங்கள் என்பவற்றிற்கு பயன்படுத்தப்படும் மரங்களுக்குமான பாதுகாப்பிற்குரிய தரமான சொலிக்கனம் (கருமைக்கறை) .
நீடித்த பாவனை தரச்சிறப்பு மிக்கது
லங்கா றொப்பி பிளாக்
* மரப்பாதுகாப்பு சொலிக்கனம் போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.
ஏக விநியோகஸ்தர்கள்:
ராஜன் எலக்றிக்கல்ஸ்
இல.34, பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே.: 021 226 3130.




உங்கள் வெற்றியே எமது இலக்கு
த பினான்ஸ் கம்பனி பி எல் சி, நெல்லியடி
உங்கள் நிலையான வைப்பிற்கு உயர்ந்த வட்டி வீதம், உயர்ந்த பாதுகாப்பு, காணி, வீடு, வாகனக் குத்தகைக் கடன்கள்,
THE FINANCE COMPANY PLC
No: 173, STANLY ROAD, JAFFNA. T.P 021 222 2310
த பினான்ஸ் கம்பனி பி எல் சி,
இல: 36, பிரதான வீதி, நெல்லியடி. T.P 021 226 4170
த பினான்ஸ் கம்பனி பி எல் சி,
இல: 19, கச்சாய் வீதி, சாவகச்சேரி. T.P 021 222 2035




KINE - 100CC 4 Stroke
செல்வ் அன்ட்,
கிக்ஸ்ராட்,
எலோவீல்றிம்,
டிஸ்பிறேக்

யாழ்.மண்ணிலே முதன் முறையாக அறிமுகப்படுத்தப்படும் KINETIC HONDA நிறுவனத்தின் தயாரிப்புகள்.
KINE-100CC, SAFARI - 4S-49CC, இந்திய யப்பான் கூட்டுத் தயாரிப்பு.

SAFARI 4S-49CC
4 Stroke செல்வ் அன்ட்,
கிக்ஸ்ராட், எலோவீல்றிம்



S. P. N. மோட்டோர்ஸ்
இல 145, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...புர ஆழ்வார் ஆலய
# ...ப்புமலர் 13.10.2008



## இலவல்லியின் மடியில் உதித்த வல்லிபுரத்தான்

முன்னொரு காலத்தில் இலவல்லி என்னும் பெயருடைய வைசியகுலப் பெண்ணொருத்தி திருமணமாகியும் மிகநீண்ட காலமாகப் புத்திரப் பேறின்றி மிகவும் மனம் வருந்தி, இதற்கான காரணத்தை அறியும் பொருட்டு பிருகு என்ற முனிவரிடம் சென்று அது குறித்து வினவினாள்.

• முனிவரும் அவளுக்கு "பெண்ணே! நீ முற்பிறப்பிலே ஒரு நாகபாம்பைக் கொன்றபோது அந்த நாகபாம்பு இட்ட சாபத்தினாற்தான் உனக்குப் புத்திரப்பேறு கிடைக்காமற் போயுள்ளது. இந்தச் சாபத்தினின்று நீ விடுபட வேண்டுமானால், நீ பரமசிவனை நோக்கி கடும் தவம் மேற்கொள்ளவேண்டும். உனது தவவலிமையால் சிவனும் உன் முன் தோன்றி உனது நோக்கத்தை நிறைவேற்றி சாபத்தையும் போக்குவார்" என்று உபதேசித்தருளினார்.

பிருகு முனிவரின் வாக்குப் பிரகாரம் அப்பெண்ணானவள் திவ்வியமான ஒரு நன்னாளில் பரிசுத்தமான இடத்தில் தவச்சாலை அமைத்து சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் செய்து வரலானாள்.

அவளின் தவ வலிமையால் சிவனும் அவள் முன்தோன்றினார். "பெண்ணே! உனது மனோபீஷ்டம் யாது?" என்று வினவினார். அப்பெண்ணும் மிக மகிழ்ந்து ஒரு விநாடி திகைப்படைந்து, பின் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு பலவாறு தோத்திரங்கள் செய்து துதித்து பிரதக்ஷணம் செய்து உபசாரங்கள் பலவும் செய்து நிலத்தில் வீழ்ந்து வணங்கி "அன்பர்களைக் காக்கும் பரம்பொருளே! சுவாமி! கொடிதிலும் கொடியதான நாகசாபத்தினால் புத்திரப் பேறற்றவளா னேன். அந்தக் கொடிய நாகசாபத்தை நீக்கி புத்திரபாக்கியத்தை எனக்கருள வேண்டும்" என்று கூறிப்பணிந்து நின்றாள்.

"சிறுமியே ! வருந்தாதே ! வல்லிபுரம் என்னும் பெயருள்ள இடத்திலே இலவல்லி என்னும் பெயருடன் பிறந்து வளருவாய்! அப்போது ஸ்ரீ திருமாலானவர் மச்ச வடிவந்தாங்கி உன்மடியில் பாய்ந்து, பின் உன்மடியிலே குழந்தை வடிவமுடையவராவார். அந்த வேளையிலிருந்து உனது நாகசாபமும் நீங்கும்" என்று சிவபெருமானும், திருவாய் மலர்ந்தருளினார்.

இலவல்லியும் மறுபிறப் பினையடைந்து திருமணமாகி வாழுங்காலத்தில், ஒருநாள் வங்கக் கடற் கரையில் மாலை வேளையில் பொன்மயமான மீனொன்று மீனவர் வலையில் சிக்கிக் கொள்ளாது குதித்துத் துள்ளி விளையாட்டுக் காண்பித்தது.

இந்த அதிசயச் செய்தியை அறிந்த பலபொது மக்கள் அவ்விடம் திரண்டனர். இலவல்லியும் அவ்வதிசயத்தைக் காண அவ்விடம் சென்று கரையிலே அமர்ந்திருந்தாள். திடீரென அம்மீனானது துள்ளியெழுந்து வந்து கரையிலே அமர்ந்திருந்த இலவல்லியின் மடி மீது வீழ்ந்தது. வீழ்ந்த மறு கணமே அழ கியதொரு ஆண்மகவாக மாறியது. துளசிமாலைகள் அணிந்த திருமண் தரித்தவராக ஒளி பிரகாசிக்கும் குழந்தையைக் கண்டதும் மக்களும் இலவல்லியும் மிகவும் பேரானந்தம் அடைந்து "கோவிந்தா, கோபாலா, மாயவா" எனக் கோஷம் செய்தவாறு தெய்வீகக் குழந்தையை துதித்து வணங்கலாயினர். அதன்பின் மக்களும், மீனவர்களுமாக இலவல்லியையும் குழந்தையையும், தூக்கிச் சுமந்துவந்துவந்து ஒரு மரநிழலில் குழந்தையையும் தாயையும் இறக்கிவைத்து இளப்பாறிக் கொள்ளும்வேளை மற்றொரு அதிசயம் நிகழ்ந்தது. இலவல்லியின் மடிமீதிருந்த குழந்தை மறைந்து, அங்கே ஒரு திவ்வியப் பிரகாசமான ஒளியையுடைய சக்கரம் இருந்தது. "பெண்ணே! இன்றுடன் உனது நாகசாபம் நீங்குகிறது. இந்த இடத்தில் முறைப்படியானதொரு ஆலயம் அமைத்து இந்தச் சக்கரத்தை பிரதிட்டை செய்து பூசைகள் செய்து வாருங்கள். இங்கே வழிபாடு செய்பவர்களின் குறைகள் யாவும் நீங்கும். நாகசாபம் போகும். அவரவர் மனோ பீஷ்ட்டங்கள் யாவும் நிறைவேறும்" என்று அசரீரி ஒன்று கேட்டது.

எனவே இலவல்லியும் அன்று முதல் நாகசாபம் நீங்கப் பெற்றவளாக மிக மகிழ்வுடன் வாழ்ந்திருந்தாள். பின்னாளில் அவளும் வல்லிபுரம் நாதன் பதம் சேர்ந்தாள்.

முறைப்படியான ஆலயம் ஒன்றையமைத்து, பூசைகள் முறைப்படி மேற்கொண்டு வழிபாடுகள் செய்து வரலாயினர். இதுவே வல்லிபுர மாயவன் தோன்றிய ஆரம்ப வரலாறாகும்.

இவ்வாலயம் இற்றைக்கு பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது என்றால் அது மிகையாகாது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்றோரின் காலங்களில் மிகவும் சிதைவடைந்திருந்த இந்த ஆலயம் பின் காலமாற்றத்தினால் எம்மவர்களின் - எமது முன்னோர்களின் பெரு முயற்சியினால் பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுப் பராமரிக்கப்பட்டது.

இவ் ஆலயத்தில் தற்போது தினமும் ஆறுகாலப்பூசைகள் நடைபெறுகின்றன. மகோற்சவ காலங்களிலும், மார்கழி மாதத்திலும் ஏழு காலப்பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரை வருடப் பிறப்பு, தைப்பொங்கல்,தைப்பூசம், ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, ஸ்ரீராம நவமி, வைகுண்ட ஏகாதசி, மாசி மாத வீம ஏகாதசி, தீபாவளி, நரகாசுரன் போர், விஷ்ணுவாலய தீபம், மாதந்தோறும் இருபட்சத்து ஏகாதசி தினங்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் என்பனவற்றில் இவ்வாலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெறுகின்றன. புரட்டாதி மாத பூரணை தினத்தன்றுதான் வல்லிபுர மாயவன் மீனாயுதித்த வரலாறை நினைவு கூரும் வண்ணம் கடல் நீராட்டு விழாவின் கணக்கிட்டு மகோற்சவம் நிர்ணயம் செய்யப்படுகின்றது.

சில ஆண்டுகள் இவ்வாலயம் பராமரிப்பின்றிப் போயிருந்த வேளைகளிலும் சமயக் கைங்கரியங்கள் குறைவின்றி நடைபெற்றுவந்தன.

1976 ஆம் வருடம் தர்மகத்தா சபையொன்று ஆலய கைங்கரியங்களை பொறுப் பேற்றதன் பின் மீண்டும் புத்தொளி பெற்று வருகின்றது. இராசகோபுரம் மேலைக் கோபுரம் மூன்று வீதிகளையுடைய ஆலய அமைப்பு போன்றன தற்போதைய வல்லிபுர மாயவனின் திருப்பணிகளின் அரும்பணிகளாகும். வல்லிபுர மாயவனின் அருட் கடாட்சம் அனைவருக்கும் கிட்ட மாயவனைப் பிரார்த்திப்போம்.

*"சர்வேஜனாகா சுகினோ பவந்து"*

ஸ்ரீ ஆழ்வார் பீடம், ஸ்ரீ வல்லிபுரக்கோயில், புலோலி.

...ந்தியும் சமாதானமும் கிடைத்து மக்கள் நலமுடன் வாழ வல்லிபுர ஆழ்வாரை அனைவரும் பிரார்த்திப்போமாக!


**கண்ணன் புத்தக நிலையம்**
பாடசாலை உபகரணங்கள், அழகு சாதனப் பொருள்கள், பாதணிகள் போன்றவற்றைச் சில்லறையாகவும், மொத்த மாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

**ஜெனா பாம்**
பால் மற்றும் பால் உற்பத்திப் பொருள்கள், சுத்தமான பசுநெய் விற்பனை நிலையம். ஒடருக்கு கேக் வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

**மெடிலாண்ட்**
ஆங்கில மருந்துகள் விற்பனையில் முன்னோடி நிறுவனம்.
ஆலடிச் சந்தி, மானிப்பாய்.
பிரதான வீதி, சங்கானை.

**க. கு. கந்தையாபிள்ளை அன்சன்ஸ்**
பல்பொருள் வாணிபம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**சிறீ நதியா நகை மாளிகை**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**சானுயா சிறிரூபா நகைமாளிகை**
கிளை நிறுவனம்:
**சிறி நதியா நகை மாளிகை**
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நுகர்வுப் பொருள்கள், கட்டடப்பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் உள்ளிட்ட பலசேவைகளை வழங்கிவரும்
**கூட்டுறவு நிறுவனம்**
புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

சகலவிதமான கணனி அச்சு வேலைகளுக்கு...
**நியூ எஸ்.பி.எம். கணனி பதிப்பகம்**
விநாயகன் முதலியார் றோட், பருத்தித்துறை.

தரமான தங்க நகைகளை பெற்றிட நாடவேண்டிய இடம்
**மைதிலி நகைமாடம்**
89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**யாழ்.மைதிலி ஜுவெலர்ஸ்**
159,*Sea Street, Colombo - 11.*

கண்பரிசோதித்து மூக்குக் கண்ணாடிகள் பெற்றுக்கொள்ளவும், பல்கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப்போட்டுக் கொள்ளவும் ஒரே இடம்.
**நிலா முக்குக் கண்ணாடி நிலையம்**
பிரதான வீதி, நெல்லியடி.
பதிவு இல: KVD/486

சகலவிதமான புடைவை வகைகள் மற்றும் ஆடைகளை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள...
**யசோ ரெக்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி.

பாடசாலைப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பி வகைகள், காகிதாதிகள், எழுதுகருவிகள் அனைத்துக்கும்.
**சிதம்பரப்பிள்ளை பொத்தகச் சோலை**
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே:- 226 3223

சகலவிதமான குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், மதிய உணவு வகைகளுக்கு...
**லவ்லி கூல்பார் அன் றெஸ்ரோறன்**
பிரதான வீதி, நெல்லியடி.

விலையில் மலிவு, தெரிவில் நிறைவு. காலத்திற்கேற்ப அனைத்து வயதினருக்குமான அனைத்து விதமான உடுபுடைவைகளைக் கொண்ட நிறுவனம்.
**செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை**
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே:- 226 3238

சைக்கிள் உதிரிப்பாகங்கள், கட்டடப் பொருள்கள், மின் உபகரணங்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.
**வே.மனோகரன்**
சாவகச்சேரி வீதி, மந்திகை.

போட்டோ பிரதி, கணனி வேலைகள், பாடசாலை உபகரணங்கள், பத்திரிகைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள.
**கனன் போட்டோக் கொப்பி சேர்விஸ்**
பிரதான வீதி, பருத்தித்துறை.

சுத்தமான சுவையான காலை உணவு, சிற்றுண்டி, குளிர்பான வகைகளுக்கு.
**பிரியங்கா உணவகம்**
சந்தைக்கு அருகில், சாவகச்சேரி வீதி, மந்திகை.

சகலவிதமான புகைப்படங்கள் பிடித்துக் கொள்ள தனித்துவமான நிறுவனம்.
**குகன் ஸ்ருடியோ**
இரண்டாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

1027 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 08 24 27 43

10-10-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 500106865 - 500128155

ஜக்பொட் பரிசு ரூபா. 3,043,250/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 227,357 | 20/- | 4,547,140/- |
| 2 இலக்கங்கள் | 20,971 | 40/- | 838,840/- |
| 1 இல. + லக்கினம் | 20,633 | 60/- | 1,237,980/- |
| 2 இல. + லக்கினம் | 1,845 | 200/- | 369,000/- |
| 3 இலக்கங்கள் | 567 | 1000/- | 567,000/- |
| 3 இல. + லக்கினம் | 36 | 10,000/- | 360,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,043,250/- | - |
| மொத்தம் | | | 8,519,960/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 271,417 | | 9,019,960/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,058,850/-

தொடர் இலக்கம் 400109600 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஒக்டோபர் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கண்டி | 500107771-1-13 |
| கேகாலை | 500110811-0-15 |
| கம்பஹா | 500117516-9-17 |
| நுவரெலியா | 500113511-1-13 |
| மட்டக்களப்பு | 500122197-4-41 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


# அபிவிருத்திச் சங்கங்களை மேம்படுத்த நடவடிக்கை

கோப்பாய், ஒக்.13

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் இயங்கும் மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்கென குறிப்பிட்ட சங்கங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கையை பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மேற்கொண்டு வருகின்றார். (202-72)

## புத்தூர் கிழக்கு முன்பள்ளி புனரமைப்பு

கோப்பாய், ஒக்.13

புத்தூர் கிழக்கு விக்னேஸ்வரா முன்பள்ளி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் வலி.கிழக்குப் பிரதேச சபையால் இந்த முன்பள்ளி புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த முன்பள்ளி 2006ஆம் ஆண்டில் ஏற்பட்ட மினி சூறாவளியால் பெரும் சேதப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(202-72)

## தென்மராட்சிப் பிரதேச உதவிச் செயலர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.13

தென்மராட்சிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் (நிதி) செ.மனோகரன் வவுனியா சுகாதாரத் திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இவரின் இடத்திற்கு திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய தயாளினி தங்கராசா இடமாற்றம் செய்யப்பட்டு கடந்த 29 ஆம் திகதி தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (202- 207)

## புற்றளை ச.ச.நிலைய அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

மந்திகை, ஒக்.13

தென் புலோலி புற்றளைச் சனசமூக நிலைய அபிவிருத்திக்கென 'கமநெகும' திட்டத்தின் கீழ் 3 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பிரதேச செயலக வட்டாரம் தெரிவித்துள்ளது.

இச் சனசமூக நிலைய நிர்மாண வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் கிராம மக்களும் இச்சனசமூக நிலைய நிர்மாணத்துக்கான நிதி உதவிகளை வழங்கியுள்ளனர். (202-218)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.13

ஸ்ரீ பாலகதிர்காம ஆலய பால ஷம்ரட்ஸணா சமூக நலனோம்பு மன்றம் நடத்திய சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் இயக்குநர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் கலந்து கொள்வார். (202)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.13

சிவஸ்ரீ முருகுப்பிள்ளை (மௌனகுரு) கடவுள் சுவாமிகளின் மகாசமாதி குருபூசை இன்று திங்கட்கிழமை மறவன்புலோவில் அமைந்துள்ள சுவாமிகளின் சமாதி குரு பீடத்தில் நடைபெறவுள்ளது. (202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்குமுதல் போயா ஆன்மீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (202)

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு, உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைதிருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா [illegible]

# 17 ஆம் வருட நினைவு நாள்



திருமதி
ஞானம்மா
இம்மானுவேல்

தோற்றம்
17.03.1935

மறைவு
13.10.1991

எங்கள் அன்புத் தெய்வமே அம்மா!
என்றும் புன்னகை தவழும்
தங்களின் திருவதனத்தை
இன்றும் எம்மால் மறக்க முடியவில்லையே.

(79144)

க.நவரத்தினம்(மைத்துனர்),
இல.4, கோயில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

அன்புடன் நினைவு கூரும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும் உறவினர்.

# 23ஆவது வருட நினைவுச் சுடர்

அமரர்
தம்பிப்பிள்ளை
திருச்செல்வம்
(முன்னாள் கிராமசேவையாளர்,
ஐயா கடை, மீசாலை)



அன்னை மடியில்:
05.10.1934
இறைவன் அணைப்பில்:
13.10.1985
திதி: 28.09.2008

நீங்கள் எம்மைப் பிரிந்து மறைந்து இன்றுடன்
23 வருடங்கள் ஓடிவிட்டன. நீங்கள்
எம்முடன் வாழ்ந்த காலங்கள் எங்களுக்கு
பொற்காலமாகும், நற்காலமாகும்.
கடந்த காலம் எக்காலத்திலும் திரும்பிவரப் போவதில்லை.
போனது போனதுதான். மறைந்தது மறைந்ததுதான்.
ஆனாலும் நீங்கள் எம்மை வாழவைத்து
மகிழ்வித்த காலத்தில் விட்டுச் .
சென்ற ஞாபகங்கள் ஏராளம் ஏராளம்.
ஒவ்வொரு ஞாபகச் சின்னமும் ஒவ்வொரு கதை சொல்லும்.
அவற்றுள் உங்கள் திருமுகத்தை தினமும் காண்கின்றோம்.
கவலைகளை மறந்து விடுகின்றோம்.
உங்களை எங்களால் மறக்க முடியாது.
மறக்க மாட்டோம் மறவோம் மறவோம் மறவோமே!


உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல எமது சுப்பச்சி மாவடிப் பிள்ளையாரை வேண்டுதல் செய்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி யோகேஸ்வரி திருச்செல்வம்,
தமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.
(சி/555074)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரர்கள், சகோதரி, உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

# பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி

உயர்திரு.
க.குலசேகரம்பிள்ளை
(சமாதான நீதிவான்)



தோற்றம்: 30.08.1926
மறைவு: 14.10.1997
திதி: சதுர்த்தசி

வல்லமைகள் சேர்ந்திடவே-
வாலிபனாய்க் கண்ட முகம் ஒன்று
கல்யாணக் காலமதில்-
காதல் மனையாளைக் கண்டு களித்த முகம் ஒன்று
மக்களைப் பெற்ற மமதையிலே-
மகிழ்ச்சியிலே மனம் கனிந்த முகம் ஒன்று
மருமக்களை மாண்புடனே தேர்ந்தெடுத்து-
மக்களாய் மனம் கொண்ட முகம் ஒன்று
சகோதரரை சகோதரியை சமமாக்கி-
சாலச் சிறப்பித்து சந்தோசம் கொண்ட முகம் ஒன்று
சொந்தத்தை சுற்றத்தை-
சொகுசாக வாழவைத்து சுகம் கண்ட முகம் ஒன்று
வயராரை உரியோரை தொழில் பெற்று-
உயர்ந்திடவே உயிர் பிழிந்து உழைத்த முகம் ஒன்று
பேரர் பேத்தியரை பூட்டர் பூட்டியரை-
பேணிப் பேரின்பம் கண்ட முகம் ஒன்று
பட்டங்கள் பதவிகள் பல பெற்றும்-
உண்மைத் திறனுடனே உழைத்த முகம் ஒன்று
வள்ளலாய் வாழ்ந்து பள்ளிகள் கோயில்கள்-
பல கோலி கொள்ளலாம் இன்பம் கண்ட முகம் ஒன்று
பத்துமுகம் காட்டுதம்மா சித்து விளையாட்டு அன்று
பத்தோடு பதினொன்று பாசமுகம் காட்டுதம்மா இன்று
அத்தோடு ஆயிரம் அழகுமுகம் காண்போம்
விழுபனையாள் அருளால் நின்று.

தற்காலிக முகவரி:
மானிப்பாய் றோட், உரும்பிராய்.

நிரந்தர முகவரி:
பழமுதிர் சோலை, நாகர் கோயில் றோட்,
எழுதுமட்டுவாழ்.

குடும்பத்தினர்.

(79181)

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா

பிறப்பு
22.10.1978

இறப்பு
13.10.1998

நேசம் மிகுந்த எங்கள்
நெஞ்சத் தாமரையே!
பாசம் மாறாத எங்கள்
பாச மலர்க்கொடியே!
எங்கள் வானத்தில்
நின்று மின்னும் தாரகையே!
எங்கள் இல்லத்தில்
எந்நாளும் முதல்மகளே!
பத்தாண்டு காலம்
ஆனாலும் என்னம்மா!
அன்பு குறைவதில்லை
ஆசைமுகம் மறைவதில்லை
நெஞ்சு கனக்குதம்மா!
நீள்மூச்சு வாங்குதம்மா!
காலமெல்லாம் உன் நினைவால்
கண்சொரிந்து வாழுகின்றோம்.

அப்பா, அம்மா, சகோதரிகள்,
சகோதரர், சித்தி, சித்தப்பா,
மாமாமார் அனைவரும்.

இல.419, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(சி/555082)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 14 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயமும் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயமும் மோதிக்கொள்ளும் காட்சிகள். (படங்கள்-நேசன்)

### உடுவில் கோட்டமட்ட உதைபந்தாட்டம்

# இறுதிவரை இரு அணிகளும் கடுமையாகப் போராடின சமநிலை தவிர்ப்பு உதைப்பில் வென்றது ஏழாலை ஸ்ரீமுருகன்

வலி.வடக்கு, ஒக்.13

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயமும் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இரு அணியினரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்லர் என்ற நிலையில் மோதிக்கொண்டனர். இரு அணிகளும் கோல்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்ட போதிலும் அந்த முயற்சி கைகூடாத நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் எப்படியும் கோல் பெற்று வெற்றி அடைய வேண்டும் என்ற ஆவலுடன் இரு அணியினரும் களத்தில் மோதத் தொடங்கினர்.

இரு அணிகளும் மாறிமாறி கோல்கள் பெறும் நோக்குடன் பந்தை நகர்த்திச் சென்ற போதிலும் இரு அணிகளின் பின்னணி வீரர்கள் பந்தை தடுத்து நிறுத்தி எதிரணியினர் பக்கம் பந்தை அடித்த வண்ணம் இருந்தமையால இரு அணிகளின் கோல் காப்பாளர்களும் கூட பந்தைப் பிடித்து தடுக்கும் நிலமையும் குறைவாகவே காணப்பட்டது.

இரு அணிகளும் இரண்டாம் பாதி ஆட்டத்திலும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் நிறைவுபெற்றது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைப்பு வழங்கப்பட்டது. ஏழலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் 03:02 என்ற கோல் கணக்கில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்தை வெற்றி பெற்று உடுவில் கல்விக் கோட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

'3ஆம் இடத்தை சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி பெற்றுக்கொண்டது.(1-86)

# திருநெல்வேலியை 55 ஓட்டங்களால் வீழ்த்தியது சென்றல் விளையாட்டுக் கழகம்

### சத்யன் 5 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்



சத்யன்

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம் அமரர் வீ.டி.ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே ஆறாவது ஆண்டாக நடத்திவரும் கிரிக்கெட் போட்டி ஆட்ட மொன்றில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 55 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட் டுக் கழகமும், திருநெல்வேலி கிரிக்கெட் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக்கழகம் 45.4 ஓவர்களால் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சுதர்ஸன் 46, யசின்தன் 33, சத்யன் 23, கபில்தேவ் 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

திருநெல்வேலி கிரிக்கெட் கழகத்தின் சார்பில் பந்து வீசிய சுரேஸ் 3 விக்கெட்டுக் களையும், ஜெசிந்தன், கௌசீகன் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

196 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் 38 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பிரதீஸ் 29, சுரேஷ் 24, சாந்தன் 16 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

சென்றல் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் பந்து வீசிய சத்யன் 08 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து 05 விக்கெட்டையும் யசின்தன், ஜோன்ஸன் தலா 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (1-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி வடக்கு, ஒக்.13

நல்லூர் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள 14, 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கான போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

**14 வயதுப் பிரிவு**

*யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ணன் வித்தியாலயம்.

*கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் எதிர் திருநெல்வேலி முத்துக்கம்பி வித்தியாலயம் (அரையிறுதி ஆட்டங்கள்)

**18 வயதுப் பிரிவு**

*நல்லூர் கல்வியங்காடு செங்குந்த இந்துக்கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

*கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் எதிர் அரியாலை கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம். (1-86)

* * *

வலி வடக்கு, ஒக்.13

'இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கததின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

*வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்:-யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் யாழ்ப் பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி.

*யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானம்:-சென்ஜோன்ஸ் கல்லூரி 'பி'அணி எதிர் நெல்லியடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

(1-86)

### குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தை 'ஓல்ட் கோல்ஸ்' வென்றது

அமரர் வீ.டி.ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 50 ஓவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் வட்டுக் கோட்டை ஓல்ட் கோல்ஸ் விளையாட் டுக் கழகம் 03 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்று காலிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகமும், வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் 39.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 145 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

செல்வராசா 37, சுகிர்தன் 16, வசந்தன், ஹரிதாஸ் தலா13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ஓல்ட் கோல்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் பந்து வீசிய செந்தூரன் 26 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், திலீபன் 25 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

146 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய ஓல்ட் கோல்ஸ் விளையாட்டுக்கழகம் 07 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

நிரோசன் 53 மயூரன் 26 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். (1-86)

# 13 வயது கிரிக்கெட் போட்டியில் இந்து முதல் இன்னிங்ஸில் ஓட்டத்தால் வெற்றி

வலிவடக்கு, ஒக்.13

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில்-யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதல் இன்னிங்ஸில் ஓட்ட வித்தியாசத்தால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 32 ஓவர்களில் 39 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

நிரூபன் ஒரு நான்குடன் 13 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 13 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீசிய சாரங்கன் 06 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 05 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், சஜீகன் 06 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களு டன் 17 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக் களையும், கௌசிகன் 08 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 08 ஓவர்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், தனலக்சன் 05 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் ஒரு ஓட்டத்திற்கு ஒரு விக்கெட்டையும், [illegible]ன் 09 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 18.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

தவகுகன் ஐந்து நான்குகளுடன் 29, கௌசிகன் ஒரு நான்குடன் 23, கௌசிகன் இரண்டு நான்குகளுடன் 12, சிவஜெகன், சஜீகரன் தலா 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி சார்பில் பந்து வீசிய சௌமிதரன் 17 ஓவர்கள் பந்து வீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 33 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், நிரூபன் 11.3 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 33 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் யூலியஸ் கனிஸ்ரன் 16 ஓவர்கள் பந்து வீசி 09 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் ஜெயேந்திரன் 03 ஓவர்கள் பந்து வீசி 06 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி 35 ஓவர்களில் 03 விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

கௌதமன் ஒரு நான்குடன் 08 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 28 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சார்பில் பந்து வீசிய சயீகரன் 08 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 04 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், தனலக்சன் 08 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

### வடமராட்சி வலய உதைபந்தாட்டம்;

# இருபிரிவுகளில் இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது நெல்லியடி ம.வி.

யாழ்ப்பாணம், ஒக்.13

வடமராட்சி வலயமட்டத்தில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 16, 18 வயதுப் பிரிவுகளின் இறுதியாட்டத்துக்கு நெல்லியடி ம.வி. தகுதிபெற்றுள்ளது.

16 வயதுப் பிரிவிற்கான அரையிறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தி யாலய அணி இமையாணன் அதகபாடசாலை அணியை மிக இலகுவாக 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

நெல்லியடி ம.ம.வித்தியாலய வீரர் அரிஹரன் தனது சிறப்பான ஆட்டத்தினால் ஆட்டம் தொடங்கி 2ஆவது மற்றும் 15 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு தனது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

நெல்லியடி ம.ம.வி. அணி இரண்டாவது அரையாட்ட நேரத்தில் தமக்கு கிடைத்த பல சந்தர்ப்பங்களைக் கோல்களாக்கத் தவறியபோதும் அவ்வணி வீரர் கிருஸ்ணானந்தனினால் 3ஆவது கோல் போடப்பட்ட நிலையில் இறுதியாட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டது.

18 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதியாட்டத்தில் நெல்லியடி ம.ம.வித்தியாலய அணியும் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இவ்வாட்டத்தில் ஆட்ட நேரத்தின்போது இருஅணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை. பின்பு வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு ஆட்டத்தின்போது 5:4 என்ற கோல் கணக்கில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அணியை வென்று இறுதியாட்டத்திற்குத் தெரிவாகியது. (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. சாதாரணதரம் ஆகிய பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவித்துள்ளது. கடந்த சனிக்கிழமை சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் சங்க மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் இவ்வருடம் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழியில் முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன் தர்மலிங்கம் பாசுபதனுக்கு கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் எஸ்.சசிகரனும், கடந்த வருட ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவனுக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலனும் பரிசில் வழங்குவதை முதலிரு படங்களிலும் காணலாம்.
ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவிக்கு சங்க இயக்குனர்சபை உறுப்பினர் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.
(படங்கள்:தென்னவன்)

## அச்சுவேலிப் பிரதேச மாணவர்களுக்கான பஸ்சேவை சீரில்லை எனப் பெற்றோர் கவலை

அச்சுவேலி,ஒக்.13

அச்சுவேலிப் பிரதேச மாணவர்களுக்கான பாடசாலை பஸ்சேவை அண்மைக் காலமாக சீரான முறையில் நடைபெறவில்லை என முறையிடப்படுகின்றது. இதனால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களுககு உள்ளாகின்றனர் எனப் பெற்றோர் கவலை தெரிவிச் கின்றனர்.

யாழ்.நகரப் பாடசாலைகளில் கல்வி கற்கும் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி மாணவர்களுக்காக வட பிராந்திய போக்குவரத்து சபையால் நடத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சேவையே காலை, மாலையில் சீரான முறையில் நடைபெறுவதில்லை என மாணவர்களும், பெற்றோர்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு முறைப்பாடு செய்தபோதும் உரிய பலன் கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.

காலையில் பஸ்சேவை நடைபெறாததால் கணிசமான மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (202-11)

## உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள்; ஆராய்வதற்கென விசேட செயலணிக் குழு

மந்திகை,ஒக்.13

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னேற்றம்-வளர்ச்சி தொடர்பாக விசேட செயலணிக் குழு மூலம் ஆராயப்படவுள்ளது. இதற்கென மாகாண மட்டத்தில் விசேட செயலணிக் குழுக்கள் நியமிக்கப்பட்டு முன்னேற்றம் தொடர்பான மதிப்பீடுகள் இடம்பெறவுள்ளன.

மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எச்.பி.ஹேசியன் ஹேரத் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

வருமான முன்னேற்றம், சந்தை தொழிற்பாடு, வீதிகள், மின்சார பாவிப்பு, போக்குவரத்து, அலுவலக ஊழியர்களின் கணனி அறிவு, தொழில்நுட்ப அறிவு, கல்வி மேம்பாடு என்பன குறித்து ஆராயப்படவுள்ளது. (202-[illegible]5)

## வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி திறன் வெளிப்பாட்டுக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.13

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி வாழ்வகத்தின் ஏற்பாட்டில் திறன் வெளிப்பாட்டுக் கண்காட்சி எதிர்வரும் புதன், வியாழக்கிழமைகளில் வாழ்வகத்தில் நடைபெறவுள்ளது.

வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

முதலாம்நாள் நிகழ்வுக்கு லயன்ஸ் மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.ஜெயவத்சலனும், இரண்டாம் நாள் நிகழ்வுக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (202)

## சிறுகதைப் போட்டியில் தேசிய மட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி முதலிடம்



விருது வழங்கும் நிகழ்வில்.....

கல்வி அமைச்சு சிறுவர் தினத்தையொட்டி "உலகை வெற்றி கொள்ளும் சிறுவர்கள்" எனும் தலைப்பில் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் நடத்திய சிறுகதைப் போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் தரம் 10 மாணவி உஷானி ஜெயானந்தகுமார் தேசியமட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

சர்வதேச சிறுவர் தினமாகிய கடந்த முதலாம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கும் வைபவத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் ஹற்றன் நஷனல் வங்கிப் பணிப்பாளர் ஆர். தியாகராஜா ஆகியோரிடமிருந்து மாணவி விருதினைப் பெற்றுக் கொண்டார். (202)

## குடாநாட்டில் கோதுமை மாவுக்கு நிலவிவரும் தட்டுப்பாடு இந்த வாரத்துக்குள் நீங்கிவிடுமாம்

### சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.12

குடாநாட்டில் கோதுமை மாவுக்கு நிலவும் தட்டுப்பாடும் பற்றாக்குறையும் இந்த வாரத்துக்குள் நீங்கிவிடும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.செயலகத்தால் கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட கோதுமை மாவை குடாநாட்டில் உள்ள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நுகர்வோருக்கு விநியோகிப்பதற்கு யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை முதல் கோதுமை மாவை பாவனையாளர்களுக்கு விநியோகிப்பதற்குகூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளன. கோதுமை மாவுக்கு நிலவும் பற்றாக் குறையினால் தனியார்கடைகளில் அது கிலோ 85 ரூபா முதல் 90 ரூபா வரை விற்கப்படுகின்றது. (202-224)

### உங்களுக்குள்ள அடிப்படை மனித உரிமைகளை அறிந்துகொள்ளுங்கள்...

**உறுப்புரை - 13**

ஒவ்வொரு நாட்டினதும் எல்லைக்குள் சுதந்திரமாக பிரயாணம் செய்வதற்கும் வதிவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**உறுப்புரை - 14**

துன்புறுத்தலிலிருந்து புகலிடம் கோர உரிமையுண்டு.

**உறுப்புரை - 15**

ஒரு தேசிய இனத்தவராக இருக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

**உறுப்புரை - 16**

முழு வயதடைந்த ஒவ்வொருவரும் திருமணம் செய்வதற்கும் குடும்பத்தை உருவாக்குவதற்கும் உரிமையுடையவராவர்.

**உறுப்புரை - 17**

தனியாகவும் வேறு ஒருவருடன் கூட்டாகவும் ஆதனத்தை சொந்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

## வலிகாமம் கிழக்குப் பிரதேசபையின் உள்ளூராட்சி வார போட்டி முடிவுகள்

கோப்பாய்,ஒக்.13

வலி.கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கோப்பாய் கோட்டப் பாடசாலைகளிற்கிடையே நடத்தப் பட்ட கட்டுரை, பேச்சு போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**கட்டுரைப் போட்டி**

*ஆரம்பப்பிரிவு:-* வ.திவாகரன் (கோப்பாய் சரவணபவனந்தா வித்தியாலயம்), க.நவநிதி(கோப்பாய் சரவணபவனந்தா வித்தியாலயம்), வி.ந.ரேணிகா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி).

*இடைநிலைப் பிரிவு:-* இ.வேணுஜா (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), அ.அருள்பிரியா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), ப.மதுஷா (ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்).

*உயர் பிரிவு:-* சி.சுகன்ஜா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), நி.தனஞ்செனி (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), வை.ரம்மிகா (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி).

**பேச்சுப் போட்டி**

*ஆரம்பப் பிரிவு:-* வே.கிருஷ்ணவி (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), ந.அஜந்தா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), சி.சங்கீதா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி).

*இடைநிலைப் பிரிவு:-* பு.நிக்ஷலா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), தே.நிவேக்கா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), இ. இதயதீபா(நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை).

*உயர் பிரிவு:-* கு.தட்சாயினி (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), ம.கெலன் சோபியா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), சி.சாமந்தி(அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி). (202-72)

## முதியோர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு தமக்குள் கூட்டுறவை ஏற்படுத்த வேண்டும்

### வடமராட்சி முதியோர் ந.கூ.ச.தலைவர் கருத்து

வடமராட்சி,ஒக்.13

முதியோர்கள் தாம் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழத் தமக்குள் ஒரு கூட்டுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இக் கூட்டுறவின் மூலம் அவர்கள் தமது குடும்பத்தோடு வாழ்வதுபோல சகல வசதிகளுடன் வாழ முடியும்.

இவ்வாறு வடமராட்சி முதியோர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தின் முதியோர் தின விழாவில் பேசிய சங்கத்தின் தலைவரும், இளைப்பாறிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருமான கு.பாலசுப்பிரமணியம் கூறினார்

சங்கப் பணிமனையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

பெற்றபிள்ளைகள் சுகபோகங்களை விரும்பி வெளிநாடுகளில் வசிக்கின்ற சூழலில், முதியவர்கள் பிள்ளைகள் இல்லாதவர்களாக உறவினர்களையும், ஊரவர்களையும் நாடி வாழவேண்டிய நிலை ஏற்படுகின்றது. பணம், பொருள் இருந்தும் பல துன்பங்களின் மத்தியில் பல முதியவர்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறானவர்கள் தாம் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழத் தமக்குள் கூட்டுறவை ஏற்படுத்தி அதன் மூலம் குடும்பத்தோடு இருப்பது போல சுபீட்சமாக வாழ முடியும். இந் நோக்கத்தை நிறைவேற்றும் இலக்குடனேயே வடமராட்சி முதியோர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது.

முதியோர்கள், இளையோரின் வழிகாட்டிகளாக இருந்து நல்ல சமுதாயம் உருவாக உழைக்கின்றனர். எனினும் பிற்காலத்தில் அவர்கள் அநாதைகளாகி அல்லல்படுகின்றனர். நாம் ஒவ்வொருவரும் முதியோரைப் பேண வேண்டும். மூத்தோர் சொல்வார்த்தை கேட்க வேண்டும். 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என கொன்றைவேந்தனில் ஒளவையார் கூறியதை சிந்தித்துப்பார்த்துச் செயற்படவேண்டும்- என்றார். (202-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்திஷ் தீவிரவாதிகளின் இலக்குகள் மீது வட ஈராக்கில் குண்டுத் தாக்குதல்கள்

அங்காரா,ஒக்.13

துருக்கியிலிருந்து வெளியேறி, வட ஈராக்கில் தலைமறைவாகியுள்ள குர்திஷ் தீவிரவாதிகளின் இலக்குகள் மீது, துருக்கிய ஜெட் போர் விமானங்கள், எல்லை கடந்து கடும் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டன என துருக்கிய இராணுவம் தெரிவித்தது.

வட ஈராக்கில், அந்நாட்டு குர்திஷ்கள் செறிந்து வாழ்கிறார்கள். அத்துடன் அது குர்திஷ்களின் சுயாதிபத்திய மாநிலமாகவும் திகழ்கிறது. அங்குள்ள குர்திஷ் தீவிரவாத அமைப்புக்கள், துருக்கியிலிருந்து வெளியேறி, வந்துள்ள குர்திஷ் தீவிரவாதிகளுக்கு பெரிதும் உதவி வருகின்றன என துருக்கி தொடர்ந்து புகாரிட்டு வருகின்றது.

அதேவேளை, இதனை ஈராக் அடியோடு மறுத்துவருகிறது. வட ஈராக்கிலிருந்து துருக்கி எல்லைக்குள் புகுந்து, அவ்வப்போது தாக்குதல்களை நடத்திவிட்டு குர்திஷ் தீவிரவாதிகள் மாயமாகி விடுகிறார்கள். அதனை துருக்கி சுட்டிக்காட்டி வருகின்றது.

அதனால் வட ஈராக்கிற்குள் ஊடுருவி, துருக்கிய குர்திஷ் தீவிரவாதிகளின் இலக்குகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள துருக்கிய நாடாளுமன்றம் இராணுவத்துக்கு அதிகாரம் வழங்கியிருந்தது. அந்த அதிகாரம் சமீபத்தில் மேலும் ஒரு வருடகாலத்துக்கு துருக்கிய நாடாளுமன்றத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்தே, சனிக்கிழமை இரவு துருக்கி ஜெட் போர் விமானங்கள் புதிய தாக்குதல்களை மேற்கொண்டன. இத்தீவிரவாதிகள் துருக்கியில் தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்து, போராடி வரும் குர்திஷ்தான் தொழிலாளர் கட்சியின் ஆயுதப்பிரிவைச் சேர்ந்தவர்களாவர்.

பி.கே.கே. என அழைக்கப்படும் இந்த குர்திஷ்தான் தொழிலாளர் கட்சியை ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் பயங்கரவாத இயக்கப்பட்டியல்களில் இணைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சனிக்கிழமை இடம்பெற்ற விமானத்தாக்குதல் தொடர்பாக, துருக்கிய இராணுவம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

வட ஈராக்கிய எல்லைக்குளிருந்து, சனிக்கிழமை இரவு பெருந்தொகையான குர்திஷ் தீவிரவாதிகள், துருக்கிக்குள் நுழைய முற்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்தே விமானத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் அநேக தீவரவாதிகள் கொல்லப்பட்டார்கள். அத்துடன் எல்லைக்குள் தீவிரவாதிகளின் இலக்குகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என, அது அவ்வறிக்கையில் விவரித்துள்ளது.

சுயாதிபத்திய கோரிக்கையை முன்வைத்து, கடந்த 20 ஆண்டுகளாக, குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி போராடி வருகிறது. இக்கட்சியின் ஆயுதக்குழுவுக்கும் அரச படைகளுக்குமிடையே மூண்டுவந்துள்ள மோதல்களில், 40 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தென் - கிழக்கு துருக்கியில் குர்திஷ் தாய்நாடு நிறுவப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்து, 1984ஆம் ஆண்டு தொடக்கம் குர்திஷ் தீவிரவாதிகள் ஆயுதப் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

# பராக் ஒசாமா!



அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிடும் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் பராக் ஒபாமாவின் பெயர், வாக்குச் சீட்டுகளில் 'ஒசாமா' வாக மாறிவிட்டமையால் அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தார்கள்.

குடியரசுக்கட்சி வேட்பாளர் ஜோன் மெக்கைனின் பெயரில், வாக்குச் சீட்டுகளில் எவ்வித குளறுபடியும் ஏற்படவில்லை. நியூயோர்க்குக்கும், இதர இடங்களுக்கும் தேர்தல் பணியில் ஈடுபடுபவர்களுக்கான அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

அவற்றில் ஒபாமா என்ற பெயர் ஒசாமா வாக மாறியிருந்தது. நல்லவேளை ஒசாமா பின்லேடன் என அச்சிடாமல் விட்டார்களே என பலர் திருப்தியடைந்தனர். அந்தச் சீட்டுகள் அனைத்தும் திருப்பி அனுப்பப்பட்டன. வாக்குச் சீட்டில் அச்சடிப்பில் ஏற்பட்ட குளறுபடிக்கு, இறுதியில் அதிகாரிகள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

# எண்ணெய் பேர ஊழல் விவகாரத்தில் பெரு நாட்டின் அமைச்சரவை ராஜினாமா

லிமா, ஒக்.13

எண்ணெய்ப் பேரஊழல் விவகாரத்தில், பெரு நாட்டு அமைச்சரவை ராஜினாமா செய்தது. அமைச்சரவையின் பதவி விலகலை ஜனாதிபதி எலன் கார்சியா ஏற்றுக்கொண்டார்.

நோர்வே எண்ணெய் நிறுவனத்துக்கு எண்ணெய் ஒப்பந்தம் அளிப்பது பற்றியும், அதற்காக இலஞ்சம் பெறுவது பற்றியும் ஆளுங்கட்சியின் முக்கிய தலைவர்கள் சிலர் பேசிய பேச்சுகள், அடங்கிய ஒலிநாடாக்கள் அண்மையில் கைப்பற்றப்பட்டன. இவற்றில் பிரதமர் ஜோர்ஜ் டெல் கொஸ்டிலோவின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நாடாக்கள் பின்னர் பகிரங்கமாக வெளியிடப்பட்டமையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, கடந்த மாதம் நடந்த பொது ஏலத்தில் நோர்வே எண்ணெய் நிறுவனத்துக்கு அளிக்கப்பட்டிருந்த 5 எண்ணெய் ஒப்பந்தங்களை பெரு ஜனாதிபதி எலன் கார்சியா இரத்துச் செய்தார். எரிசக்திஅமைச்சர், அரசின் எண்ணெய் நிறுவனத்தலைவர் ஆகியோரையும்அவர்பதவிகளிலிருந்து நீக்கினார்.

எனினும், இந்நடவடிக்கையுடன்எதிர்க்கட்சிகள்திருப்தி அடையவில்லை. பிரதமர் ஜோர்ஜ் டெல்கொஸ்டில்லே தலைமையிலான அமைச்சரவைகூண்டோடுபதவி விலகவேண்டுமென - அவை வற்புறுத்தின. அவற்றின் கோரிக்கை வலுவடைந்தமையால், அமைச்சரவையை பதவி விலகுமாறு ஜனாதிபதி எலன் கார்சியா உத்தரவிட்டார்.

ஜனாதிபதியின் உத்தரவுக்கிணங்க, பிரதமர் ஜோர்ஜ் டெல் கொஸ்டில்லோவும், அவரது அமைச்சர்களும் கூண்டோடு இராஜினாமா செய்தனர். அவர்களின் இராஜினாமாவை ஏற்றுக் கொள்கிறார் என எலன் கார்சியா அறிவித்துள்ளார். புதிய அமைச்சரவை எப்போது அறிவிக்கப்படும் என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையே, கடந்த 2006 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட எண்ணெய் ஒப்பந்தங்கள் பற்றியும் விசாரணை நடத்த பெரு நாடாளுமன்றம் திட்டமிட்டுள்ளது. இது தொடர்பான பிரேரணையொன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## உலக அரங்கில்

# தலிபான்களின் கொலைப் பட்டியலில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்!

இஸ்லாமாபாத், ஒக்.13

தலிபான்களின் கொலைப் பட்டியலில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கட்சியின் தலைவருமான நவாப் ஷெரீப்பும் அவருடைய சகோதரரும் பஞ்சாப் மாகாண முதல்வருமான ஷாபாஸ்ஃம் அடங்கியுள்ளனர் என விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

பாகிஸ்தான் தலிபான் தலைவர் பைதுல்லா மசூத்தே பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸீர் பூட்டோவின் கொலைக்கு காரணமானவராகக் கருதப்படுகிறார். நவாஷ் ஷெரீப் சகோதரர்களைத் தீர்த்துக்கட்ட மசூத் திட்டமிட்டுள்ளார் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் நவாஸின் முஸ்லிம் லீக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஷீத் அக்பர் நவானி இல்லத்தில் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. இது தொடர்பான விசாரணையின் போது இத்தகவல்கள் கிடைத்துள்ளன.

நவாஸ் சகோதரர்கள் வீடு லாகூரிலுள்ளது. இவர்களது வீட்டையும், நவாஸ் சகோதரர்களின் நடமாட்டத்தையும் தெரிக்-இ-தலிபான் தீவிரவாதி ஒருவர் தொடர்ந்து கண்காணித்து வருகிறார் என உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது. பைதுல்லா மசூத்தால் அனுப்பப்பட்ட மௌலவி உபைதுல்லா என்ற அந்த தீவிரவாதி, கடந்த ஜூலை மாதம் பஞ்சாப் மாகாணத்தில் தங்கியிருந்து ஷாபாஸை தீர்த்துக்கட்டத் திட்டம்தீட்டியிருந்தார். அதற்காக லாகூரில் நவாஸ் சகோதரர்கள் செல்லும் வழிகளையும் உளவு பார்த்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

# பக்தாத்தில் குண்டுத்தாக்குதல் 13பேர் பலி; 27 பேர் படுகாயம்

பக்தாத், ஒக்.13



ஈராக்கியத் தலைநகரான பக்தாத்தில் இடம்பெற்ற கோர கார்க்குண்டுத்தாக்குதலில், 13 பேர் கொல்லப்பட்டனர். 27 பேர் காயமடைந்தனர். இறந்தவர்களில் பெண்களும், பிள்ளைகளுமடங்குவர் என, உள்ளூர் பொலிஸ் வட்டாரமும், மருத்துவமனை வட்டாரமும் தெரிவித்தன.

அபுஷெர்சந்தையில், இக்கார்க் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. இதில் அநேக கடைகள் நிர்மூலமாக்கப்பட்டன. பல வாகனங்கள் தீக்கிரையாகின. குண்டு வெடிப்பை அடுத்து, தீச்சுவாலைகளுடன் கரும் புகை மண்டலம் எழும்பி அப்பகுதியை மறைத்தது என பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

பக்தாத்தின் தென் புறத்திலுள்ள டோரா மாவட்டத்தில், அபு ஷெர் நகர் அமைந்துள்ளது. இம்மாவட்டத்தில் சுனி முஸ்லிம்கள் செறிந்து வாழ்கிறார்கள். எனினும் அபுர் ஷேர் பகுதியில் ஷியாக்களே அதிகளவில் உள்ளார்கள் என ஓர் அதிகாரி சுட்டிக்காட்டினார்.

"இது ஒரு பயங்கரமான தாக்குதலாகும். குண்டு வெடித்ததும் எனது மனைவி நிலத்தில் விழுந்தார். சன்னங்கள் அவரது உடலையும் தாக்கிவிட்டன. அவர் இறந்து விட்டார் என்றே நினைத்தேன். பின்னர்தான் அவர் மூர்ச்சித்துக் கிடந்துள்ளார் என தெரிந்து கொண்டேன். இதற்காக இறைவனுக்கு நன்றி தெரிவிக்கிறேன்" என ஹுஸைன் அலி என்பவர் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

இதே பகுதியில், வெள்ளிக்கிழமைமினிபஸ்ஒன்றுக்கருகிலும்குண்டொன்று வெடித்தது. இதில் ஒருவர்கொல்லப்பட்டார். 12பேர்காயமடைந்தனர்என, பொலிஸ்அதிகாரியொருவர்தெரிவித்தார்.

2003 ஆம் வருட [illegible] முதல் இதுவரை, பக்தாத்தில் மாத்திரம் 47 ஆயிரத்துக்கு மேற்பட்ட [illegible] கொல்லப்பட்டுள்ளார்கள் என, ஈரானிய மதிப்பீட்டுக் குழு வொன்று கணிப்பீடு செய்துள்ளது.

# கலிபோர்னியாவை தாக்கிய 'நோபர்ட்' சூறாவளி

லாபாஸ், ஒக்.13

நோபர்ட் என்னும் சூறாவளி கடும் மழையோடு மெக்சிக்கோவின் பாஜா கலிபோர்னியா சுர் வளைகுடாவை உக்கிரமாகத் தாக்கியது. இச்சூறாவளியின் அனர்த்தங்களால் லாபாஸ் நகரப் பிராந்தியம் பெரும் பாதிப்புக்குள்ளானது. ஆயிரக்கணக்கானோர் வீடு, வாசல்களை இழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

கடும் சூறாவளியால் வீட்டுக் கூரைகள் தூக்கி எறியப்பட்டன. பாரிய விருட்சங்கள் வேரோடு பிடுங்கி வீசப்பட்டன. வீடுகளை இழந்தோர், அரசகட்டிடங்களிலும் வழிபாட்டுஸ்தல மண்டபங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். சூறாவளி மணிக்கு 103 மைல் (165 கிலோ மீற்றர்) வேகத்தில் தாக்கியது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மெக்சிக்கோவின் பசுபிக் பிராந்தியத்திலிருந்து ஏறத்தாழ மூவாயிரம் பேர் வரை வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் தற்காலிக முகாம்களில் தஞ்சமடைந்துள்ளார்கள். சூறாவளியின்போது கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. அலைகள் 13 அடிக்கு மேல் உயர்ந்தன என உள்ளூர் அதிகாரியொருவர் ஊடகவியலாளரிடம் தெரிவித்தார்.

எமது பகுதியிலுள்ள ஒரு முகாமில் தற்போது, ஆயிரம் பேர் வரை தங்கியுள்ளனர். இன்னும் பலர் வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிவாரணப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என பாஜா கலிபோர்னியா சுர் சிவில் பாதுகாப்பு தலைமையதிகாரி ஜோஸ் கஜோன் குறிப்பிட்டார்.

தாழ்ந்த பகுதிகளிலிருந்து பெருந்தொகையானோர் மீட்புக் குழுக்களால் வெளியேற்றப்பட்டுள்ளனர். பல இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. கழுத்துவரை நீர்மட்டம் உயர்ந்துள்ளது. போர்ட்டோ சேன் கார்ளோஸ் நகர வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என குடியிருப்பாளர்கள் தெரிவித்தார்கள்.

# செச்சினியாவில் பூகம்பம் 13பேர் பலி; 100 பேர் காயம்

குரோஸ்னி, ஒக்.13

தென் ரஷ்ய செச்சினியா குடியரசில் ஏற்பட்ட பாரிய பூகம்பத்துக்கு, 13 பேர் பலியாயினர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். காகாசஸ் பிராந்தியம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது என, அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இந்த பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில், 4.7 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. பூகம்ப அனர்த்தங்களால் பாதைகள் சேதமடைந்துள்ளன. மின்விநியோகமும், போக்குவரத்துகளும் துண்டிக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் கூறினார்கள்.

செச்சினியாவின் தலைநகரான குரோஸ்னிக்கு கிழக்கே, 40 கிலோ மீற்றர் (25மைல்) தொலைவில் இப்பூகம்பம் மையங் கொண்டிருந்தது என, அமெரிக்க பூகற்பவியல் ஆய்வு மையம் தெரிவித்தது. இப் பூகம்பத்தால் ஏற்பட்ட நிலநடுக்கம், சனிக்கிழமை நண்பகல், 40 விநாடிகள் வரை நீடித்தது என உள்ளூரதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

பூகம்ப அனர்த்தங்களால் அநேக வீடுகள் சேதமடைந்துள்ளன. சிலவீடுகள்இடிந்துவிழும் நிலையில் உள்ளன. நூற்றுக்கணக்கானோர் தற்காலிகமாகக் கூடாரங்களில் தஞ்சமடைந்துள்ளனர். ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட வீடுகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

# தென்னாபிரிக்க தங்கச்சுரங்கத்தில் புதியவகை பக்றீரியா


பிரிட்டோரியா, ஒக். 13

தென்னாபிரிக்க தங்கச் சுரங்கங்களில் தற்போது புதிய பக்றீரியா நுண்ணுயிரொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஏனைய கோள்களில் காணப்படும் உயிரினங்கள் எவ்வாறு கடுமையான சுற்றாடலைத் தாக்குப்பிடித்து வாழுகின்றன என்பதை ஆராய இது பெரிதும் உதவும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். டெல்சுல்பேர்ருட்டிஸ் ஒடக்விடேட்டர் என்னும் இந்த உயிரினம் பிராணவாயு இல்லாமலேயே உயிர்வாழும். அத்துடன் அது வாழும் இடத்தில் காணப்படும் ஒரே உயிரினம் இது மாத்திரமாகவே இருக்கும். உயிர் வாழ்வதற்கு வேறு எந்த உயிரினத்தையும் இது சார்ந்திருப்பதில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஒளியே இல்லாத இடத்தில் உயிர்வாழ்வதுடன் தானாகவே இனப்பெருக்கத்தையும் செய்துகொள்கிறது. காபன், நைட்ரஜன் போன்றவை மாத்திரமே இது உயிர்வாழ்வதற்குத் தேவையானவை என்று ஆய்வாளர்கள் விவரித்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - ஆஸ்திரேலிய டெஸ்ட் சமநிலையில் முடியும் சாத்தியம்



பெங்களூர், ஒக். 13

பெங்களூரில் நடைபெற்றுவரும் இந்திய - ஆஸ்திரேலிய அணிகள் இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடையும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அணிக்கு மீண்டும் ஒருமுறை சிம்மசொப்பனமாக விளங்கினார் ஹர்பஜன் சிங். வழக்கமாக சுழலில் மிரட்டும் இவர், இம்முறை துடுப்பாட்டத்திலும் அசத்தினர். முதலாவது இன்னிங்ஸின் கடைசிக் கட்டத்தில் சகிர்கானுடன் இணைந்து பொறுப்பாக ஆடி, இந்திய அணியை இக்கட்டில் இருந்து மீட்டார்.

சச்சின், லட்சுமண் உள்ளிட்ட சிரேஷ்ட வீரர்கள் சிறப்பாக ஆடவில்லை. சர்ச்சைகளைச் சமாளித்து ஆடிய கங்குலி,டிராவிட் அணிக்கு ஆறுதல் அளித்தனர்.

நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. பிரட் லீ வேகத்தில் வெளியேறினார் கம்பிர் (21). சேவக் (45) ஓட்டங்கள் எடுத்த நிலையில், ஜான்சன் வேகத்தில் வீழ்ந்தார். முதல் இரண்டு விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்ந்த நிலையில், சச்சின் களமிறங்கினார். டெஸ்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த லாராவின் சாதனையை தகர்ப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வெறும் 13 ஓட்டங்களுக்கு ஜோன்சனின் பந்து வீச்சில் வெளியேறி ஏமாற்றினார். அடுத்து வந்த அனுபவ வீரர் லட்சுமண், 'டக்' அவுட்டாகி சொதப்பினார்.

இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்கு டிராவிட்டுடன் ஜோடி சேர்ந்தார் கங்குலி. ஆஸ்திரேலிய டெஸ்டுடன் ஓய்வுபெற உள்ள கங்குலி நிதானமாக ஆடினார். [illegible]

அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய டிராவிட், டெஸ்ட் அரங்கில் 53 ஆவது அரை சதத்தை பதிவு செய்தார். 51 ஓட்டங்கள் எடுத்த டிராவிட் வட்சன் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இந்நிலையில் மழை குறுக்கிட ஆட்டம் 30 நிமிடம் தடைப்பட்டது.

முன்னணி வீரர்கள் விரைவாக பெவிலியன் திரும்பிய நிலையில், ஹர்பஜன் பொறுப்புடன் ஆடி விக்கெட் வீழ்ச்சியை கட்டுப்படுத்தினார். இவருக்கு சகிர்கான் அருமையான ஒத்துழைப்புக் கொடுக்க, இந்திய அணி சரிவிலிருந்து மீண்டது. இந்த ஜோடியைப் பிரிக்க முடியாமல் ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் திணறினர்.

டெஸ்ட் அரங்கில் தனது 5 ஆவது அரைச் சதம் கடந்த ஹர்பஜன் 54 ஓட்டங்களுக்கு வட்சன் பந்தில் வெளியேறினார். ஹர்பஜன், சகிர்கான் ஜோடி எட்டாவது விக்கெட்டுக்கு 80 ஓட்டங்கள் சேர்த்தது. மூன்றாம் நாள் முடிவில் இந்திய அணி 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 313 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்றுமுன் தினம் 12 ஓட்டங்களை எட்டிய போது, இந்திய மண்ணில் அதிக ஓட்டங்கள் சேர்த்த முன்னாள் வீரர் கவாஸ்கரின் (65 டெஸ்ட் 5,067 ஓட்டங்கள், 50.16 சராசரி) சாதனையை முறியடித்தார் சச்சின். இதுவரை இந்திய மண்ணில் 64 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சச்சின், 5,069 ஓட்டங்கள் குவித்துள்ளார். இவரது சராசரி 54.50

நேற்றுமுன்தினம் ஹர்பஜன் சிங், இந்திய மண்ணில் முதல் அரை சதம் பதிவு செய்தார். டெஸ்ட் அரங்கில் இதுவரை 5 அரை சதம் அடித்துள்ள இவர், ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தனது மூன்றாவது அரை சதத்தைப் பதிவு செய்தார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 8 ஆவது விக்கெட்டுக்கு அதிக ஓட்டங்கள் சேர்த்த ஜோடி என்ற பெருமையை ஹர்பஜன், சகீர் கூட்டணி பெற்றது. இதற்குமுன் கடந்த 2004-05 ஆம் ஆண்டு பெங்களூர் டெஸ்டில் கும்ளே, பார்த்திவ் படேல் ஜோடி எட்டாவது விக்கெட்டுக்கு 31



ஹைடனை வீழ்த்திய சகீர் கானை பாராட்டும் இந்திய வீரர்கள்

ஓட்டங்கள் சேர்த்திருந்தது. இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 360 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் பெரிதாக அடித்தளம் அமைக்கத் தவறவிட்டனர். ஹைடனை இரண்டாவது இனனிங்ஸிலும் சகீர் கானே பதம்பார்த்து அனுப்பிவிட்டார். எல்.பி.டபிள்யூ. முன்றலில் ஆட்டமிழந்த அவர் வெறும் 13 ஓட்டங்களையே எடுத்தார்.

ஓரளவுக்கு நிதானமாக ஆடிக்கொண்டிருந்த கடிச்சை ஹர்பஜன் சிங் பெவிலியன் திருப்பினார். 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவர் ஹர்பஜனின் பந்தில் லக்ஷ்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். முதலாவது இன்னிங்ஸில் அபாரமாக சதம் விளாசிய ரிக்கி பொண்டிங் இம்முறை வெறும் 17 ஓட்டங்களுடன் இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் லக்ஷ்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களம் புகுந்தவர் மைக்கல் ஹஸி. இவரும் முதல் இன்னிங்ஸில் சதம் விளாசியிருந்தார். ஆனால் இரண்டாவது இன்னிங்ஸில் 31 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஹர்பஜனிடம் பலியாகி பெவிலியன் திரும்பினார். அவரின் இடத்துக்கு இறங்கிய கிளார்க்கை இஷாந்த் சர்மா பதம் பார்த்தார். அவரைத் தொடர்ந்து ஜோடி சேர்ந்த வட்சன், ஹடின் ஜோடி நிதானத்தைக் கடைப்பிடித்து ஓட்டம் குவிக்கிறது. நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் வட்சன் 32 ஓட்டங்களுடனும் ஹடின் 28 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். மோத்தமாக 193 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து ஆடிக் கொண்டிருக்கிறது ஆஸ்திரேலிய அணி. அந்த அணி முதல் இன்னிங்ஸில் இந்தியாவை விட 70 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது. மொத்தமாக ஆஸ்திரேலிய 261 ஓட்டங்களில் முன்னிலை வகிக்கிறது. ஐந்தாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## ஐ.சி.எல். போட்டியில் மின்தடை: இன்சமாம் அணி தோல்வி!



ஹைதராபாத், ஒக். 13

கபில்தேவ் தலைமையில் செயல்பட்டு வரும் இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்) சார்பில் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான 23 ஆவது ஐ.சி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகள் ஹைதராபாத்தில் வெள்ளிக்கிழமை தொடங்கியது. தொடக்க ஆட்டத்தில் கிறிஸ் ஹாரிஸ் தலைமையிலான நடப்பு சம்பியன் ஹைதராபாத் ஹீரோஸ் அணி, இன்சமாம் தலைமையிலான லாகூர் பாட்ஷாஸ் அணியை எதிர்கொண்டது.

முதலில் ஆடிய ஹைதராபாத் ஹீரோஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 165 ஓட்டங்கள் எடுத்தது. ராயுடு 42 பந்துகளில் ஒரு பவுண்டரி, 5 சிக்சருடன் 58 ஓட்டங்களும் மாகெர் 44 பந்துகளில் 3 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 41 ஓட்டங்களும் சேர்த்தனர்.

பின்னர் ஆடிய லாகூர் பாட்ஷாஸ் அணி 6 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 30 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மின்தடை காரணமாக மைதானம் இருளில் மூழ்கியது. 50 நிமிடம் வரை காத்திருந்து பார்த்தும் மின் தடை சரியாகாததால் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முதல் தர போட்டிக்கான வி.ஜே.டி. விதிமுறை கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்படி, 6 ஓவர்களில் 49 ஓட்டங்கள் இலக்கு லாகூர் அணிக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதனால் ஹைதராபாத் ஹீரோஸ் அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## கனடா ருவென்ரி 20 தொடர்

# இறுதிப் போட்டியில் இன்று இலங்கையும் பாகிஸ்தானும்

கனடாவில் நடைபெற்றுவரும் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று நடக்கிறது. இந்தப் போட்டியில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

கனடா, சிம்பாப்வே, இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதும் கிரிக்கெட் போட்டிகள் கடந்த 10 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. அன்று தொடக்கம் தினமும் இரு போட்டிகள் வீதம் நடத்தப்பட்டுவருகின்றன.

முதலில் நடந்த இலங்கை சிம்பாப்வே அணிகள் இடையேயான போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணி சார்பில் அஜந் மெண்டிஸ் 4 ஓவர்களில் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. அதிகபட்சமாக டில்சன் 33 ஓட்டங்களையும், உடவத்த 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இரண்டாம் நாள் நடந்த ஆட்டத்தில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியிடம் 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. அதிகமாக முபாரக் 39 ஓட்டங்களையும் கப்பு கெதர 27 ஓட்டங்களையும் எடுத்தனர். அதிரடி ஆட்டக்காரர் ஜெயசூரியா 8 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அக்தரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 19.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. பாகிஸ்தான் அணித் தலைவர் மலிக் 5 பவுண்டரிகள் அடங்கலாக 42 ஓட்டங்களைச் சேர்த்தார்.

கனடா, சிம்பாவே அணிகளுடனான போட்டிகளில் இலங்கை, பாகிஸ்தான் அணிகள் இலகுவாக வெற்றிகளைப் பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகின.

அதேவேளை, கனடாவும் சிம்பாப்வேயும் மோதிய போட்டியில் இரு அணிகளும் 20 ஓவர்கள் நிறைவில் 135 ஓட்டங்களைப் பெற்று சமநிலையை அடைந்தன. அந்த இரு அணிகளும் மூன்றாம் இடத்துக்கான போட்டியில் மீண்டும் களம் இறங்குகின்றன. அந்தப் போட்டியும் இன்றுதான் நடக்கிறது. (த)

## கிரிக்கெட் துளிகள்



★ தனது ஓய்வு முடிவுக்கு தேர்வாளர்கள் தன்னை எல்லா நேரங்களிலும் பலிக்கடா ஆக்கியதுதான் காரணம் என்று கூறியிருந்த இந்திய அணி முன்னாள் கப்டன் கங்குலி அதனை மறுத்துள்ளார். "பெங்காலி பத்திரிகைக்கு நான் பேட்டியளித்ததாக பல்வேறு பத்திரிகைகளில் வெளியான செய்தி தவறானதாகும். நான் அப்படி யாருக்கும் பேட்டி அளிக்கவில்லை. அதேபோல் வருங்காலத்திலும் கொடுக்கமாட்டேன் என்று நம்புகிறேன். மற்றவர்களிடம் இருந்து வரும் செய்தியை என்னிடம் விசாரித்து வெளியிடும்படி கேட்டுக்கொள்கிறேன்". - என்று கங்குலி கூறினார்.



★ ஐ.பி.எல். போட்டியில் விளையாட இலங்கை வீரர்களுக்கு கிரிக்கெட் சபை அனுமதி அளித்துள்ளது. இதனால் அந்தச் சமயத்தில் நடைபெறும் இங்கிலாந்துக்கு எதிரான போட்டிக்கு இரண்டாம் தர அணியை அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு இங்கிலாந்து முன்னாள் வீரர் இயன் பொத்தம் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்தப் போட்டித் தொடர் நேரத்தை வீணடிப்பதுடன், இங்கிலாந்து மக்களை அவமதிப்பதாகும் என்று அவர் கூறியுள்ளார்.



★ ஐ.பி.எல். போட்டியில் டில்லி டேர்டெவில்ஸ் அணியில் இடம் பிடித்து விளையாடிய பாகிஸ்தான் வீரர் முகமது ஆசிப் ஊக்க மருந்துச் சோதனையில் சிக்கினார். இதையடுத்து அவர் பாகிஸ்தான் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இது குறித்து ஐ.பி.எல். போதை மருந்து தடுப்பு நடுவர் கமிட்டி விசாரணை நடத்தி வருகிறது. மும்பையில் உள்ள இந்திய கிரிக்கெட் சபை அலுவலகத்தில் நடைபெறும் இந்த விசாரணைக்கு முகமது ஆசிப் நேற்றுமுன்தினம் ஆஜர் ஆனார். விசாரணை 4 வாரம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

★ நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகள் இடையேயான 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி டாக்காவில் நடந்தது. முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 212 ஓட்டங்கள் எடுத்தது. ஜேக்கப் ஓரம் 62 பந்துகளில் 5 பவுண்டரி, 4 சிக்சருடன் 75 ஓட்டங்கள் விளாசினார். பின்னர் ஆடிய பங்களாதேஷ் அணி 42.4 ஓவர்களில் 137 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் நியூசிலாந்து அணி 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் [illegible] கணக்கில் சமநிலையை எட்டியது. 3 ஆவது மற்றும் கடைசிப் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி நடக்கிறது. (சி)

# சாய்னா நம்பிக்கை



புனே, ஒக். 13

பட்மின்டன் விளையாட்டில் வளர்ந்து வரும் இந்தியாவின் இளம் வீராங்கனையான சாய்னா நேவால் தனது சமீபத்திய வெற்றிப் பயணம் தொடரும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற உள்ள கொமன்வெல்த் போட்டிகளில் இந்தியாவுக்கு தங்கப்பதக்கம் பெற்றுத் தருவார் என எதிர்பார்க்கப்படும் சாய்னா நேவால் புனேயில் செய்தியாளர்களிடம் பேசினார்.

பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற பின்னர் தாம் சிறப்பாக விளையாடி வருகிறார் -என்றும் கொமன்வெல்த் போட்டிகளுக்கு தாம் கடுமையாக தயாராகி வருகிறார் என்றும் -

ஹொங்கொங்கைச் சேர்ந்த உலகின் 5 ஆவது வீராங்கனையான வாங் சென்னை வீழ்த்தி ஒலிம்பிக் காலிறுதிக்கு முன்னேறிய முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை பெற்ற சாய்னா அதைத் தொடர்ந்து நடைபெற்ற சீன தைபி போட்டியில் பட்டம் வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்தார்.

[illegible] ஒலிம்பிக் அனுபவம் உதவிகரமாக அமைந்துள்ளது என்றும் சாய்னா கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு குழந்தை உட்பட நால்வர் படுகாயம்

## களுவாஞ்சிக்குடியில் சம்பவம்

மட்டக்களப்பு, ஒக. 13

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, செட்டிப்பாளையம் காட்டுப்பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தினர். அத்தாக்குதலில் மூன்று வயதுக் குழந்தைஉட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில், சிவநந்தராஜ் சாதுரஜன் (வயது 3), மயில்வாகனம் மகேந்திரா (வயது 30),சின்னத்தம்பி உதயராணி (வயது 26), மகேந்திரன் கல்யாணி (வயது 26) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் மகேந்திரன் மற்றும் கல்யாணி ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-10)



கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கூட்டுறவு நகரை யாழ். மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் பீ.சிவலிங்கம் மங்களவிளக்கேற்றி ஆரம்பிக்கிறார். யாழ்.மாவட்டமேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க இயக்குநர் சபைத்தலைவர் எஸ்.சிதம்பரப்பிள்ளை, உப தலைவர் எஸ்.வீரசிங்கம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# காலி, ஹிக்கடுவைப் பகுதியில் 2 இளைஞர்கள் சுட்டுக் கொலை

காலி, ஒக். 13

ஹிக்கடுவைப் பகுதியில் இரு இளைஞர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இச் சம்பவத்தில் தெலவத்த பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 26 வயது உடைய இருவரே உயிரிழந்தனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த சமயமே இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்திற்கு ரி-56 ரகத் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது எனபொலிஸ் விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது.

எனினும் இக் கொலைகளுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்யும் நோக்கில் பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(அ-சி)

# தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவில் 61 முதியோரும் 75 மாணவர்களும் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

தென்மராட்சி பிரசேதச செயலக சர்வதேச சிறுவர்தின, முதியோர் வார விழாவில் 61 முதியோர்களும் 75 மாணவர்களும் கௌ்ரவிக்கப்பட்டனர்.

தென்மராட்சி கலாசார மன்ற மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் முதியோர்களுக்கும் சிறுவர்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது..

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதேசத்தின் 101 வ்யது மூத்த பிரஜையான திருமதி பூரணம் சரவணை உட்பட 61 முதியோர்களும் (ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் தலா ஆகக் கூடிய வயதுடைய முதியவர்கள்) கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழியில் கூடிய புள்ளியைப் பெற்று முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்க ம.வி.மாணவன் தர்மலிங்கம் பாசுபதன் பிர தேச செயலரினால் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌர விக்கப்பட்டார்.

இப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பத்து மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிகளில் சித்தி பெற்ற இரு மாணவர்கள், பிரதேச சிறுவர் கழக சிறார்களிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகளில் தலா முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள், பிரதேச சிறுவர் இல்ல சிறார்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள், பாடசாலை மாணவர்களிடையே சிறுவர்தினத்தையொட்டி நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள், பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் என 52 பேர் இவ் விழாவில் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

(1-207)

# தென்மராட்சிக்குப் பயணம் செய்வோர் சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம்

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ-9 பாதையூடாக தென்மராட்சிக்குப் பயணம் செய்யும் பொதுமக்கள் கைதடிப்பாலம் மற்றும் நாவற்குழிப் பாலத்துக்கு அருகாமையில் புதிதாக படையினரால் அண்மையில் திறக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளின் ஊடாகச் செல்வதால், காலநேரம் வீணாவதாகவும் சிரமங்கள் ஏற்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் மற்றும் அரச அலுவலர்கள் யாவரும் புதிதாகத் திறக்கப்பட்ட சோதனைச் சாவடிகளில் படையினரால் இறக்கப்பட்டு உடற்சோதனை, அடையாள அட்டைகள் பரிசோதனை செய்யப்பட்டே மீளவும் வாகனங்களில் ஏறிப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

அதனால் அவ்வழியே சென்று வருவோர் காலையிலும் மாலையிலும் இச் சோதனைச் சாவடிகளின் முன்பாக உள்ள வீதிகளில் பயணிகள் வாகனங்கள், பஸ் ஆகியவை நிறைந்து காணப்படுவதுடன் பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள் மற்றும் பயணிகள் மிகுந்த சிரமங்களையும் நேரதாமதங்களையும் அனுபவித்து வருகின்றார்கள்.

இதே நேரத்தில் தென்மராட்சிக்குச் செல்லும் மக்கள் செம்மணி வளைவில் உள்ள படையினரின் சோதனைச் சாவடியில் சோதனை செய்யப்பட்ட பின்னரே பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் தென்மராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகள் இங்கு சோதனையிடப்படுவது தற்தேபாது நிறுத்தப்பட்டு கைதடிப் பாலத்துக்கு அருகாமையில் வைத்தே படையினரால் சோதனையிடப்படுகிறார்கள். (அ-300)

# மரண அறிவித்தல்

## நீலயினார் முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை

(முன்னாள் கொழும்பு, தெமட்டகொட பிரபல வர்த்தகர்)



புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 3ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடா வில் வசித்து வந்தவருமான நீலயினார் முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை 09.10.2008 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு (இளையவர்) -நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் (அம்பலவர்) -தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் நாகம்மா (நல்லம்) அவர்களின் அன்புக் கணவரும், சீவரத்தினம் (ஓய்வுபெற்ற மாவட்ட உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தித் திணைக்களம் ), கனடாவில் வசித்து வருபவர்களான புஸ்பராணி, ரஞ்சிதராணி, பங்கயற்செல்வி, செல்வமலர் (முன்னாள் சங்கீத ஆசிரியை, யா/பெரியபுலம் ம.வி.), செல்வகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், லலிதாதேவி (இலங்கை), கனடாவில் வசித்து வருபவர்களான ஆர்.என். கனகலிங்கம் (முன்னாள் சங்கீத ஆசிரியர், யா/ இந்துக் கல்லூரி), எம்.கனகசபாபதி (அம்பிகாபதி பான்சி பலஸ்), எஸ்.பாலரத்தினம் (நல்லூரான்ஸ்), கே.மதுரநாயகம், B. சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, பொன்னம்மா, தியாகராசா (தெமட்டக்கொட வர்த்தகர்), பண்டிதர் ஆறுமுகம், டாக்டர் கிருஷ்ணபிள்ளை, நாகரத்தினம், லண்டனில் வசிக்கும் பாலசுந்தரம் (முன்னாள் கல்வி அதிகாரி)ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, காராளபிள்ளை (ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி) சுப்பிரமணியம் (தம்பிமுத்து- ஓய்வுபெற்ற அதிபர்), கனகரத்தினம் (சின்னத்துரை, ஓய்வுபெற்ற ஆசிரியர்), தருமலிங்கம் (வர்த்தகர்), கனகம்மா மற்றும் சின்னம்மா, மகேஸ்வரி, சிவஞானம் (கனடா), பண்டிதை புனிதவதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற அன்னம்மா, பராசக்தி, பொன்னையா, கனடாவில் வசிக்கும் புவனேஸ்வரியின் உடன்பிறவா சகோதரனும்,விப்ரப்பிரியா, உருத்திரப்பிரியா (ஆசிரியை, யா/கரம்பொன் சிறியபுஸ்ப ம.ம.வி.), விப்ரரூபா, உருத்திரகுமாரி,பிரஸன்னா, விஜி, கனடாவில் வசிக்கும் முரளி, பார்த்தீபன், பகீரதன், கார்த்திகா, மயூரன், கௌரி, அகிலன், சண்முகபிரியா, தாட்சாயினி, காயத்திரி, கார்முகி, சரவணா, சாருகி, மதுஷன்,நயனி ஆகியோரின் அன்புப் பேரனும், ஆரணன், சாருஜன், அனுராகன், பிரணவன், பிரணவி, ஷேஷன், பாரதி, ஆரணி, ஆரபி, அஸ்வினி, அம்பிகை, அபிநயா, பூஜா, ஹரிஸ், துவாரகா, லக்ஷா, அஸ்விதா, ஜஷானி ஆகியோரின் அன் புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.10.2008) செவ்வாய்க்கிழமை காலை Tronto, கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

370, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே.: 021 222 5870

தகவல்:
திருமதி லலிதாதேவி சீவரத்தினம்
(மருமகள்).

# திருட்டுத்தனமாக மணல் ஏற்றியவருக்கு பருத்தித்துறை நீதிமன்றால் 20 ஆயிரம் அபராதம்

மந்திகை, ஒக்.13

வல்லிபுரக் கடற்பிரதேசத்திலிருந்து 'ஹன்டர்' வாகனத்தில் திருட்டுத்தனமாக மணலைக் கடத்திச் சென்ற வாகனச் சாரதிக்கு பருத்துறை நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஹன்டர் வாகனச் சாரதி திருட்டுத் தனமாக மணலைக் கடத்திச் சென்ற போது பருத்தித்துறைப் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

பொலிஸார் சாரதியை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சம்பந்தப்பட்டவர் குற்றத்தினை.ஒப்புக்கொண்டதை அடுத்து திருட்டு மணலை பறிமுதல் செய்யுமாறு நீவான் உத்தரவிட்டார்.

அத்துடன் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் அதனைக் கட்டத் தவறின் 4 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (203-218)

## வெற்றிலைக்கேணியில் அறுவரை மீட்டதாக படைத்தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஒக்.13

யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி கடற்கரையோரத்தில் வழிதவறிவந்த இடம்பெயர்ந்த சிலரை படையினர் மீட்டுள்ளனர்.

படகொன்றில் பயணித்துக் கொண்டிருந்த இவர்களை நேற்று பிற்பகல் மீட்டதாக கடற்படைப் பேச்சாளர் வி.கே.பி.தசாநாயக்க தெரிவித்தார்.

வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரையே கடற்படையினர் மீட்டுள்ளனர்-

இவர்களை திருகோணமலை கடற்படை முகாமில் ஒப்படைத்ததாக கடற்படைப் பேச்சாளர் கூறினார். (1-ரி)



ஊரெழு கணேச வித்தியாசாலை பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும் கலைநிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியைப் படையினர் கைப்பற்றுவதற்கு 48 மணிநேரமே உள்ளது என்கிறது ஹெல உறுமய

## இந்திய நலனுக்காக போரை நிறுத்த முடியாது

கொழும்பு, ஒக்.13

படையினர் கிளிநொச்சியைக் கைப் பற்றுவதற்கு இன்னமும் 48 மணி நேரமே உள்ளது. இந்த நிலையில் இந்தியா அல்ல எந்தவொரு நாட்டினதும் அழுத்தத்திற்கு அடிபணிந்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தினை அரசு கைவிடக்கூடாது - என்று ஜாதிக ஹெல உறு மயவின் சர்வ தேச விவகாரங்களுக்கு பொறுப்பான செய லாளர் நரேந்திர குணதிலக தெரிவித் துள்ளார்.

கருணாநிதி, ஜெயலலிதா கூட்டணி, தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க வில்லை. தேர்தலுக்கான நாடகத்தையே அரங் கேற்றுகின்றனர். வைகோ கூட்டணி பிரபாக ரனின் தோல்வியைத் தாங்க முடியாது தவிக்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார் என கொழும்பிலிருந்து வெளிவரும் நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து நரேந்திர குணதிலக மேலும் கூறியவை வருமாறு-

இந்தியா சுதந்திரம் மற்றும் இறையாண் மையுடைய நாடு. அதேபோல் இலங் கையும் சுதந்திரம் மற்றும் இறையாண்மை கொண்ட நாடு. எமது அயல் நாட்டை நாம் மதிக்கின்றோம். ஆனால், அதற்காக மண் டியிட முடியாது. இலங்கையில் பயங்கரவா தப் பிரச்சினை தலைதூக்குவதற்கு இந்தி யாவே வழிவகுத்தது. இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி பயங்கரவாதிகளுக்கு ஆயுதப் பயிற்சிகளை வழங்கி இறுதியில் ஆயுதங் களுக்கே பலியானார்கள். இது பழைய கதை.

ஆனால், இன்று சார்க் நாடுகளின் முதன்மை நாடாக இந்தியா திகழ்கின்றது. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு ஆயுதங் களையும் பயிற்சிகளையும் வழங்கியது. ஆனால், இன்று தமிழகத்தில் ஏற்பட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு சார்பான போராட் டங்களால் நிலை தடுமாறிப் போயுள்ளது. காரணம் அடுத்த வருடம் அங்கு தேர்தல் இடம்பெறவுள்ளது.

எனவேதான் பயங்கரவாதத்திற்கு எதி ரான யுத்தத்தை நிறுத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுக்கின்றது. இந்திய அரசி யல் நன்மைகளுக்காக பயங்கரவாதத் திற்கு எதிரான போரை நிறுத்த முடியாது. இதனைச் சர்வகட்சி மாநாட்டின்போது ஜனாதிபதியிடம் தெரிவித்தோம். இலங் கைத் தமிழ் மக்களுக்காக கருணாநிதியும் ஜெயலலிதாவும் போராட்டம் நடத்த வில்லை. தேர்தலுக்காக தமிழக மக்களின் ஆதரவைப் பெறவே நாடகமாடுகின்றனர்.

வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழ் மக்களின் விடுதலை வீரன். ஒருபோதும் தோல்வியுறச்செய்ய முடியாதென்ற மாயையை வைகோ, நெடுமாறன், ராமதாஸ் போன் றோர் தமிழக மக்கள் மத்தியில் ஏற்படுத்தி அரசியல் நடத்தினர். இதனால் விடுத லைப் புலிகளுக்கு தமிழக மக்கள் மத்தி யில் ஆதரவு இருந்தது. இதனாலேயே ஆயு தக் கடத்தல்களை மேற்கொண்டனர். பல் வேறு உதவிகளை வழங்கினர்.

ஆனால், இன்னும் 48 மணித்தியா லங்களுக்குள் கிளிநொச்சி எமது படை யினர் வசம். பல முனைகளிலும் எமது படையினர் வெற்றி பெறுகின்றனர். புலி கள் தோல்வியின் விளிம்பிற்கே சென்று விட்டனர். எனவே, போராட்டங்களை தமிழகத்தில் ஆரம்பித்துள்ளனர் - என்றார்.

### மத்தியஸ்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு வருவதற்குத் தயார் என்ற உத்தர வாதத்தை இந்தியா பெற விரும்பினால் இது தொடர்பாக வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்க ளுடன் பேச்சுகளை மேற்கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது.

இந்தியாவுக்கும் விடுதலைப் புலி களுக்குமிடையே பாலமாக செயற்படத் தயாராகவுள்ளோம். விடுதலைப் புலிகளை இதற்கு சம்மதிக்க வைக்கமுடியுமென நாங்கள் நம்புகின்றோம்.'' - என அவர் தெரிவித்துள்ளார்.

''இலங்கை விவகாரத்தில் மத்தியஸ் தம் வகிக்க இந்தியா தயார் என்பது போலத் தோன்றுகின்றது. எனினும் இது தொடர் பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்னவென்பது தெரியவில்லை'' - என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் குறித்து புதுடில் லிக்குக் கருத்து வேறுபாடு இருந்தாலும், மோதலில் சிக்கியுள்ள பொதுமக்கள் குறித்து அங்கு பெருமளவு அனுதாபம் காணப்படு கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புதிய சமாதானப் பேச்சுகளே தற்போதைய தருணத்தின் தேவையாகவுள்ளன எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

''இது தொடர்பாக இலங்கை அரசிடம் இந்தியா வேண்டுகோள் விடுக்கவேண் டும். விடுதலைப் புலிகள் இதற்கு என்ன பதில் சொல்வார்கள் என்பது குறித்து அது கவலையடைய வேண்டியதில்லை. விடு தலைப் புலிகள் இதற்கு சாதகமாகப் பதி லளிப்பார்கள் என நான் கருதுகிறேன்.

''இலங்கையின் வடபகுதியில் தற் போது மேற்கொள்ளப்படும் இராணுவ நட வடிக்கை காரணமாகப் பொதுமக்களுக்கு பாரிய துயரங்களும், உணவு மற்றும் மருந் துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடுகளும் ஏற்பட்டுள்ளன'' என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசு, அரச சார்பற்ற அமைப் புகளை வெளியேறுமாறு உத்தரவிட்டுள் ளதால் நேரடியாகவோ அல்லது ஐக்கிய நாடுகளூடாகவோ உணவு, மருந்துப் பொருள்களை வழங்குவதே இந்தியா உட னடியாகச் செய்யக்கூடியது - என்றும் சிவாஜி லிங்கம் குறிப்பிட்டுள்ளார்.'' (அ-சி)

### வல்லிபுரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்தில் நேற்றும், இன்றும் இரவு நேர ஊரடங்கு நீக்கப்பட்டுள்ளது என பலாலி படைத்தலைமையகம் அறிவித் துள்ளது.

ஆலயத்தில் இன்று நடைபெறும் தேர் உற்சவத்தில் பக்தர்கள் பங்குபற்ற வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

### கொழும்புத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோவில் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணன் புவிதரன்(வயது - 30) மற்றும் அம்பாறை, போர்ட் கொலணி, சென்றல் வீதியைச் சேர்ந்த குடும்பஸ்தரான சபாபதிப்பிள்ளை சுதர்ஷன்(வயது - 30) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கிழக்கு மாகாண மக்கள் பொலிஸில் பதிவு செய்யும் தினத்தன்று இந்த இளைஞர் கள் மூவரும், விடு முறையின் நிமித்தம் தமது சொந்த இடத்திற்குச் சென்றி ருந்தனர்.

பின்னர் இவர்கள் கொழும்புக்குத் திரும்பி, தங்களுடைய பொலிஸ் பிரிவான மோத ரைப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பதிவை மேற்கொள்ளச் சென்றவேளை, பொலி ஸார் இவர்கள் மூவரையும் சந்தேகத்தில் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட மூன்று இளைஞர் களும் மோதரை மற்றும் மட்டக்குளி ஆகிய பொலிஸ் நிலையங்களில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருகின்றனர். (அ-சி)

### தமிழகத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து ஆராய் வதற்காகக் கூட்டியுள்ள சர்வகட்சி மாநாடு நாளைசென்னையில் நடைபெறஇருக்கையில்-

அங்கு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் காத்திரமான முடிவு ஒன்று எடுக்கப் படுவதற்கான தூண்டுதல் செயற்பாடாக -

அந்த மாநாட்டில் பங்குபற்றும் கட்சிக ளின் தலைவர்களை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்தித்து விளக் கமளிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டி ருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வார இறுதியில் சென்னையி லிருந்து கொழும்பு வந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. மாவை சேனாதிராஜா, வார இறு தியில் கொழும்பு வந்த கையோடே சென்னை திரும்பிவிட்டார்.

அவரும் சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரே மச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் தங்களுக்குள் இணைந்தும், தனித்தனியாகப் பிரிந்தும் தமிழகத் தலை வர்களைச் சந்தித்து விளக்கமளிக்கும் நடவடிக்கையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் நாடாளுமன்றக்குழு அங்கத்தவராக ஜெனிவாவில் நடை பெறும் ஒரு நிகழ்ச்சிக்காக அங்கு சென்றி ருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனும் ஜெனிவாவில் இருந்து சென்னை திரும்பி, மேற்படி விளக்கமளிக்கும் நட வடிக்கையில் இணைந்துகொள் வார் என எதிர்பார்க்கப்படு வதாகக் கூட்ட மைப்பு வட்டாரங் கள் தெரிவித்தன. (உ)

### குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதே வேளை நேற்று அதிகாலை ஒரு மணிக்குப் பின்னரே மின்சாரம் மீண்டும் விநியோகிக்கப்படலாம் என்று ஒரு தகவல் தெரிவித்தது. நள்ளிரவு 12 மணியளவில் கடும் மழை பெய்யத் தொடங்கியது. இச் செய்தி எழுதப்பட்ட வேளையிலும் அது தொடர்ந்தது. (அ-1)

### தமிழகத்தில் மீண்டும் ஓயாது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர். இந்தக் கருத்துக் கணிப்பில் தெரியவந்த முக்கிய தகவல்கள் வருமாறு -

* இலங்கை இராணுவத்துக்கு ஆயுதங்களையும் பயிற்சியையும் கொடுக்கும் இந்திய அரசிலிருந்து தி.மு.க. விலக வேண்டும்.

* விடுதலைப் புலிகள் இயக்கத் தலை வர் வே.பிரபாகரன் சுற்றி வளைக்கப்படும் நிலை ஏற்படுமானால், ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக இந்திய இராணுவம் இலங்கைக்குச் செல்லவேண்டும்.

* விடுதலைப் புலிகள் இயக்கம் என் பது ஈழத் தமிழர்களின் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடிவரும் ஒரு போராளி கள் இயக்கம். ஈழத் தமிழர்களின் ஒரே - உண்மையான பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான்.

* தமிழீழம் மலர்வதற்காகப் பணமும் பொருளும் தந்துவத் தயார்.

* இலங்கைப் பிரச்சினை, தமிழகத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதற்குள் நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும். (94 வீதமானோர்).

அந்த நாளேடு நடத்திய கருத்துக் கணிப் பின் முழு விவரமும் வருமாறு-

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான முழு அடைப்புப் போராட்டம் நடத்தவேண்டும் என்று 8 வீதமானோரும் -

ஈழத் தமிழர் அகதிகளுக்கு தமிழகம் அடைக்கலம் கொடுக்கவேண்டும் என்று 22 வீதமானோரும் -

இந்தப் பிரச்சினையில் எதுவும் செய் யக்கூடாது. அதற்கு நாம் ஆதரிக்கமாட்டோம் என்று 16 வீதமானோரும் -

ஊடகங்களைப் பொறுத்த வரைக் கும்தான் ஈழத் தமிழர் பிரச்சினையில் ஆர் வம். எமக்குப் போதுமான ஆர்வமில்லை என்று 14 வீதமானோரும் -

தமிழீழத்துக்கு நிதியும் பொருள் உதவி யும் வழங்க வேண்டும் என்று 40 வீதமா னோரும் வாக்களித்துள்ளனர்.

ஈழத் தமிழர் பிரச் சினைக்கு தமிழக அரசியல்வாதிகள் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு -

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக முழு அடைப்பு நடத்த வேண்டும் என்று 18 வீதமானோரும் -

வெற்றி பெறும்வரை சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் நடத்த வேண்டும் என்று 12 வீதமானோரும் வாக் களித்துள்ளனர்.

கூடுதல் வரி வசூலித்தால் நாம் மகிழ்ச் சியாகத் தருவோம் என்று 10 வீதமானோரும் -

இலங்கைப் படைத்தரப்புக்கு ஆயுதம் மற்றும் பயிற்சி வழங்கும் மத்திய அரசுட னான உறவை தி.மு.க. துண்டிக்க வேண் டும் என்று 34 வீதமானோரும் -

புலிகளை இலங்கை அரசு தோற்க டித்து பிரபாகரன் சுற்றிவளைக்கப்பட்ட பின்னர் ராஜீவ் வழக்கு விசாரணைக்காக பிரபாகரனை இந்தியாவுக்குக் கொண்டு வர வேண்டும் என நாம் கோரவேண்டும் என்று 6 வீதமானோரும் -

தமிழகத்தில் பிரபாகரனுக்கு அடைக்க லம் கொடுக்க வேண்டும் என்று 23 வீத மானோரும் -

ஐ.நா. தலையிட வலியுறுத்த வேண் டும் என்று 25 வீதமானோரும் வாக்களித் துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டுமா என்ற கேள்விக்கு -

நீக்க வேண்டும் என்று 51 வீதமானோரும் -

இப்போதைக்கு வேண்டாம் என்று 15 வீதமானோரும் -

எப்போதுமே நீக்கக்கூடாது என்று 8 வீதமானோரும் -

தெரியவில்லை - சொல்ல இயலவில்லை என்று 26 வீதமானோரும் வாக்களித்துள் ளனர்.

விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கம் என்று 12 வீதமானோரும் -

விடுதலைப் போராட்ட வீரர்கள் என்று 30 வீதமானோரும் -

தமிழர் பிரச்சி னைக்காகச் செயற்படு பவர்கள் என்று 22 வீதமானோரும் -

இலங்கைத் தமி ழர்களின் ஒரே - உண் மையான பிரதிநிதி கள் என்று 36 வீத மானோரும் வாக் களித்துள்ளனர் என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### கஞ்சிக்குடிச்சாறுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வம்மியடி விசேட அதிரடிப்படைத் தளத்துக்கு அருகில், நேற்றுப் பிற்பகல் 3.25 மணியளவில் வீதி ரோந்து நட வடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மீதே தமது அணி யினர் இத்தாக்குதலை நடத்தினர் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் இராணுவத்தினரும் விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டு சுற்றி வளைப் புத் தேடுதல் நடத்தப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரி விக்கின்றன. (சி)

### நல்லூர் பகுதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்கமாகவும் கல்வியங்காட்டுப் பகுதியிலும் இந்தச் சத்தங்கள் கேட்டதாக அந்தப் பகுதி களில் வசிக்கும் மக் கள் தெரிவித்தனர்.

எனினும் இது குறித்து உறுதியான தக வல் எதுவும் செய்தி எழுதப்படும் வரை தெரியவரவில்லை. (அ-1)

### பெண்ணின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டு விசாரணை நடத்தினர். அந்தப் படத்தில் உள்ள பெண், அமைச்சர் மைத் திரிபால சிறிசேன பயணம் செய்த வாக னத் தொடரணி மீது தாக்குதல் நடத்திய தற்கொலைக் குண்டுதாரி எனத் தாங்கள் சந்தேகிக்கின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது 10 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. வெள்ளவத்தை உட்புற வீதிக ளில் நடந்து சென்றோரிடம் இராணுவத் தினர் நடத்திய விசாரணைகளின்போதே இளைஞர்கள் 10 பேர் கைதுசெய்யப்பட்ட னர் என்று கூறப்பட்டது. (அ-சி)


**துளிர்கள் நிறுவன இடமாற்றம், வேலைவாய்ப்பு அறிவித்தல்**

* நிர்வாக உத்தியோகத்தர்/திட்ட அலுவலர்.(முழுநேர/பகுதிநேர)
* ஆங்கிலத்தில் எழுத வாசிக்கவும், உரையாடும் திறனும் மிக முக்கியம்.
* வயதெல்லை கிடையாது. சேவை மனப்பான்மையுள்ள ஆண்,பெண் இருபாலாரும் 20/10/2008 முன்பாக (முழுநேர/பகுதிநேர) என்று குறிப்பிட்டு விவரங்களை அனுப்பி வைக்கலாம்.

**புதிய முகவரி:**

தலைமையகம், "துளிர்கள்" [illegible] பயிற்சி நிலையம். [illegible] வீதி, [illegible] வலி.

கிளை "துளிர்கள்" உளசமூக கற்கை நெறியகம். 201/1, OLR அவனியூ, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(79203)

**அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க**

யாழ்., பேராதனை G.A.Q, B.A. I, BeA. II

இந்து நாகரிகம் மீட்டல் விரிவுரைகள் ஆரம்பம் 14.10.2008

பட்டப்படிப்புகள் கல்லூரி 57/18 [illegible] யாழ்ப்பாணம். (79201)

பொருளியல் N.B.கஜீதரன் Paper Class Tue, Thu 6.15-7.15 a.m ஆரம்பம்:14.10.2008 Tue 6.15 a.m NEC Clock Tower Road, Jaffna

வணிகக்கல்வி - 2008 Marking Scheme பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம் NEC மணிக்கூட்டு வீதி, யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலை.


[illegible] நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.10.2008 இல் [illegible] பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சை 2008 - மாதிரி வினாத்தாள்
General Certificate of Education (Ord.Level) Examination 2008 - Model Question Paper

| T | |
|---|---|
| 33 | I |

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் - II

ஒரு மணித்தியாலம்
One hour


பகுதி - A

**25.09.2008 வெளிவந்த வினாத்தாளின் தொடர்ச்சி......**

3) அ) இயற்கையில் Na எவ்வடிவில் காணப்படும்?
..........................................
ஆ) இதிலிருந்து Na வை பிரித்தெடுக்கும் முறை யாது?
..........................................
இ) ஆய்வுகூடத்தில் Na எவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும்?
..........................................
ஈ) இதற்கான காரணத்தை விளக்குக.
..........................................

4) அ) இயற்கையில் காணப்படும் இரும்புத்தாது ஒன்றின் பெயர் தருக.
..........................................
ஆ) இரும்பு உலையில் இரும்புப் பிரித்தெடுப்பின்போது நடைபெறும் தாக்கத்திற்கான சமன்பாட்டைத் தருக.
..........................................

04. ஒரு மீட்டர் நீளமான மெல்லிய கல்வனைசு இரும்புக் கம்பியால் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு சுருள் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் திருகாணி (Z), X முனை, 6 v மின்கலம் என்பன மின்சுற்றொன்றுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.




1) அ) ஆணி Z, X முனையில் இருந்து படிப்படியாக ¾ வரை கொண்டு செல்லும்போது அம்பியர் மானியின் வாசிப்பில் எவ்வாறான மாற்றத்தை அவதானிப்பீர்?
ஆ) இதன்படி கட்டியெழுப்பப்படும் கருதுகோள் யாது?
2) ஆணியின் ஒரு நிலையில் அம்பியர் மானியில் வாசிப்பு 2 A ஆகும். படத்திலுள்ள தரவுகளுக்கு அமைய இச்சந்தர்ப்பத்தில் கம்பியின் தடையைக் கணிக்குக.
3) அ) சுற்றில் B குறிக்கப்பட்ட XYZ தொடர்புக்குப் பதிலாக பயன்படுத்தக் கூடிய மின் உபகரணத்தின் பெயரைத் தருக.
ஆ) இவ் உபகரணத்தை B ஸ்தானத்தில் இணைத்து குறியீடுகளைக் கொண்டு சுற்று வரிப்படம் வரைக.
4) சுற்று வரிப்படத்தில் மின்குமிழை அகற்றிவிட்டு Z திருகாணியை Y முனையில் வைத்து, 7 நிமிடங்களுக்கு மின்னோட்டத்தைச் செலுத்தும்போது கம்பியின் வெப்பநிலை 3600 J ஆகுமெனில், முழுக் கம்பியின் தடையைக் கணிக்குக.

பகுதி A - அ


01. பெற்றோர்களிடம் மறைந்து காணப்படும் சில இயல்புகள், அவர்களின் பிள்ளைகளில் வெளிப்படும். இவ்வாறு பரம்பரை நோய்களும் பிள்ளைகளிடம் வெளிக்காட்டப்படலாம். செய்திப்பத்திரிகையில் வெளிவந்த இவ் விளம்பரம் மேலும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

**வெள்ளைப் பெற்றோருக்கு கறுப்பு பிள்ளை**

**Born Black to White Parents**

1) தோல் வர்ணத்திற்கான ஆட்சியுடைய இயல்பு B ஆகும், பின்னடைவான இயல்பு b ஆகும்.
அ) கூற்றுக்கமைய வெள்ளை நிறப் பெற்றோர்களின் தலைமுறையுரிமை உடற்பொருள் இயல்பைத் தருக.
ஆ) மேற்படி நிகழ்வை பிறப்புரிமை அட்டவணையில் காட்டுக.
2) தூயபட்டாணித் தாவரத்தைக் கொண்டு நடத்தப்பட்ட பரிசோதனையில், $F_2$ சந்ததியில் பச்சை நிற வித்தைக் கொண்ட 438 தாவரங்களும், மஞ்சள் நிற வித்தைக்கொண்ட 152 தாவரங்களும் பெறப்பட்டன.
அ) தூய தாவரம் எனும் பதத்தை விளக்குக.
ஆ) பரிசோதனை முடிவுகளின்படி கருத்திற்கொண்ட இரண்டு புள்ளிகளில் ஆட்சியுடையது எது?
இ) $F_2$ சந்ததியில் விகிதத்தைத் விளக்குக.
ஈ) சோதனைக்காக தெரிவு செய்த தூய பட்டாணித் தாவரங்களின் உடற்பொருளியல்பை எழுதுக.
3) தூய தாவரம் சிவப்பு நிற (R), தூய தாவரம் வெள்ளை நிற (r) அந்தி மந்தாரைத் தாவரத்தைக் கலப்புப் பிறப்பாக்கம் செய்தபோது எச்சங்கள் மென்சிவப்பு பூக்கள் தோன்றின.
அ) இந்த நிகழ்வு பிறப்புரிமையியலில் எப்பெயரால் அழைக்கப்படும்?
ஆ) மென் சிவப்பு பூக்களைக் கொண்ட தாவரங்களைக்கலப்புப் பிறப்பாக்கம் செய்யும்போது கிடைக்கும் எச்சங்களை நிறமூர்த்த அட்டவணையில் காட்டுக.
4) பரம்பரை நோயான குருதியுறையா நோய்க்காரணியான (h) பின்னடைவான நிலையில் X நிற மூர்த்தங்களில் மாத்திரம் காணப்படும்.
அ) நோய்காவியான பெண்ணினதும், சுகதேகியான ஆணினதும் பரம்பரையலகைத் தனித்தனியே எழுதுக.
ஆ) மேற்படி இருவருக்கும் பிறக்கும் பிள்ளை தொடர்பாக நீர் யாது கூறுவீர்?

02. இரு பெண்களின் குருதியில் 28 நாட்களில் பெண் இனப்பெருக்க ஓமோன்களின் செறிவு மாறும் விதம் வரைபில் காட்டப்பட்டுள்ளன.
1) அ) குருதியில் காணப்படும் 2 பெண் இனப்பெருக்க ஓமோன்களைத் தருக.
ஆ) இவற்றைச் சுரக்கும் சுரப்பி எது?
இ) பெண் இனப்பெருக்க ஓமோன்களைச் சுரக்கும் சுரப்பியைத் தூண்டும் ஓமோன் வகை ஒன்றைக் குறிப்பிட்டு, இதைச் சுரக்கும் சுரப்பியையும் தருக.




2) அ) வரைபில் X எனக் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பம் யாது?
ஆ) பெண் B இன் ஓமோனில் ஏற்பட்ட மாற்றத்திற்கான காரணம் யாது?
இ) பெண் A இன் ஓமோன்களின் அளவிற்கேற்ப கர்ப்பப் பையில் ஏற்படும் மாற்றம் யாது?
ஈ) பின்வரும் பதங்களை விளக்குக.
a) மாதவிடாய். b) உட்பதிதல்

3) அ) சூலகத்திலிருந்து எந்த இடத்திற்கு முட்டை விடுவிக்கப்படுகின்றது?
ஆ) பலோப்பியன் குழாயின் அமைப்பில் காணப்படும் இரண்டு விசேட அமைப்புகளைக் குறிப்பிடுக.
இ) பலோப்பியன் குழாயின் முக்கிய செயற்பாடு யாது?


4) வைத்தியசாலையின் ஒரு பிரிவில் உள்ள சுவர்ப் பலகையில் பின்வரும் குறிப்புக் காணப்பட்டது.

**முன்யோசனையும், வகைகூறலும், பொறுப்பும் கொண்ட நடத்தையோடு சிறந்த ஒழுக்க நெறியைப் பின்பற்றுபவர்கள் பாலியல் ரீதியான பிரச்சினைகளிலிருந்து தன்னைக் காத்துக்கொள்வர்.**

அ) பாலியல் ரீதியான நோய்கள் என்றால் என்ன?
ஆ) நீங்கள் அறிந்த ஒரு பாலியல் நோய் தொடர்பாக,
a) நோயின் பெயர்
b) நோயை ஏற்படுத்தும் நுண்ணங்கி வகையும், அதன் பெயரும்
c) நோய் அறிகுறி
என்பவற்றைக் குறிப்பிடுக.

பகுதி B - ஆ

03. கல்சியத்தின் சார் மூலக்கூற்றுத் திணிவு 40 ஆகும்.
1) அ) சார் மூலக்கூறறுத் திணிவு எனும் பதத்தை நீர் எவ்வாறு விளங்கிக் கொண்டுள்ளீர்?
ஆ) கல்சியம் அணுவின் திணிவைத் தருக.
2) 20 g கல்சியத்தில் அடங்கியுள்ள,
அ) மூல் யாது? ஆ) அணு எண்ணிக்கை யாது?
3) இரசாயனத் தாக்கத்தின்போது, தாக்கம் நடைபெறும் காலத்திற்கேற்பவே விளைவு தோன்றும். தாக்க வேகத்தில் செல்வாக்கு செலுத்தும் இரண்டு காரணிகள் தருக.
4) தாக்க வேகத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணியைப் பரிசோதிப்பதற்காக மாணவன் ஒருவன் கொண்டிஸ் கரைசலை சல்பூரிக் அமிலத்துடன் சேர்த்து சம அளவான இரண்டு Fe ஆணிகளை இட்டான். அதில் ஒரு சோதனைக் குழாயின் வெப்பநிலையை 80°C க்கு வெப்பமேற்றினான்.




அ) அவதானிப்பு யாது?
ஆ) இப் பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்ட விஞ்ஞான உண்மை யாது?
இ) சோதனைக் குழாய்களில் மாற்றமடையாமல் பேணவேண்டிய இரண்டு காரணிகள் தருக.
ஈ) தாக்கத்தோடு தொடர்பான சமப்படுத்திய தாக்கச் சமன்பாட்டைத் தருக.

04. அணுக்கள் தொடர்பாக தரப்பட்ட விவரங்களைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

| மூலகம் | P | Q | R | S | T | U |
|---|---|---|---|---|---|---|
| புரோத்தன் எ/கை | 6 | 12 | - | 18 | 19 | - |
| நியூத்திரன் எ/கை | - | - | 18 | 22 | 20 | 20 |
| அணுத்திணிவு | 12 | 24 | 35 | - | - | 40 |

1) அ) அட்டவணையைப் பூரணப்படுத்துக.
ஆ) நான்காம் ஆவர்த்தனத்துக்குரிய மூலகங்கள் யாவை?
இ) சடத்துவ நிலையிலுள்ள மூலகம் யாது? சடத்துவ நிலைக்கான காரணம், இயற்கையில் காணப்படும் நிலை என்பவற்றைத் தருக.

2) அ) R,U என்பவற்றுக்கிடையில் உண்டாகும் சேர்வையின் சூத்திரத்தை எழுதுக.
ஆ) இச் சேர்வை எவ்வகையான பிணைப்பாகும்?
இ) இப் பிணைப்புச் சேர்வைகளின் இரு பண்புகளைத் தருக.


3) அ) அட்டவணையில் தரப்பட்ட P மூலகத்தின் அணுவெண்ணையும், திணிவெண்ணையும் கொண்ட நியமக் குறியீட்டை எழுதுக.
ஆ) மூலகம் P ஆனது ஒட்சிசனுடன் தாக்கம் புரிந்து உருவாகும் சேர்வையின் சூத்திரத்தை எழுதுக.
இ) மேற்கூறிய சேர்வையின் ஒரு மூலிலுள்ள அணுக்களின் எண்ணிக்கை யாது?
ஈ) இச் சேர்வையின் 11g எத்தனை மூல் ஆகும்?
(O= 16, P ( நியமக் குறியீடு அல்ல) = 12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகுதி C - ஈ

05. படத்திலுள்ளவாறு அமைக்கப்பட்ட அமைப்பின் ஆளியை மூடும்போது ஒரு சோதனைக் குழாயில் வாயு சேர்வதை அவதானிக்கலாம்.





1) அ) எக் குழாயில் வாயு சேர்ந்தது?
ஆ) அவ்வாயுவை இனங்காண ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடு யாது?
இ) பெறக்கூடிய வேறு இரு அவதானிப்புகளைத் தருக.

2) $CuSo_{4 (aq)}$ ஐ மின்பகு பொருளாகக் கொண்ட இவ்வமைப்பில்,
அ) அனோட்டு, கதோட்டு என்பவற்றின் செயற்பாடுகளைத் தருக. (சமன்பாடு மூலம்)
ஆ) மின்பகு பொருளில் உள்ள அயன் வகைகளைத் தருக.

3) மின்பகு பொருளாக நீரைப் பயன்படுத்தினால் ........ ,
அ) இதன்போது அமைப்பின் அவதானிப்பைத் தருக.
ஆ) கதோட்டு மின்வாயில் ஏற்படும் தாக்கத்தைச் சமன்பாட்டில் காட்டுக.

4) இரும்பாணிக்கு செப்பு முலாமிடுவதற்காக இந்த அமைப்பைப் பயன் படுத்தும்போது,
அ) ஏற்படும் இரண்டு மாற்றங்களைத் தருக.
ஆ) இதன்போது கதோட்டில் நடைபெறும் தாக்கத்தைச் சமன்பாட்டில் காட்டுக.
இ) உலோக முலாமிடும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

06. A) படத்தில் மின் உபகரணம் ஒன்றிலிருந்து மூவூசிச் செருகிக்குச் செல்லும் கம்பிகளின் இணைப்பு காட்டப்பட்டுள்ளது.





1) அ) உபகரணத்தில் கம்பி B மூவூசிச் செருகியின் எம் முடிவிடத்தில் இணைக்கப்பட்டுள்ளது?
ஆ) B கம்பியின் செயற்பாடு யாது?

2) அ) மூவூசிச் செருகியின் X முடிவிடத்தில் இணைக்கப்படும் கம்பியின் நிறத்தைத் தருக.
ஆ) X முடிவிடத்தில் இணைக்கப்படும் கம்பியின் முடிவிடம் (C) உலோக உறையில் தொடர்புறின் வீட்டு மின்சுற்றில் நடைபெறும் செயற்பாட்டை விவரிக்குக.

3) அ) மூவூசிச் செருகியின் வீட்டு மின்சுற்றோடு இணைப்பதற்குப் பயன் படும் பகுதி யாது?
ஆ) இச் சுற்றின் வடிவத்தின் பெயரைத் தருக.

4) அ) வீட்டு மின்சுற்றின் மின்சக்தியின் அளவு அள்க்கப்படும் மின் அலகு யாது?
ஆ) தரப்பட்டுள்ள மின் உபகரணம் (750W), இரண்டு மணித்தியாலங்கள் பயன்படுத்தப்படும் ஆயின், செலவிடப்பட்ட மின் அலகுகளின் எண்ணிக்கையைக் காண்க.

B) தனித்தனியான இரண்டு சுற்றுக்களைக்கொண்ட மென்னிரும்பு அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது.




1) அ) ஆளியை அழுத்தும்போது எதை அவதானிப்பீர்?
ஆ) சுருளுக்குப் பயன்படுத்தும் கம்பி கொண்டுள்ள பண்புகளில் ஒன்றைத் தருக.
இ) இவ்வமைப்பில் உருக்கு பயன்படுத்தப்படாமல் மெல்லிரும்பு பயன்படுத்தப்பட்டமைக்கான காரணத்தை விளக்குக.

2) அ) இம்மாதிரி அமைப்பை நவீனப்படுத்தி உருவாக்கப்பட்ட உபகரணம் யாது?
ஆ) இவ் உபகரணத்தில் A,B சுற்றுக்கள் எப்பெயரால் அழைக்கப்படும்?
இ) கம்பிச்சுருள் A இன் முறுக்குகளின் எண்ணிக்கை 1000 உம், கம்பிச் சுருள் B இன் முறுக்குகளின் எண்ணிக்கை 400 உம் கொண்டிருப்பின் சுற்று A யினூடாகச் செல்லும் மின்னோட்டத்தின் மின்னமுத்த வேறுபாடு 230V எனில் B சுற்றினூடாகச் செல்லும் தூண்டல் மின்னியக்க விசைப் பெறுமானத்தைக் காண்க.

### விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்-II
### A பிரிவு

01. 1) அ) குழிவு. ஆ) உருச் சிறுத்த, பக்க நேர்மாறலோடு.




2) அ) விழித்திரையில்.
ஆ) கோல் கலம்.




இ) a) நீள்ப்பார்வை

3) அ) x - காபனேற்று/ பைகாபனேற்று $Na_2CO_3$ / $CaCO_3$ / $NaHCO_3$ / $CaHCO_3$
y - காரம் KOH / Na Mg $(OH_2)$ Z- உலோகம் Mg / Al/ Zn
ஆ) $Ca(OH)_2$ / கல்சியம் ஐதரொட்சைட்டு இ) $NaOH + HCl \rightarrow NaCl + H_2O$

02. 1) a) ஊடுபுகவிடும் தன்மையை அகற்ற. b) சமநிலையில் வைப்பதற்கு.
2) அ) நீர் மட்டம் கீழிறங்கிக் காணப்படும்.
ஆ) செறிவான உப்புக்கரைசலுக்கு கிழங்கினுள் இருந்து நீர் செல்லல்.
இ) பங்கூடு புகவிடும் மென்சவ்வாக
ஈ) இயற்கை - முட்டை மென்சவ்வு, பப்பாசிக்குழாயின் அடிப்பகுதி, செயற்கை - செலோபேன் தாள்.
3) அ) பங்கு ஊடு புகவிடும் மென்சவ்வினூடாக நீரின் செறிவு கூடிய இடத்திலிருந்து, நீரின் செறிவு குறைந்த இடத்திற்கு நீர் மூலக்கூறுகள் அசைதல்.
ஆ) வேர் மயிர்கள் ஊடாக மண்ணிலுள்ள நீர் உட்செல்லல்.
இ) முறை - உயிர்ப்பான கொண்டு செல்லல், உதாரணம் - வேர்மயிர்களில் கனிப்பொருள் அயன்கள் அகத்துறிஞ்சல்.
4) அ) திணிவுப் பாய்ச்சல். ஆ) வேரமுக்கம், ஆவியுயிர்ப்பு இழுவிசை.

03. 1) அ) Mg துண்டு இட்ட குழாயில்/ 3 ஆம் குழாயில்.
ஆ) Cu குழாயில்/ 2 குழாயில்
இ) நான்கு உலோகங்களினதும் தாக்குதிறன் பலவகை எனவும், தாக்குதிறனுக்கேற்ப வரிசைப்படுத்தின் முறையே Cu, Fe, Zn, Mg எனவும் காணலாம்.
2) அ) ஒட்சியேற்றத்தின் மூலம்/ உயர்வெப்பநிலையில் செப்பு ஒட்சைட்டை வெப்பப்படுத்துவதும், ஒட்சியேற்றலும்
ஆ) காபன் கரியின் துளையினுள் PbO ஐ இட்டு ஊதுகுழாய் மூலம் பன்சன் சுடரை துளையினுள் செலுத்தல்.
3) அ) குளோரைட்டாக/ NaCl. ஆ) மின்பகுப்பு மூலம்
இ) பரபின் மெழுகில்.
ஈ) Na கூடிய தாக்கத்திறன் கூடிய உலோகம். மேலும் நீருடனும், வளியுடனும் வீரியமாகத் தாக்கம்புரியும். எனவே வளியோடு, நீரோடு தொடர்புறா வண்ணம் பரபின் மெழுகில் களஞ்சியப் படுத்தப் படும்.
4) அ) ஏமறைற்று/ மக்னறைற்று/ லிமோனைற்று/ ஸ்பெனிக் லோபஸ்
ஆ) $Fe_2O_3 + 3CO \rightarrow 2Fe + 3CO_2$


04. 1) அ) வாசிப்பு குறையும்.
ஆ) தடை அதிகரிக்கும்போது சுற்றினுள் செல்லும் மின்னோட்டத்தின் அளவு குறையும் / கம்பியின் நீளம் அதிகரிக்கும்போது மின்னோட்டம் செல்வதைத் தடைசெய்யும். (தடை அதிகரிக்கும்)
2) $V = IR$, $R = V/I = 6V/2A = 3\Omega$
3) அ) மாறுந்தடை ஆ)




4) $E = (V^2/R)t$, $3600J = (6^2V \times 7 \times 60S)/R = 4.2\,\Omega$


### B பிரிவு
### பகுதி - அ

01. 1) அ) Bb ஆ) B b x Bb புணரிகள்.
2) அ) பல பரம்பரைகளில் மாறாமற் காணப்படும் இயல்புகளைக்கொண்ட தாவரம்.





ஆ) பச்சைநிற வித்து.
இ) பச்சைநிற வித்து-3, மஞ்சள்நிற வித்து-1
ஈ) பச்சைநிற வித்து - GG,
மஞ்சள்நிற வித்து - g g

3) அ) நிறைவில் ஆட்சி ஆ) Rr x Rr புணரிகள்




4) அ) நோய்க்காவி பெண் சுகதேகி ஆண்
ஆ)




02. 1) அ) ஈஸ்ட்ரஜன், புரோஜெஸ்ட்ரோன். ஆ) சூலகம்.
இ) FSH / LH- முற்பக்கக் கபச்சுரப்பி.
2) அ) சூல்கொள்ளும் சந்தர்ப்பம்.
ஆ) முட்டை கருக்கட்டப்படாததால் முளையம் உருவானதன் பின்னர் ஓமோன்மட்டம் குறைந்துள்ளது.
இ) கருக்கட்டிய சூலான நுகம் கருப்பை அகத்தோலில் பதிதல், உட்பதிப்பின் பின் முளையத்தைச் சூழ முளைய மென்சவ்வுகளை உருவாக்கி கருப்பையுடன் மேலும் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும்.
ஈ) a) மாதவிடாய் சூல் கருக்கட்டப்படாத சந்தர்ப்பத்தில் கரு, கருப்பை அகத்தோல், அகத்தோல் இழையங்கள் என்பன சிதைந்து குருதியோடு யோனிவழியாக வெளியேறல்.
b) உட்பதிதல் - கருக்கட்டிய சூலான நுகம் கருப்பை அகத்தோலில் பதிதல்.
3) அ) சூலகத்தின் மேற்பட்டையில்.
ஆ) புனல்வடிவ முடிவிடம், மயிர்கள்போன்ற அமைப்பு காணப்படல்.
இ) சூல் கருக்கட்டப்படல்.
4) அ) இரு நபர்களுக்கிடையில் நிலவும் இலிங்கத் தொடர்புகளினால் ஒரு நபரிலிருந்து இன்னொருநபருக்குத் தொற்றக்கூடிய நோய்.
ஆ)

| நோயின் பெயர் | நுண்ணங்கி/ வகை | நோய் அறிகுறி |
|---|---|---|
| சிபிலிஸ் | பக்றீரியா, ரிபனிமர் பலிடியம் | வலியற்ற கொப்புளங்கள்/ தொண்டை வேதனை, காய்ச்சல். |
| கொனோரியா | பக்றீரியா, கொனோரியா கொக்கஸ் | இலிங்க அங்கங்களைச்சூழ சுரப்பு வெளிப் படல் / நமைச்சல் / சிறுநீர் தளைப்படுதல். |
| 'ஹேப்ஸ் | வைரஸ், ஹேப்ஸ் சிம்பிலெக்ஸ் | வலியுடனான கொப்புளங்கள்/ நரம்புத் தொகுதி பாதிப்பு. |
| ★ எய்ட்ஸ் | HIV வைரஸ் | பெருமளவு களைப்பு, வயிற்றோட்டம், காய்ச்சல், உடல் நிறை குறைவு, இருமல். |

(இந்த வினாத்தாளின் தொடர்ச்சி இனியும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org